| Miss.Eliyas Carolina | Parkestate, Kandapola | Cp/N/Nanuoya T.M.V Nanuoya |
| Miss.Sharanya Michael | Teachers's Quarters, Liddesdale T.V, Halgranoya | Cp/Hk/Mooloya T.V Hewaheta |
| Mr.Ramar Muralitharan | Erroll Division, Hatton | Cp/Hz/Annfield T.M.V Dickoya |
| Mr. Arockiyasamy Singarayar | Lynsted Lower Division, Bogawantalawa | Cp/Hz/Mottingham T.V Maskeliya |
| Mr.Gnana Arokiyam Sylvester | North cove, Loinorn, Bogawantalawa | Cp/Hz/Bloom Field T.M.V Maskeliya |
| Miss.R.Vanisri | Elston Estate (L.D) Puwalepitiya | Cp/N/Dessford T.M.V Nanuoya |
| Mr.Jacob Lidiyal Glory | 3/7 Nanuoya Road, Kelegalla, Nuwara Eliya | N/Methodist College Kandapola Nuwara Eliya |
| Miss.Thanagarajh Nirmaladevi | B-04 School Road, Court Lodge, Kandapola | N/Methodist College Kandapola Nuwara Eliya |
| Mrs.Neerijah Laxmanatheva | 16/1 Singing Fish Road, Batticaloa | Bt/Hindu College Batticaloa |
| Mrs.Vathani Nithijananthan | Badulla Road Chenkalady | Bt/Ilupadichchenai Amphal Vid Batticaloa |
| Miss.P.Thiyalini | Lake Road Murakkadanvhenai | Bt/Vantharumoolai M.M.V Sittandy |
| Mrs.R.Thevakumary | Glasgow Estate Agrapatana | Cp/n/Marvia T.M.V Lindula |
| Mrs.P.Violet | Faithlea Division Patana | Cp/N/ Patana T.V Kotagala |
| Mrs.S.Monica | 27 Dickiriya Road Matela | Cp/Hk/Vikneswara T.V Hewaheta |
| Mrs.N.Rosalin Mary | Elbedde U.D Bogawandalawa | Cp/Hz/St.Mary's C.C Bogawandalawa |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Non Academic Staff

| Academic Staff | Designation | Permanent/Temporary Address |
|---|---|---|
| Mrs.N.Pradeepan | Management Assistant | 20/1 Amman Road, Kantharmadam Jaffna |
| Mr.R.Srikanthan | Watcher | Avarankal South, Puttur |
| Mr.N.Patkunanathan | Watcher | Kokuvil East, Kokuvil |
| Mr.S.Thangavelu | School Laborer | Idaikkadu Achchuvely |
| Mr.N.Aurumugasamyniyanar | Garden Laborer | Vadaliadaippu Pandatharipu |
| Mr.V.Thayalasivam | School Laborer | Sivan Kovilady, Vaddu North Vaddukoddai |
| Mr.S.Arumainayakam | Sanitary Laborer | Kalasalai Road, Thirunalvely |
| Mr.S.Vijayaruban | Sanitary Laborer | Kalasalai Road, Thirunalvely |
| Mr.P.Mauran | He Has Transferred to Another Place Because of his Promotion | |
| Mr.Pradeeban | He Has Transferred to Another Place Because of his Promotion | |
| Mr.S.Atchuthan | He Has Transferrd to Another Place | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Sitting L-R :** Mrs.I.Ramachandra, Mr.S.Gunaseelan, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mr.K.Hariharasakthy, Mr.N.Manoranjithan,

**Standing L-R :** Mr.S.Sebastion,Miss.J.Sonali,Mr.A.Alocxier,Mr.R.Muralitharan,Mr.A.Alexsander,Mrs.S.Thomas,Mrs.W.Jesintha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




***Sitting L-R:*** *W.R.Leo, Mrs.I.Ramachandra, Mr.S.Gunaseelan, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mr.K.Hariharasakthy, Mr.N.Manoranjithan, R.Muralitharan*

***Standing L-R:*** *Alexsander, P.Edna, S.Monica, S.Lavanya, P.Niroshini, M.Leela, R.Roseleema, J.Sonali, N.Malarveni, K.Joy, A.Priya, B.Edward, S.Thomas, S.Surejini, S.Kamalini, R.Thavakumari, P.Ena, A.Alocxier*




***Sitting L-R:*** *Mrs.I.Ramachandra, Mr.S.Gunaseelan, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mr.K.Hariharasakthy, Mr.N.Manoranjithan*

***Standing L-R:*** *Mr.A.Singarayar, Mr.R.Muralitharan, Miss.M.Sharaniya, Mr.D.Movin, Mrs.S.Vanisri, Mr.G.Sylvester, Mr.M.Benedict,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
அமலப்பூ மேரிமொரிஷன் றொக்

## கலாசாலை நோக்கி......

பயிற்றப்படாத ஆசிரியர்கள்-என
நிதமும் பலர் தூற்ற
ஆயிரம் கனவுகளோடு
பயிற்றப்பட
பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு
சொந்தங்களை விட்டு
உள குமுறல்களோடு இங்கு வர
வெப்பம் உடலை வருத்த
இருக்க இடம் தேடி
அலைந்த நாட்கள் பல
கிடைத்தது ஓரிடம்
நிதமும் உள வேதனைகளோடு
கலாசாலை நோக்கி
கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டவர்களாய்
தாகத்தை தணிக்க
தண்ணீரும் பழக்கமின்றி
கஷ்டங்கள் மனதை வாட்ட
பாட நெறியை தொடர
முயற்சிகள் ஆயிரம்
கூடி விளையாட மைதானமின்றி
அறிவை வளர்க்க நூலகமின்றி
சிறிய கட்டடத்திற்குள் எம் பாடநெறி
சிறப்பாய் தொடர
நல் வழிப்படுத்தலுக்கு எம் அதிபர்
சிந்தனைக்கு சிறந்த விரிவுரையாளர்கள்
எதிர்கால சமுதாயத்தின் வித்துக்களை
விருட்சமாய் வளர்க்க
வளமாக எம்மை வித்திட்ட
எம் கலாசாலையே
வானளவு உயர வாழ்த்துகிறேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
யூடி ஜெயகௌரி காந்தராஜா

# என்னைக் கவர்ந்த "புனிதர்"

இயேசு கடவுளின் மகனாகப் பிறந்தார். இவரோ மனிதரின் மகனாகப் பிறந்தார். இயேசு எருசலேம் நகரில் பிறந்தார். இவரோ தர்சு நகரில் பிறந்தார் இயேசு யூதர் இவர் யூதரும் உரோமக் குடிமகனும் ஆவார் இயேசுவைப் போன்று சிறுவயது முதல் ஞானத்திலும், புத்தியிலும் வளர்ந்தார். இயேசுவால் மனம் மாற்றப் பட்டார். இயேசுவைப் போல் பல கஷ்டங்களைச் சுமந்தவர் இயேசு பாமர மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் தனது (போதனை) நற் செய்தியை அறிவித்தார். அதே போல் இவரும் பாமர மக்களும் அறியக் கூடிய வகையிலும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற வகையிலும் மக்களுக்கு நற் செய்தியை அறிவித்தார்.

இவர் சிறந்த எழுத்தாற்றல் கொண்டவர். தானே தனது கைப்பட பில மோனுக்கு சிறையிலிருக்கும் போதே அறிவுரைக் கடிதத்தை எழுதினார். பல திருச்சபைகள் வளர காரணமானவர். அதாவது மக்களுக்கு நல் அறிவுரை களையும் வழிகாட்டல்களையும், நன்றி களையும் கூறியுள்ளார். இயேசு அனுபவித்த துன்பங்களைத் தானும் அனுபவித்தார். "நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே" (பிலிப்பியர் 1:21) எனக் கூறியவர். இயேசுவைப் போன்று செய்யாத குற்றத் திற்காக தண்டனையை அனுபவித்து "கிறிஸ்துவுக்காகவே தனது உயிரைக் கொடுத்தார். உறுதியான விசுவாசம் கொண்டவர். இவர் மேற் கொண்ட மூன்று பயணங்கள் ஊடாக "உலகின் கடைசி எல்லை வரை நற்செய்தி அறிவித்தார்"

"பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறும்" என்ற வாக்கிற்கேற்ப இவரின் புகழிற்குக் காரணம் கிறிஸ்துவோடு அவருக்கிருந்த ஆன்மீக உறவு எனலாம். அவரின் புகழைக் கூற எனக்கு வார்த்தையே இல்லை. கிறிஸ்தவ தசாப்தத்தின் முதலாம் நூற்றாண்டில் மட்டுமல்ல மூவாயிரம் ஆண்டின் தொடக்கத்திலும் அவரின் வாழ்வும், சிந்தனைகளும் உலகையே தலை கீழாக மாற்றக் கூடிய அளவுக்கு தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன உலகில் ஏராளமான நூல்கள் இவரைப் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன என்பதும் குறிப்பிடத் தக்கது.

"கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி இவர். இவர் யார்?

"அவரே புனித பவுல்" அவரே என்னைக் கவர்ந்த புனிதரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
மேரி கொலஸ்ரா யோகரத்தினம்

# மொழியும் சிந்தனையும் நோக்கிய கண்ணோட்டம்....

மனிதன் ஏனைய விலங்குகளிலிருந்து வேறுபடும் பிரதான அம்சங்களாக மொழி, சிந்தனை. பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பவற்றை குறிப்பிட முடியும். ஏனைய விலங்குகளுக்கு மொழியை பிரயோகித்தல், விளக்குதல், மொழியைப் பயன்படுத்தல், சிந்திக்கும் ஆற்றல் இல்லை. அதனால் மனிதனிடம் சிந்தனையும் மொழியும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

மனிதனுக்கு சிந்திக்கும் பிரதான ஊடகமாக மொழியே விளங்குகின்றது. விலங்குகளிடம் தமது தகவல்களை பரிமாறிக் கொள்ளும் திறன் இருந்தாலும் அவை குறுகியதாகவே காணப்படுகிறது. மனிதனுக்கு தகவல் ஊடகமாகவும் தகவல்களை களஞ்சியப்படுத்துவதாகவும் மொழி அமைந்துள்ளது. இதனூடாக சிந்திக்கும் ஆற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் என்பவற்றிற்கு மொழியே மூலகாரணமாகும்.

மொழியானது குறியீடுகளை பயன்படுத்தியே தோற்றம் பெற்றது. இவையே பொருட்கள், கருத்துக்கள் உணர்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மொழி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட பிறப்பாகும் சத்தங்களினதும் குறியீடுக ளினதும் இந்த ஒலி குறியீடுகளை வைத்துக் கொண்டு கதைப்பது மாத்திரமன்றி சிந்திக்கின்றான். இதனால் மொழியும் சிந்தனையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது "மனிதனை வழிநடத்தும் கருவி சிந்தனையே ஆகும்" என ஜெறோம் புறூனர் என்ற உளவியலாளர் கூறியுள்ளர்.

தனது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு மொழியின் கருவியாக சிந்தனை அமைந்துள்ளது. மொழிபல பணிகளை செய்கின்றது. என ஸான்கே லெக்னர் கூறுகின்றார். இதனைவிட லோபர்ஸ் எக்கீஸ் என்பவர் மொழியின் பணிகளை

1) வெளியீட்டுப் பணி
2) சமிக்ஞைப் பணி
3) விளக்கல் பணி
4) நியாயித்தல் பணி

என நான்காக வகைப்படுத்தியுள்ளார்.

மனிதனிடமுள்ள எண்ணக் கருவை வெளிப்படுத்துவது வெளிப்பாட்டு பணி என்றும் வெளிப்பாட்டு பணியின் நிலைமையை சுட்டிக்காட்டுவது சமிக்ஞை பணி என்றும் இவை இரண்டையும் உள்ளடக்கி விளக்குவது விளக்கல் பணி எனவும், தர்க்க ரீதியாக குறியீடுகளை பயன்படுத்தி இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் போன்ற முக்காலங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய தூர சிந்தனையோடு அறிவாற்றலையும் பயன்படுத்தி நியாயிப்பது மொழியின் நியாயித்தல் பணியாகும்.

சிந்தனை என்பது ஒரு இலக்கை நோக்கி தூண்டி துலங்கலுடன் செயற்படுவது. உளத்துக்குள் புகுத்தப்படும் மனிதன் நோக்கங்களுக்கேற்பவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கத் தொடங்குகின்றான். இதனை கற்பனை யாகவோ காட்சி ரீதியாகவோ, தர்க்க ரீதியாகவோ சிந்திக்க முடியும்.

மனிதன் தனக்கே உரித்தான முறையில் சிந்திப்பது எண்ணக் கருச் சிந்தனை புற உலகின் நோக்கத்துடன் தனியாள் புலன் தாக்கமுறுவது புலக் காட்சிச் சிந்தனை, இவை இரண்டும் தவிர்ந்த தர்க்க ரீதியான சிந்தனையானது மூலக் கருவை வைத்துக் கொண்டு அதற்கு முடிவு காண்பது தர்க்க ரீதியான உய்தறி சிந்தனையாகும். நிஜ வாழ்க்கையுடன் தொடர்புடைய அம்சங்களை கொண்டு இறுதி முடிவுக்கு வரல் தொகுத்தறி சிந்தனையாகும்.

எனவே அமைதியாக சிந்திப்பதற்கு எண்ணங்கள், உணர்வுகள், எண்ணக் கருக்கள் என்பவற்றை வெளிக்காட்டும் பிரதான ஊடகம் மொழி. சிந்தனைக்குரிய கருவியும் இதுவே. எனவே மொழியும் சிந்தனையும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே காணப்படுகின்றது. சிந்தனைக்குரிய பண்பு, எண்ணக்கருவாக்கம், வகைப்படுத்தல் என்பவற்றை மொழியே வெளிப்படுத்து கின்றது. தனியாளுக்கும் மொழிக்கும் இடையே தொடர்பு இருப்பதாயும் மொழி வளர்ச்சியுடன் ஆளுமை வளர்ச்சி நடை பெறுவதாக ஜேம்ஸ் ஸ்மித் குறிப் பிடுகின்றார்.

மொழிக்கும் சிந்தனைக்கும் இடையே குறியீடுகளே தொடர்பு கொண்டுள்ளது. ஒலிசமிக்ஞை மூலம் விடயத்தை வெளியிடும்போது எண்ணக்கரு சிந்தனையும் கட்டியெழுப்பப்படுகிறது. மொழி வளர்ச்சி பிள்ளையின் முதிர்ச்சியுடன் வளர்கின்றது என்று "சிமின் மெடேனா" ஆகிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அதன் விபரங்க்ள வருமாறு

| வயது | தெரிந்திருக்கும் சொற்கள் |
|---|---|
| 01 | 3 சொற்கள் |
| 1 - 1/2 | 22 சொற்கள் |
| 2 | 272 சொற்கள் |
| 2 - 1/2 | 446 சொற்கள் |
| 3 | 796 சொற்கள் |
| 3 - 1/2 | 1222 சொற்கள் |
| 4 | 1540 சொற்கள் |
| 4 - 1/2 | 1870 சொற்கள் |
| 5 | 2072 சொற்கள் |

இவ்வாறாக தொடர்ந்து வளர்ச்சி யடைந்து செல்கின்றது

அதேபோன்று ஒருவரிடம் உள்ள அறிவு கருத்துக்கள் தீர்வுகள் என்பவற்றை வளம்படுத்திய கருத்துக்கள் தீர்வுகள் தோன்ற வழி வகுக்கின்றது. இதற்கு வழிகோலும் சிந்தனை ஆக்க சிந்தனை யாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.
பிரான்ஸிஸ் சியாமளா தேவமலர்

# திருவிவிலியத்திலிருந்து அன்பு

நான் மானிடரின் மொழிகளிலும்
வான தூதரின் மொழிகளிலும்
பேசினாலும் அன்பு எனக்கில்லையேல்
ஒலிக்கும் வெண்கலமும்
ஓசையிடும் தாளமும் போலாவேன்.

இறைவாக்கு உரைக்கும் ஆற்றல்
எனக்கு இருப்பினும்
மறைப் பொருள்கள் அனைத்தையும்
அறிந்தவனாய் இருப்பினும்
அறிவெல்லாம் பெற்றிருப்பினும்
மலைகளை இடம் பெயரச் செய்யும்
அளவுக்கு நிறைந்த நம்பிக்கை கொண்டிருப்பினும்
என்னிடம் அன்பு இல்லையேல் நான் ஒன்றுமில்லை....

என் உடைமையை எல்லாம் நான் வாரி வழங்கினாலும்
என் உடலையே சுட்டெரிப்பதற்கென ஒப்புவித்தாலும்
என்னிடம் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றுமில்லை....

அன்பு பொறுமையுள்ளது.
நன்மை செய்யும்
பொறாமைப்படாதது.
தற்புகழ்ச்சி கொள்ளாது
இறுமாப்பு அடையாது..
அன்பு இழிவானதை செய்யாது
தன்னலம் நாடாது.
எரிச்சலுக்கு இடம் கொடாது.
தீங்கு நினையாது.
அன்பு தீவினையில் மகிழ்வுறாது
மாறாக உண்மையில் அது மகிழும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்
அனைத்தையும் நம்பும்
அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும்
அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்...

இறைவாக்கு உரைக்கும் கொடை ஒழிந்துபோம்
பரவசப் பேச்சு பேசும் கொடையும் ஓய்ந்துபோம்
அறிவும் அழிந்து போம் ஆனால்
அன்பு ஒருபோதும் அழியாது.....
ஏனெனில் நமது அறிவு அரைகுறையானது
நாம் அரைகுறையாகவே இறைவாக்கும் உரைக்கின்றோம்
நிறைவானது வரும்போது
அரைகுறையானது ஒழிந்துபோம்.....

நான் குழந்தையாய் பேசினேன்
குழந்தையின் மனநிலையைப் பெற்றிருந்தேன்
குழந்தையைப் போல் எண்ணினேன்
நான் பெரியவனானபோது
குழந்தைக்குரியவற்றை அறவே விடுவிட்டேன்.

ஏனெனில் இப்போது நாம் கண்ணாடியில்
காண்பதுபோல் மங்கலாய்க் காண்கிறோம்
ஆனால் அப்போது நாம் நேரில் காண்கியோம்
இப்போது நான் குறைவாக அறிகிறேன்
அப்போது கடவுள் என்னை
அறிந்துள்ளதுபோல் முழுமையாய் அறிவேன்
ஆக நம்பிக்கை எதிர்நோக்கு, அன்பு
ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன
இவற்றுள் அன்பே தலை சிறந்தது.

உசாத்துணை நூல்: திருவில்லியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.நீரிஜா லக்ஷ்மனதேவா

# நவரஸம்

கலையானது ரசிகனுக்கு களிப்பூட்டும் தன்மையானது. நாடக நடன நிகழ்வுகளை அவதானித்தும் உரையாடல்கள் இசைகளைக் கேட்டும், சிற்பம் ஓவியம் இவற்றை பார்த்தும் பார்வையாளர்கள் இரசிகர்கள் உளக்கிளர்ச்சி அடைகின்றனர். இதுவே ரஸமாகின்றது. ரஸம் என்பது கலையின் உயிராகும் இவ் ரஸமானது ஒன்பது வகைப்படுகின்றது.எவ்வித கலைப்படைப்பாக இருந்தாலும் அதன் குறிக்கோள் ரஸ உற்பத்தியே ஆகும் . ரஸனைதான் ஒருவனுக்கு தெம்பூட்டும் மூலச் சத்தாக விளங்குகிறது ஆகவே ஒரு கலைப் பொருளை படைப்பவருக்கும் சரி அதனை ரசிப்பவருக்கும் சரி ரஸமே குறிக்கோளாக விளங்குகிறது. சமைக்கப்படும் உணவில் உப்பு, புளி என்பன பல்வேறு சுவைகளும் தனியாக நில்லாது கலந்து நல்ல சுவையை நமக்கு தருகின்றது அதே போல் பல பாவங்களும் சேர்ந்து ரஸத்தை உற்பத்தி செய்கின்றன

| நவரஸம் | ஸ்தாயிபாவம் |
|---|---|
| ஸ்ருங்காரம் | ரதி |
| ஹாஸ்யம் | சிரிப்பு |
| கருணா | சோகம் |
| ரௌத்திரம் | கோபம் |
| வீரம் | உற்சாகம் |
| பஜானகம் | பயம் |
| பீபட்சம் | வெறுப்பு |
| அற்புதம் | ஆச்சரியம் |
| சாந்தம் | அமைதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.
மேரி சந்திரகலா யசிந்தன்

# மன மாற்றம்

உலகப் பந்து உருண்டோடுகின்றது .......
உயர்வு தாழ்வு உச்சத்தில் எகுறுகின்றது
அடி,தடி முடி ஆட்டிப் படைக்கின்றது
ஆணவம் வெறியாகி மேலோங்குகின்றது..........

கலியுகம் கரைபுரண்டோடுகின்றது .......... ஆங்கே
அன்பு பண்பு பாசம் தறித்தெறியப்படுகின்றது
வன் முறை தாண்டவமாட அகிம்சையாங்கே
புதை குழிக்குள் அடக்கம் ஆகின்றது.

நொடிப் பொழுதில் மாற்றங்கள் பற் பல
நெஞசங்களோ கல்லாகி அமைதியிழக்கின்றன.
மானிட உயிர்கள் மதிப்பிழக்கின்றன. ஆதலால்
அழிவே எமது கதியாகின்றன....... அழிவு! அழிவு!! அழிவு!!!

எனக்குள்ளே நான் மாற்றமில்லை.
குடும்பத்தில் ஒற்றுமையில்லை.
சமூகத்தில் நாட்டில் உலகத்தில் மாற்றமில்லை
காலம் அழைக்கின்றது கட்டாயமாக....

நெஞ்சுகள் பஞ்சாக வெடிக்கட்டும்.
அன்பு என்ற ஊற்றுக்கள் பெருகட்டும்
உன்னைப் போல அயலானை நேசிப்பாய்.
மன மாற்றம் உலகை அன்பால் அரவணைக்கும்.
மன மாற்றமே உலகின் அச்சாணியாகட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.க.ஹரிஹரசக்தி
விரிவுரையாளர்

# கட்டாயக் கல்வி ஒழுங்கு விதிகள் ஒரு நோக்கு

இலங்கையின் பொதுக்கல்வியானது அதன் வளர்ச்சிப் பயணத்தில் காலத்தின் தேவைக்கிணங்க பல மாற்றங்களை தன்னகத்தே இணைத்து இன்றைய நிலையில் காணப்படுகிறது. இவ் வகையில் இலங்கையின் கல்வி முறைமை சமூக, கலாசார, பொருளாதாரப் பின்னணியை அடிப்படையாகக் கொண்ட பல வகையான மாற்றங்களின் மூலம் இன்றைய பரிணாம நிலையை அடைந்துள்ளது. அதே போன்று எதிர்காலத்தில் அமையவுள்ள சமூக. கலாசார, பொருளாதார ஒழுங்கு முறைகளுக்கு இணங்க கல்வி முறைமை மேலும் பல பரிணாம நிலையை நோக்கி நகர்த்தப்பட்டும் வருகிறது. பொதுவாக கல்வியின் மையநிலை என்பது மனித வளம் மற்றும் மனிதவள அபிவிருத்தி ஆகும். எனவே நாட்டின் கல்வியின் வகிபங்கு மிகவும் கனதியானதாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு பல்வேறு வகையான சமூக, பொருளாதார, கலாசார மாற்றங்களை அடைந்துள்ளது. இலங்கையின் சனத்தொகையில் ஏற்பட்ட மாற்றம் சமூக பொருளாதார நிலைமைகள், இலங்கையின் கல்வியிலும் உயர் செல்வாக்கை செலுத்தி வருகின்றது.

கல்விக் கொள்கை என்பது பொருளாதார மாற்றங்களைக் கவனித்து வகுக்கப்பட்டு வருகிறது இந் நிலையில் இலங்கையில் ஏழைப்பிள்ளைகளின் கல்வி வசதிகளை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. குறிப்பாக இலங்கையின் கிராமப்புற பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி நோக்கி அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இலங்கையின் செல்வந்த பிள்ளைகள் தொடர்ந்தும் கூடிய கல்வி வாய்ப்புக்களையும், உதவிகளையும் அனுபவிக்கும் நிலை குறைக்கப்பட்டு, கிராமப்புற ஏழைப்பிள்ளைகள் அதிகளவு கல்வி வாய்ப்புக்களையும், உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கு முன்னேற்பாடான கல்வி முறைகள், கல்வி அபிவிருத்தி திட்டங்கள் இன்று இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவற்றுக்கு உயிரோட்டம் வழங்கும் வகையில் இலங்கையின் கட்டாயக்கல்வி முறைமை இன்று முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் எதிர் காலத்தில் மேலும் பல முன்னேற்றங்களை நோக்கி நகர வேண்டிய தேவை உள்ளது. இதன் மூலம் இலங்கையின் சமூகக் கட்டமைப்பு உறுதிப் படுத்தப் படுவதுடன் சமூக நகர்வு நேர்த் தன்மையில் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இவற்றுக்கான முன் ஏற்பாடாக இலங்கையின் கல்வி முறைமை கட்டமைப்பும், தொழிற் பாடுகளிலும் கட்டாயக்கல்வி தொழிற்பாடுகளின் வெளியீடு (Out Put) பற்றியும் கவனிக்க வேண்டிய தேவை உள்ளது.

## இலங்கையின் கட்டாயக்கல்வி ஒழுங்கு விதிகள்

பொதுவாக இலவசக் கல்வி முறைமை மற்றும் கட்டாயக்கல்வி முறைமை என்பன சிறுவர்களின் அடிப்படைத் தேவையாகவும். சட்ட ரீதியான உரிமையாகவும் காணப் படுகிறது. 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கக் கல்விச் சட்டத்தின் அடிப்படையில் பிள்ளைகளுக்கான கட்டாயக்கல்வி அமுல்படுத்தப் பட்டது. இக் கல்விச் சட்டம் 5 வயது - 14 வயதினருக்கான கட்டாயக் கல்வியை வலியுறுத்துகிறது. மேலும் இக் கட்டாயக் கல்விக்கான வயது எல்லையை 16 வயது வரை அதிகரிப்பதற்கு 1939 ஆம் ஆண்டு சட்ட மூலத்திற்கு 1947 ஆம் ஆண்டு திருத்திய சட்டம் உருவாக்கப்பட்டது. ஆயினும் இருபதாம் நூற்றாண்டின் இறுதி தசாப்தகால ஆரம்பம் வரை (1990 ஆம் ஆண்டு வரை) கட்டாயக் கல்வியை முழுமையாக ஒழுங்குபடுத்தும் முயற்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் தளர்வாகவே காணப்பட்டது. இந் நிலையில் 1997 நவம்பர் 25 ஆம் திகதி 1003/5 வர்த்தமானி அறிவித்தலின் படி தேசிய கல்வி ஆணைக்குழு சகலருக்கும் கல்வி என்ற கொள்கையில் உள்ள விதந் துரைகளின் மூலம் கட்டாயக் கல்வியுடன் இணைந்த ஒழுங்கு விதிகள் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அமு லுக்கு வந்தது.

இலங்கையின் 1945 ஆம் ஆண்டின் இலவசக் கல்விக் கொள்கையின் பயன் உள்ள அமுலாக்கம் காரணமாக இலங்கைப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவில் முன்னேற்றம் காணப்பட்டாலும் இடைநிலை வகுப்புக்களில் இடை விலகல் வீதம் ஆரம்ப வகுப்புக்களுடன் ஒப்பிடுகையில் அதிக மாகவும் உள்ளது. இந் நிலையில் தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை 2003 ஆம் ஆண்டிற்கு அமைவாக சகலருக்கும் இடை நிலைக்கல்வி வழங்குவதே இலங்கையின் கல்வி இலக்காக உள்ளது. தேசிய கல்வி ஆணைக்குழு 2003 அறிக்கையின் மூலம் சகல சிறுவர்களும் தரம் 11 வகுப்பினை நிறைவு செய்வார்களாயின் மிகவும் பயன் உடையதாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசும் ஏனைய அமைப்புக்களும் 5 வயது தொடக்கம் 16 வயதுப் பிரிவி ன ருக்கான இலவசக் கல்வியும், கட்டாயக் கல்வியையும் விரும்புவதாகக் குறிப்பிடப் பட்டுள்ள வகையில் அவற்றை மேலும் பயன்பாடு உடையதாக உருவாக்கும் வகையில் இலங்கையின் சகல பாடசாலை களிலும் அடிப்படை வசதிகள் முழுமை அடைய வேண்டும் என்ற நிலையும் காணப் படுகிறது. பாடசாலைகளில் கட்டாயக் கல்வியை ஊக்குவிக்கும் இலவசக் கல்வி முறைமையில் இலவசக் கல்வி, இலவசப் பாடநூல், இலவசச் சீருடை மற்றும் இலங் கையில் அனர்த்த நிலை அனர்த்த முகா மைத்துவம் உள்ள பிரதேசங்களில் இலவசக் காலை - மதிய இடை உணவு உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப் படுகின்றன. இந் நிலையில் இலங்கையின் கட்டாயக்கல்வி ஒழுங்கு விதிகள் அமைந் துள்ளன.

இலங்கைப் பாடசாலைகளில் இன்று கட்டாயக்கல்வி ஒழுங்கு விதிகளை முன்னெடுத்தல் செயல் ஒழுங்கில் பல வகைப்போக்குகள் காணப்படுகின்றன. இலங்கையின் கிராமப்புறப் பாடசாலைகளின் கட்டாயக் கல்வி ஒழுங்கு விதி அமுல்படுத்தலும், நகரப்புறப் பாடசாலை களின் கட்டாயக். கல்வி ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தலுக்கும் இடைவெளிகள் காணப்படுகின்றன. ஆரம்ப இடைவிலகல் பிரச்சினை நகர்ப்புறப் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது கிராமப்புற பாடசாலைகளில் அதிகம் உள்ளது. குறிப்பாக ஆரம்பப் பிரிவு மாணவர்களுடன் ஒப்பிடும் போது இடைநிலைப் பிரிவு மாணவர்களிடம் ஆரம்ப இடைவிலகல் அதிகமாக உள்ளது. குறிப்பாகத் தரம் 8 தரம் 9, தரம் 10 வகுப் புக்களில் நீண்ட நாட்கள் பாட சாலைக்கு சமூகமளிக்காத மாணவர்களின் எண் ணிக்கை (ஆரம்ப இடை விலகல்) குறிப் பிட்டளவில் காணப்படுகிறது. குறிப்பாக இலங்கையின் பாடசாலை அனுமதி வீதம் 96% ஆக உள்ள போதிலும் 6 வயது தொடக்கம் 10 வயதுக் கிடைப்பட்ட 4% சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை எனபதுடன் இலங்கை பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆரம்பப்பிரிவு மாண வர்களில் 5% மாணவர்கள் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்வதில்லை என்பதுடன் 14 வயதுக்க முன்னர் 13% இனர் கல்வியில் இருந்து முழுமையாக இடை விலகுகின்றனர். இவற்றுடன் இடைவிலகல் போக்குகள் ஆரம்ப பிரிவில் 8% - 10% இற்கும் இடைப்பட்டதாகும். இடை நிலைப் பிரிவில் 15% - 24% இற்கும் இடைப்பட்ட தாகவும் உள்ளது. இங்கு ஆரம்ப இடை விலகல் இயல்புகள் பின்னர் முழுமையான இடைவிலகலுக்கு வழி வகுக்கும் தன்மை அதிகளவில் உள்ளது. கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்துவதற்கு இரு வகையான குழுக்கள் பாடசாலை மட்டத்திலும், பிரதேச செயலாளர் மட்டத்திலும் தொழிற் படுகின்றன.

**பாடசாலை மாணவர் வரவுக்குழு**

*School Attendance Committee*

**பாடசாலை வரவுக் கண்காணிப்புக்குழு**

*School Attendance Monitoring Committee*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை வரவுக்குழு

*School Attendance Committee*

இக் குழு பாடசாலை மட்டத்தில் தொழிற்படுகின்றது இக் குழுவில் பின்வருவோர் அங்கத்துவம் வகித்தல் வேண்டும் எனக்குறிப்பிடப்படுகிறது

பிரதேச கிராம அலுவலர்கள்

பாடசாலை அதிபர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் இரண்டு பிரதிநிகள்

பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்

மதகுருமார்கள் ஒருவர் அல்லது இருவர்

பாடசாலை ஆசரியர்

## பாடசாலை வரவுக் கண்காணிப்புக் குழு

*(School Attendance Monitoring Committy)*

இக்குழுவில் பின்வருவோர் அங்கம் வகித்தல் வேண்டும் எனக் குறிப்பிடப் படுகிறது. அது பிதேச செயலாளர் பிரிவுக்கு ஒவ்வொன்றாக தொழிற்படுகிறது.

பிரதேச கோட்டக் கல்விப்பணிப்பாளர்

பிரதேச நன்நடத்தை அலுவலர்

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அல்லது பொலிஸ் அலுவலர் பிரதேசத்தில் வசிக்கும் சமூக சேவை உத்தியோகத்தர்.

இவர்களுக்கு இணைப்பாளராக பிரதேச செயலாளர் தொழிற்படுவார். இக் குழுவானது தனது பிரதேசத்தில் உள்ள பாடங்களின் பாடசாலை மாணவர் வரவுக்குளுக்களுக்கு உதவி வழங்குவதுடன் பாடசாலை மாணவர்களுக்கு வரவுக் குழுவினால் தீர்க்க முடியாத மாணவர் ஆரம்ப இடைவிலகல் பிரச்சனைகளுக்கு தீர்வ காண வழிகாட்டுவதுடன் வலயக்கல்வி பணிமனையில் உள்ள முறைசாராக் கல்விப் பிரிவினரும் இணைந்து பாடசாலைக்கு மாணவர்கள் சீராக சமூகமளிப்பதற்கு (சீரான வரவிற்கு) ஒத்துழைப்பு வழங்குகிறது. மாணவர்களின் ஆரம்ப இடைவிலகலுக்கான காரணங்களை இனங்கண்டு உரியமாற்று வழிமுறைகளை முன் வைத்து பாடசாலைக்கு சீராக மாணவர்கள் சமூகமளிக்க உதவுகின்றது. இடைவிலகல் உள்ள பிரதேசங்களுக்கு நேரடியாகக் களப்பயணம் மேற்கொண்டு மாணவர்களை பாடசாலையில் மீளவும் இணைப்பதற்கு உதவி செய்கின்றது. குறிப்பாக பாடசாலை மாணவர் வரவுக்குழு குறித்த தவணை முறையில் கூட்டங்களை ஒழுங்கு செய்து மாணவர் ஆரம்ப விலகல் பிரச்சினை. மற்றும் இடைவிலகல் பிரச்சினைகளுக்கான வலுவான காரணங்களை பாடசாலை மட்டத்தில் இனங்கண்டு அறிக்கை தொகுத்தல் வேண்டும். இதன் மூலம் மாணவர் வரவை சீராக்குவதற்கான அடிப்படை வழிப்படுத்தல்களை குறித்த மாணவருக்கும் அவரது பெற்றோருக்கும் மேற்கொள்ப்படுகின்றது. வழங்கும் பணியைச் செய்கின்றார். இதன் மூலம் தினமும் பாடசாலை மட்டத்தில் மாணவர் வரவினை பதிவு செய்து வரவுப் பகுப்பாய்வை செய்து ஆரம்ப இடைவிலகல் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை இனங் கண்டு குறித்த ஒவ்வொரு மாணவரையும் வகுப்பாசிரியர் பகுதித் தலைவர் உதவியுடன் தனியாள் ஆய்வுக்குட்படுத்தி வரவு ஒழுங்கின்மைக்கான காரணங்களை சரியான முறையில் இனங்காணல் செய்கிறது. இவ்வாறு இனங்கண்டு அறிந்த பிரச்சனையில் இருந்து குறித்த மாணவரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கான பெற்றோர் சந்திப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளில் கவனம் செலுத்த தவறும் போது இக் குழுவினர் நேரடியாகக் களப்பயணம் மற்றும் கள வேலைகள் மூலம் குறித்த மாணவரின் கட்டாயக்கல்விக்கான பொறுப்பை எடுத்து பாடசாலைக்கு சீரான முறையில் தினமும் சமூகமளிப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். இவ்வாறான பல செயற்பாடுகள் இக் குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் இன்றைய சூழலமைவில் இலங்கைப் பாடசாலைகளில் கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்துவதற்கு பாடசாலை மற்றும் பிரதேச செயலாளர் மட்டங்களில் அடிப்படை வேலைத் திட்டங்கள் நடை பெறுவதுடன் வலய மட்டம், மாகாணக் கல்வித் திணைக்கள மட்டம், மாகாணக் கல்வி அமைச்சு, மத்திய கல்வி அமைச்சு ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியாக உரிய பொறுப்புக்கள் கடத்தப்பட்டு வருகின்றன. இவற்றுடன் உதவியாக இலங்கை சிறுவர் பாதுகாப்பு அமைப்பு *UNICEF* போன்ற சர்வதேச நிறுவனங்களும், தேசிய கல்வி நிறுவனம் உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களின் கல்விப் பீடத்தினரும் தேவையான ஆய்வுகள் மூலம் கட்டாயக் கல்விக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதுடன் ஆசிரிய கல்வி நிறுவ னங்கள் மூலம் தேவையான வாண் மைத்துவப் பயிற்சிகளும் ஆசிரியர் களுக்கு வழங்கப்படுகின்றன. இலங்கையின் ஆசிரிய வாண்மைத்துவம் தொடர்பான கட்டாயக் கல்வி முறையை மேம்படுத்த இலங்கை திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் தேசிய பல்கலைக் கழகங்கள் ஆய்வுகளையும், செயற்றிட்டங் களையும் முன்னெடுத்து தேவையான தீர்வுத் திட்டங்களையும் வழங்கி வருகின்றன. இந் நிலையிலும் கட்டாயக் கல்வி ஒழுங்கு விதிகளை முழுமையாக அமுல்படுத்தி மேம்படுத்துவதில் மேலும் முயற்சி செய்ய வேண்டிய நிலை உள்ளது. பின்வரும் செயற்பாடுகளில் மேலும் கவனம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது.

* பாடசாலைக்கு சமூகமளிக்காத சிறுவர்கள் பின்தங்கிய தூரக் கிராமங்களிலும் நகர ஒதுக்கு அயற் பகுதிகளிலும் அதிகம் காணப்படுகின்றனர். இப் பிரதேசங்களில் கட்டாயக் கல்வி குழுவினரின் நடவடிக்கைகள் ஆழமான முறையில் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

* பாடசாலையில் இருந்துள்ள தூரம், அதிபர், ஆசிரியர்களின் மற்றும் உத்தியோ கத்தர்களின் குறைவான ஊக்கக்குறைவு இலங்கையின் குறிப்பிட்ட இப் பிரதேசங் களில் மாணவர் நலன் தொடர்பாக வீழ்ச்சி நிலையில் உள்ளது. இப் பிரதேசங்கள் சரிவர இனங் காணப்பட்டு. கட்டாயக் கல்வி ஒழுங்கமைப்பு முறைகள் நுணுகிக் கவனிக்கப்படல் வேண்டும். இதன் மூலம் பாடசாலைகளின் மாணவர் வரவை அதிகரிக்கலாம்.

* பாடசாலையில் அனுமதிக் கப்படாத சிறுவர்கள் மற்றும் இடைவிலகிய சிறுவர்கள் தொடர்பான மிகச் சரியான புள்ளி விபரங்களை மேலும் நுணுக்கமாக கிடைப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்கள், மற்றும் அங்கத்தவர்கள் முழுமையான ஈடுபாடு காட்டுதல் வேண்டும்

* கட்டாயக் கல்வியானது தனித்து மாணவர் வரவை அதிகரிப்பதாக மட்டும் அமையவில்லை. இது உரிய தராதரத்தின் நியாயமான தன்மையினால் மேலும் மேம்படுத்தப் பட வேண்டிய தேவை உள்ளது. இந் நிலையில் அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் இணைந்து செயற்படுவதன் மூலம் மேலும் பயன் உள்ள வெளியீடுகள் அடைய இலகுவாக அமையும்

**உசாத்துணைகள்**

1. *Compulsory Education Regulation (Sri Lanka) Regulation Made by the Minister of Education and higher Education - under section 37 of the Education ordinace (Chapter 185)*

2. *Report Gunawardana Chandra and Jeyaweera Swarna (2002), Education for All, Save the Children - SriLanka*

3. இலங்கையில் பொதுக் கல்விக்கான புதிய கல்விச் சட்டம் முன் மொழிவுகள் இறுதி அறிக்கை

பொதுக் கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு - 2009

4. தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003

5. இலங்கையின் கட்டாயக் கல்வி ஒழுங்கு விதிகள் தொடர்பான கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி ரோஸ்லீமா சரத்குமார்

# நல்லாசிரியர்கள்

ஆசிரியர்கள் என்போர் மாணவர்களுடன் பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக வெகு நேரம் உடனிருப்பவர்கள். ஆசிரியர்கள் மாணவர்களை கண்காணிப்பது போல் மாணவர்களும் ஆசிரியர்களின் செயற்பாடுகளை கவனிப்பார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தன் செயற்பாடுகள் பற்றி தன் தரம் பற்றி அடிக்கடி சுய பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் விரும்பும் ஆசிரியர்களாக தன்னை அமைத்துக் கொள்ள வேண்டும்

வகுப்பறையில் நுழையும் போதே சிரித்த முகத்துடன் நுழைந்தால் மாணவர்களும் மன நிறைவாக பாடங்களை கற்றுக் கொள்வார்கள். சில மாணவர்களின் சேட்டைகள் தம்மை எரிச்சலூட்டும் வகையில் இருந்தாலும் ஆசிரியர்கள் பொறுமையும், நிதானமும் கடைப்பிடித்து பிற மாணவர்களும் தன்னிடம் நல்ல முறையில் கற்கும் சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும் அப்படிப்பட்ட சூழ் நிலையில் ஆசிரியர்கள் சினம் தவிர்த்து இன்முகம்காட்டி கற்பிக்க வேண்டும் மேலும் ஆசிரியர் என்பவர் எல்லா துறைகளிலும் நன்கு கற்றுணர்ந்த வராகவும் மாணவர்களின் சந்தேகங் களுக்கும் கேள்விகளுக்கும் விடை தேடிக்கொடுப்பவராகவும் மாணவர்களின் தேடலுக்கு துணை போகின்றவராகவும் இருக்க வேண்டும். ஒரு ஆசிரியரின் பயிற்று விக்கும் திறன் பற்றி மாணவர்களும் பிற ஆசிரியர்களும் பாராட்டிப் புகழ்ந்து கூறும் படியாயிருக்க வேண்டும்.

மாணவனில் அக்கறை கொண்டவராகவும், மாணவன் விரும்பும் ஆசிரியராகவும் செயற்பட வேண்டும். எனவே இவ்வாறான சிற்றியல்புகளை ஒருங்கே பெற்றவர் நல்லாசிரியராவார்.

ஆசிரியர்: ஆசிரியம் என்ற சொல்லில் இருந்து பிறந்தது ஆசிரியர் ஆசிரியம் என்றால் கொழுகொம்பு என்று பொருள் பச்சைக் கொடிகள் படர்ந்திடத் தன்னையே நிறுத்தி உதவுகின்ற பண்பு கொழுகொம்புக்கு உண்டு அது போல தன்னிடம் வருகிற பச்சைக் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளைக் கற்றுத் தருவதால் அவர் ஆசிரியர் என்று பெயர் பெற்றார். அவரிடம் கற்பவர் மாணவர் என்று அழைக்கப்பட்டார்.

வாத்தியார்: கவாத்து என்றால் பயிற்சி என்று பொருள் உடலுக்காக அல்லது மனதுக்காகப் பக்குவப்படுவதும் பயிற்சிகளைக் கற்பிப்பவர் கவாத்தியார் என்று அழைக்கப்பட்டார். பிறகு அவர் வாத்தியார், உபாத்தியார் என அழைக்கப்பட்டார். வாத்தியார் தினம் பயிற்சிகளைக் கற்றுக் கொண்டு பயில்பவனைப் பயில்பவன் என்றனர். அதுவே பின்னாளில் பயில்வானாக மாறிவந்துவிட்டது,

கு+ரு : என்ற சொற்கள் சேர்ந்தது குரு, கு என்றால் இருட்டு, ரு என்றால் வெளிச்சம், அறியாமை என்ற இருட்டிலிருந்து ஆன்மீகம் என்ற வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்பவர் குரு என்று அழைக்கப்பட்டார். அவர் காட்டுகிற வழிகளில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு முழு நேரமாகப் பின்பற்றுகிற மாணவரைத் தான் சீடன் என்றார். அதனால் தான் வாத்தியார் - பயில்வான், ஆசிரியர் மாணவன், குரு-சீடன் என்று பெருமையாகப் பேசப்படுகிறது.


**உசாத்துணை நூல்கள்**

ஆசிரியர் நாஞ்சில் ஸ்ரீவிஷ்ணு – கற்றலும் கற்பித்தலும்

பேராசிரியர் சு.விஜ்ரவேலு – தமிழ் கற்றலும் கற்பித்தலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.ஜெசிந்தா எந்தனி ராக்குமார்.

# மனிதம்

மனிதம் மடிந்து கிடக்கிறது
ஏனடா?
நிலையில்லாத இவ்வுலகத்தில்
ஜாதிப்பிரிவுகள் நூறாயிரம் -அதிலும்
உயர் ஜாதி தாழ் ஜாதி...
ஐயோ...!
என்ன கொடுமையடா
கடவுளின் படைப்பினில் - ஒன்று
மனித ஜாதி!
அதினிலும் இரண்டு - ஒன்று
ஆண் ஜாதி மற்றொன்று
பெண் ஜாதி........
ஜாதி வெறியர்களே -வெட்டுங்கள்
உங்கள் கைகளை கொட்டுங்கள்
கண்ணீர் துளிகளை....
உதிரும் இரத்தத்திலும்
சொட்டும் கண்ணீரிலும்
தேடுங்கள் - ஜாதி பேதங்களை
பதில் கிடைக்கிறதா?
மனிதா.....! நீ
விஞ்ஞான யுகத்திலுமா
இப்படி இருக்கின்றாய்?
எங்கே ஏற்றத்தாழ்வுகளோ - அங்கேயே
மனிதம் மடிந்து விட்டதடா....
புறப்படு மனிதா புறப்படு
புதிய யுகத்திற்குள்......
பொங்கியெழு அநீதிகளுக்காக
போராடு உன் உரிமைகளுக்காக
துரத்திடு சுய நலன்களை
குரல் கொடு அராஜகத்திற்காக
நிமிர்ந்து நின்றிடு உன் வெற்றிக்காக
அப்போது தானடா மனிதம்
உண்மையாய் வாழும் -இவ்
உலகினில்...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.
அருள்பிரகாசம் சகாயம் பிரியா

# தமிழ் மொழியின் இன்றைய நிலை

"யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமிழ் மொழியின் பால் கொண்ட காதலால் அனுபவித்து பாடினான் பாட்டுடைத் தலைவன் பாரதி. இவன் மட்டுமல்ல இன்னும் பலரால் போற்றி வளர்த்தெடுக்கப்பட்ட "செந்தமிழே நம் தமிழ் மொழி" இதன் பெருமையை எவறும் வார்த்தைகளால் மொழிந்திட இயலாது இம்மொழியை அறிந்தவர்களுக்கே புரியும் இதன் மகிமை பலவும்.

இவ் உலக மொழிகளிலே கனியமுதாய் மலர்ந்திருக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிப்படிகள் பற்றி நாம் சற்று நோக்குவோமாக! வரலாற்று கால அகழ்வாராய்சிகளின்படி "இயற்கை நெறிக் காலம்" என்று செல்லமாக வர்ணிக்கப்படும் "சங்ககாலமே" தமிழ் மொழியை வளர்ப் பதற்கான வித்தினை இட்டது என்றால் அது மிகையாகாது. இதற்கு நல் உதாரணம் அக்காலத்தில் நிலவிய "சங்கங்கள்" மேலும் மறைமலை அடிகள் என்பவர் "தனித்தமிழ் இயக்கம்" ஒன்றினை உருவாக்கி தமிழ் மொழியை வளர்ப்பதில் ஈடுபட்டார் இவ்வாறாக "காலத்துக்கு காலம்" தமிழை வளர்க்க தம் உயிர் கொடுத்து உழைத்தனர். அவர்களின் வரிசையில் இன்று நம் நெஞ்சமதில் நினைவுச் சின்னங்களாக "பாரதி தாசன், கம்பன்" என பல பெரும் புலவர்களும் மிளிர்கின்றனர் தாரகைகளாய்.

சங்கங்கள் வைத்து வளர்க் கப்பட்ட தமிழ் மொழி பல சதி திட்டங் களுக்குள் சிக்கி மூச்சு திணறியபடி கால சக்கரத்தின் வேகம் சங்ககாலத்தின் வீழ்ச்சியாக சங்கமருவிய காலத்தின் வருகை அத்துடன் இணைந்த "களப்பிரர் ஆட்சி" இதுவே தமிழ் மொழியின் தனித்துவம் குறைய காரண மாயிற்று அதுவே "வட மொழி கலப்பு" அன்றிலிருந்து இன்று வரை தமிழ் மொழியின் புனிதத்துவம் கேள்விக் குறியாகவே மாறிவிட்டது

"பாலில் இருந்து நீரை பிரிப்பது" எவ்வளவு கடினமோ அது போலவே இன்று தமிழ் மொழியின் நிலையும் இலக்கி யங்களுக்குள் மட்டும் உயிர் வாழும் தமிழ் மொழி மனித இதயங்களுக்குள் உணர் விழந்திருக்கின்ற நிலை இன்றைய தமிழ் மொழியின் நிலை என்றால் அது சாலப் பொருந்தும்

தமிழனாய் பிறந்த ஒவ்வொரு வனுடையதும் பொறுப்பு நம் தமிழ் மொழியின் இன்றைய நிலையையும் அந் நிலைக்கான காரணத்தையும் அலசிப் பார்த்தல். எனவே இந் நிலையை கண்டும் காணாதது போல உயிர் வாழ்வது நமக்கு அழகல்ல அது தமிழ் மொழிக்கு நாம் இழைக்கும் தீங்கு.

"விதியின் வளைவுகளால் தமிழ் மொழியின் தார்ப்பரியம் அழிந்து வரு கின்றது, இது தான் உண்மை 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு' என்று வாழ்ந்து காட்டிய சரித்திர புருஷர்கள் நடுவில் நாம் என்ன தான் செய்திருக் கின்றோம் தமிழ் மொழி உயிர் வாழ என்று உங்களை நீங்களே கேள்வி கேளுங்கள்!

அன்றாட நமது வாழ்வியலில் நாம் தமிழ் சொற்களை எத்தனை வீதம் பயன் படுத்துகின்றோம்? நமக்குரிய தமிழ் பண்பாடுகள் கலாச்சாரங்கள் இவை இன்று எங்கே? நாம் வாழ்கின்ற இவ் யுகம் எப்படியானது? சற்று சிந்தியுங்கள்.

"மூச்சு விடுபவனெல்லாம் மனித னல்ல, முயற்சி செய்பவனே மனிதன்" அப்படியாயின் நீங்களும் முயலுங்கள், தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியின் இருப்பை அதன் தனித்துவத்தை நிலை நாட்ட "இன்றைய உலகமயமாக்கல் சிந்தனை நம் அறிவினை வளர்க்கிறது ஆனால் நம் பழைமையினை நம்முள் உயிர்வாழும் மொழி உணர்வினை அழிக்கின்றது நமக்கும் தெரியாமல் நவநாகரீக வருகை நம் உடைகளில் மட்டுமல்ல நம் உள்ளங்களிலும் முதலிடம் பிடிக்க வாயை திறந்தால் "தமிழ் மணமல்ல ஆங்கில மணம்" எங்கும் வளமாக நல்லது தான் இருந்தும் நம் தாய் மொழிக்கு வேறெந்த மொழியும் ஈடாகுமா? இன்றைய காலத்தின் தேவை ஆங்கில அறிவு அதை மறுக்கவில்லை அதற்காக அதே கதி என்று நம் தாய்மொழியை எடுத்தெறியாதீர்கள்.

"வீட்டுக்கொரு வாசல் போல வீட்டுக்கொரு கணனி" அபாரமான வளர்ச்சி இருந்தும் அதனை கற்க ஆங்கில மொழி கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும் என்ற தவறான சிந்தனைகள் கூட இன்று எம் மத்தியில் தாராளமாக வலம் வருகின்றது. நினைத்து பார்த்தால் சற்று கவலையாகவும் உள்ளது நம் தமிழர்களின் அறியாமை எண்ணி.

இன்று கணனிக்குள் எத்தனை தமிழ் வலையமைப்புக்கள் அவை அத்தனையும் நாம் தமிழ்மொழி மூலமாக கணனியை கற்கவே கடைசியாக "லதா" என்ற எழுத்து வடிவம் (Font) இணைக் கப்பட்டுள்ளது ஈண்டு குறிப்பிடத் தக்கது அதுமட்டுமா; 'வாழ வழிசொன்ன வான் புகழ் வள்ளுவன் இயற்றிய திருக்குறள் தொடக்கம் பல நல்ல நூல்களை கணனியில் தமிழ்மொழி மூலம் கற்கலாம் இப்பொழுது புரிகின்றதா? நம் தமிழ் மொழியின் விந்தை.

'செம்மொழி' அந்தஸ்து பெற்ற நம் தமிழ்மொழி இன்று அழிந்து வருகின்ற உலக மொழிகளுள் பத்தொன்பதாவது இடத்தையும் பற்றி பிடித்திருப்பது ஆராய்ச்சி களின் வெளிப்பாடு இப்பொழுது புரிகின்றதா நம் தமிழ்மொழியின் இன்றைய நிலை என்னவென்று?

"திராவிட மொழிகளின் ஒப்பிலக் கணம்" எனும் நூலில் "கால்டுவெல்" என்ற இத்தாலியர் தமிழ்மொழியின் சிறப்பு பற்றி பின்வருமாறு கூறுகிறார் "எல்லா மொழி களிலும் கடைசியாக பிறந்தது தமிழ்மொழி என்றும் இது தெலுங்கின் வயிற்றிலிருந்தே பிறந்தது இதிலிருந்து புரிகின்றதா என்று நம் தமிழ்மொழியின்! ஆழம் எவ்வளவு பெரிதென்று.

"பழம் இருக்க காய் கவர்ந்திற்று" என்பது போல இனிய தமிழ்மொழியில் பலவகை சொற்கள் இருக்கையில் நாமோ "பழக்கத்திற்கு அடிமையாகி நம் வழக் கத்தை விஞ்சி வருகின்றோம் உதாரணமாக மகிழுந்து, பேருந்து, தொடருந்து, பாருந்து என்ற அழகிய பதங்கள் இருக்கையில் நாம் கார், பஸ், ரெயின், லொறி என்று நடைமுறையில் பயன்படுத்துகின்றோம் இது கூட நாம் தமிழ் மொழிக்கு செய்யும் துரோகமே இதனை தாம் மிக அழகாக "வேதாசலம் மறைமலை அடிகளார் கூறினார் "உடல் என்பதற்கு மாற்று பெயராக "யாக்கை" என கூறலாமே என்று வலியுறுத்தினார் ஆனால் நடைமுறையில் இம்முயற்சியும் வீழ்ச்சியே.

மாற்றங்கள் ஆயிரம் வரலாம் ஆனாலும் தமிழ்மொழியின் ஏற்றங்கள் துளியும் குறையலாமா? "சாகும் பொழுதும் தமிழ் படித்து சாக வேண்டும் என் சாம்பல் தமிழ் கலந்து மணக்க வேண்டும்" என்று அன்று பாடினான் பாரதிதாசன். இறந்தும் தமிழ்மொழிக்கு உயிர்கொடுத்துச் சென்ற நபர்களில் இன்று நானும் நீங்களும் இருப்பது எங்கே?

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்று பாடிச் சென்றனர் அன்று தமிழ்மொழியின் இன்றைய நிலையை குறித்து தான் போலும் "பார்க்க தெரிந்தால் பாதை தெரியும் பாதை தெரிந்தால் தமிழை வளர்க்க முயன்றால் வழியும் புரியும்" சாதாரணநீர் கோயிலை அடைந்ததும் தீர்த்தமாகவும், சாதாரண சாதம் "பிரசாத மாகவும் சாதாரண சாம்பல் திருநீறாகவும் மாறுகின்றது" ஆனால் உயிருள்ள உணர்வுள்ள மனிதர்கள் நாம் மனம் வைத்தால் இனி முடியாதது என்ன இம் மண்ணில்; தமிழ்மொழி எம் தாய்மொழி மட்டுமல்ல எம் உயிர்மொழி என நினை மாற்றங்கள் வரும் இனித் தமிழ் உலகில் நாளுமே.

"நாம் உயிருடன் இருப்பதில் பெருமை இல்லை நாம் தமிழுணர்வுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதில் தான் பெருமை இவ்வளவு பெருமைகளையும் தன்னகத்தே கொண்ட 'மணியாரம் சூடிய தமிழ் மொழியை' தனிமனிதனால் வளர்ப்பது என்பது முடியாது ஆனால் தமிழுணர்வுடன் தமிழர்கள் நாம் அனைவரும் அரசாங்கமும், ஏனைய பொது நல அமைப்புகளும் தேசிய உணர்வுடன் ஒன்று திரண்டால் தமிழ்மொழியை அதன் அழிவின் பாதையினின்று தூக்கி விடலாம்

"பெயருக்கு மனிதனாய்
பொய்மைக்கு தமிழனாய்
வாழ்வதில் ஏது பயன்?
நீ மனிதனாய் மாறி
தமிழ்மொழியை சுவாசி
அப்பொழுது புரியும் இம்
மொழி கூறும்
பரிணாம கீதங்கள்...!

*உசாத்துணை நூல்கள்*


1.சிற்றம்பலம் சி.க-தமிழர் பற்றி கூறும் ஈழத்து பிராமிக் கல் வெட்டுக்கள்
(யாழ் பல்கலைக் கழகம் -1988 திருநெல்வேலி)

2.சாமி நாதையர் வே.சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்
(1953- சென்னை)

3.வித்தியானந்தன் சு.தமிழர் சால்பு - 1954-கண்டி

4.வானமாமலை நா.தமிழர் பண்பாடும் தத்துவமும்-1985

5.வரதராசன்.மு - பழந்தமிழ் இலக்கியத்தின் இயற்கை -1964

6.சிற்றம்பலம்.சி.த - பண்டைய தமிழகம் (யாழ் பல்கலைக்கழக வெளியீடு. திருநெல்வேலி)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.
வில்லியம் ரொசாரியோ லியோ

# கணினியைப் பராமரிப்பது எவ்வாறு? சில ஆலோசனைகள்

கணினியொன்றைப் பயன்படுத்தும்போது பாவனையாளர் என்ற வகையில் அதனை பராமரிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். அதற்கான சில ஆலோசனைகள்.

1. தினமும் ரிசைக்கிள்பின்னை *(Recycle bin)* வெறுமையாக்கி விடுங்கள்.

2. தொடர்ச்சியாக கணினியை இயங்கிக்கொண்டிருக்க விடாமல் சில நிமிடங்களாவது ஓய்வு கொடுங்கள்.

3. தேவையற்ற *(File)* கோவைகளை அழித்துவிடுங்கள்.

4. நீண்டகாலமாக பயன்படுத்தாத *(Programme)* களை நீக்கிவிடுங்கள்.

5. மாதம் ஒரு முறையாவது டி பிரக்மண்டேசன் *(Defragment)* செய்யுங்கள்.

6. அடிக்கடி டிஸ்க் கிளீன் அப் *(Disc Cleanup)* செய்யுங்கள்.

7. குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆண்டிவைரஸ் *(Anti virus Scan)* ஸ்கேனை இயக்கி *Folder* களை *Drive* களில் உள்ள வ்வரஸ்களை நீக்கி விடுங்கள்.

8. ஒவ்வொரு முறை பதிவிறக்கம் *(Download)* செய்யும்போதும் *Virus Scan* செய்ய வேண்டும்.

9. கணினியை முறைப்படியே *(Shut down)* செய்ய மறக்க வேண்டாம்

10. *UPS* ஒன்றை கட்டாயமாக பயன்படுத்துங்கள்

11. கணினியை ஒழுங்கான முறையில் *Shutdown* செய்யாத ஒவ்வொரு தடவையும் மாதம் ஒருமுறையும் *Scandisc* செய்யுங்கள்.

12.Datatraveler ஐ *(Pendrive /Flash drive)* பயன்படுத்தும் ஒவ்வொரு தடவையும் *Virus Scan* செய்த பிறகே பயன்படுத்துங்கள்.

13. அறிமுகமில்லாதவர்களிடமிருந்து உங்களுக்கு வரும் *e-mail* களை திறக்காதீர்கள்.

14. கணினியில் உங்களுக்கென்று ஒரு *User account* ஒன்றை திறந்து பயன்படுத்துங்கள்.

15. *User account* க்கு *Pass word* ஒன்றை பயன்படுத்தும்போது பின்வருவனவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

*a) Password* க்கு எழுத்துக்கள், அடையாளங்கள், இலக்கங்கள் என்பனவற்றை கலந்து பயன்படுத்துங்கள்.

*b)* பிறந்த திகதி, லைசன் இலக்கம், தொலைபேசி இலக்கம், இவைகளை கடவுச்சொற்களாக பயன்படுத்த வேண்டாம்.

*c)* உங்களின் கடவுச் சொற்களை அடிக்கடி மாற்றி விடுங்கள்.

*d)* கடவுச் சொல்லை எழுதி வைக்காதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Mrs.Lidiyal Glory Devadas*

## UP EDUCATION

*Education is an important right of an Infant. Education is not about college. It entails a Wider Range of Knowledge. Supplying a market of skills. Shortage Education is Great. It creates and decides upon ones Fate. Never leave it to late. Education Makes it opportunities.*

*"So I say, O.kay ! up Education !*

*Feed the Nations. up Education!"*

*Is in abundance a constituent of impotance as we humans advance. It offers us life's insurance. Education is the Key to set You free from joblessness, condemnation. Education is the Key to flee From endless. financial frustration. Education provides You with ammunition to tackle any country.*

*State or nation Education gives you immunization Against surviving Global Frustration. Education relives Global Frustration. Education relives you From absurd ignorance. Education exempts you and me from parental allowance. For most adults It is usually a concerning disturbance It take our time to stress once more.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. ஷாந்தினி கிளேரா தோமஸ்

# வாக்குத்தத்தம்

மனிதராக எம்மை உருவாக்கிய எம் இறைவன் எம் ஒவ்வொருவரையும் மிகவும் நேசிக்கின்றார். எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் உன்னதமும் மேன்மையுமான ஒரு திட்டத்தையும் வைத்திருப்பதுடன் எம் ஒவ்வொருவருக்கும் அநேக வாக்குத் தத்தங்களையும் கொடுத்திருக்கின்றார். இவற்றை நாம் அறிந்திருந்தாலும் அநேக நேரங்களில் அவ்வாக்குத்தத்தங்களை மறந்தவர்களாக் மாம்ச ரீதியாக சிந்தித்து குழம்பிவிடுகின்றோம். அது மட்டுமல்லாது இறை வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற பல குறுக்கு வழிகளையும் கையாண்டு ஏனையோரையும் பல இன்னல்களுக்கு ஆளாக்கிவிடுகின்றோம்.

இறைவன் எமக்குக்கொடுத்த வாக்குத்தத்தங்களை நாமாகவே நிறை வேற்றிக்கொள்ள அநேக நேரங்களில் நாம் பிரயாசப்படுவதுடன் பல குறுக்கு வழி களையும் கையாளுகின்றோம். இதற்கான காரணம் இறைவன் எமது தந்தை என்பதையும் நாம் அவருடைய பிள்ளைகள் என்பதையும் முழுமையாகவும், உறுதி யாகவும், தெளிவாகவும் இன்னமும் அறியாமலிருப்பதேயாகும். இதற்கு ஆதார மாக வேதாகமத்திலுள்ள ஒரு சம்பவத்தை நோக்குவோமாக.

இறைவன் ஆபிராமை அழைத்த போது நான் உன்னைப் பெரிய குலமாக்கி உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி.12:2) என வாக்குத்தத்தம் பண்ணினார். ஆபிராம் இறைவாக்குத் தத்தத்தில் விசுவாசத்துடன் நிலைத்தி ருந்தான். காலங்கள் கடந்தன. ஆபிராமும் சாராயும் வயோதிபரானார்கள். ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. ஆகவே சாராய் ஒரு குறுக்கு வழியை நாடுகிறார். தன் கணவனை தனது அடிமைப் பெண்ணாகிய ஆகாரிடம் சேரும்படி கூறுகிறார் (ஆதி 16:2) இவ்வாறாகவே நாமும் இறைவன் எமக்குக் கொடுத் திருக்கும் வாக்குத்தத்தமானது, நாம் நினைக்கும் வேளையில் சீக்கிரம் நிறை வேறாது விட்டால் நம்பிக்கையிழந்து எவ்வித எதிர்பார்ப்புமின்றி கலங்கி குழப்ப மடைந்த நிலையில் எம் சுய புத்தியில் சார்ந்து அநேக குறுக்கு வழிகளையும் பின்பற்று கின்றோம். பின் அதன் பாதகமான விளைவுகளையும் அனுபவிக்கின்றோம்.

இறைவன் வாக்குத்தத்தம் கொடுத்தது ஆபிராமுக்கும் சாராயுக்கு மேயன்றி, ஆபிராமுக்கும் ஆகாருக்குமல்ல. இறை வாக்குத்தத்தத்தை இவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அநேக வருடங்கள் பொறுமையுடனும் விசுவாசத்து டனும் காத்திருந்தவர்கள் இறை நம்பிக்கை யையும் பொறுமையையும் இழக்கின்றார்கள். சுயத்தில் சார்ந்து குறுக்கு வழியை நாடினர். ஆபிராம் சாராயின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஆகாரைச் சேர்ந்தான். அவள் கர்ப்பவதியானாள் சாராயின் சமாதானம் பறந்துவிட்டது. இறைவனின் வாக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள சாராய் பயன்படுத்திய கருவியாகிய ஆகார் எனும் தன் பணிவிடைக்காரியாலேயே அவள் அற்பமாக எண்ணப்பட்டு நிந்தை, அவமானம், வேதனைகளைச் சிந்திக்க நேரிட்டது. இதனால் சாராய் ஆகாரைக் கடினமாய் நடத்துகிறாள். ஆகார் இன்னல் களுக்குள்ளானாள். இவ்வாறாகவே நாம் எடுக்கும் தீர்மானங்கள், எமது செயற் பாடுகள் மூலம் சம்பந்தமே இல்லாத இன்னுமொருவருடைய வாழ்வில் பாதிப்புக் களையும் இழப்புக்களையும் ஏற்படுத்து கின்றது என்பதை சிந்திப்பதில்லை. அது மட்டுமல்ல, எமக்கு ஏற்படும் துன்பங்கள், வேதனைகள், சஞ்சலங்களுக்கு நாமே காரணமாக அமைந்து விடுகின்றோம்.

அதுமட்டுமல்ல, இறைவாக்கு எம்மில் நிறைவேற முடியாத படி அதற்கு நாமே தடையாகவும் இருக்கின்றோம். மேலும், நாம் எமது சுயபுத்தியில் சாயக்காரணம் எமக்குள் காணப்படும் அவசரம். இறைவன் சொன்னதை செய்வாரோ இல்லையோ எனும் உணர்வும், மேலும் அவ் வாக்குத்தத்தம் எம் வாழ்வில் எவ்வாறு, எப்போது, ஏன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அறிந்து இறைவன் செயற்படுகிறார் என்பதை நாம் தெளிவாக அறியாமலிருப்பது மேயாகும்.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (மாற் 13:31) எனக் கூறிய இறைவன் சொல்லியும் நிறைவேற்றாதிருப்பேனோ எனவும் கூறுகிறார்.

ஆகவே இறைவன் எம் ஒவ்வொரு வருக்கும் கொடுத்திருக்கும் வாக்குத்தத் தங்களை எம்மில் முழுமையாக ஏற்ற வேளையில் ஏற்ற விதத்தில் நிறைவேற்ற எம்மை முழுமையாக அர்ப்பணித்து, சுயபுத்தியில் சாராமல் குறுக்கு வழிகளை நாடாது பொறுமையுடனும் விசுவாசத் துடனும் ஜெபத்துடனும் இறைவனின் பாதத்தில் அமர்ந்திருப்போமாக.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி.மொனிக்கா மோகனராஜ்

# நித்திய வாழ்வு

உலகின் பாவங்களை
உளமாற ஏற்றவர்
உனக்காக எனக்காக-தன்
உயிரை நீத்து
ஜீவன் பெற்றார்

ஜென்ம பாவம் அறியாதவர்
ஜனங்களுக்கு முன்மாதிரியாய்
யோர்தான் நதியில் இறங்கிடவே
தந்தை மகன் தூய ஆவியினால்
திருமுழுக்கு பெற்றார் யோவானால்
வானம் திறந்து
வந்தமர்ந்தார் ஆவியானவர் புறாவாக

என் அன்பார்ந்த மைந்தர்- இவரே
இவர் பொருட்டு பூரிப்படைகிறேன்
எனவொலித்தது ஓர் குரல்
ஆ.......ஆ....... ஆச்சரியம்
அன்பு நேசரின் வழிகாட்டல்
அதனை நாமும் பின் பற்றி -எம்
அனைத்து பாவமும் விலகிடவே
இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால்
பெற்றிட வேண்டுமே திருமுழுக்கு
தூய ஆவியின் அருள் பெற்று
இறை அரசிற்கு சென்றிடுவோம்
நித்திய வாழ்வை பெற்றிடுவோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.பிலிப் எனாருஷாந்தினி

# திட்டமிடல் *(Planning)*

திட்டமிடல் என்பது எந்தவொரு பணியினது நோக்கத்தை தீர்மானிக்கவும் அந்நோக்கங்களை அடையவும் தேவை யான உபாயங்களையும் வளங்களையும் தீர்மானித்தலாகும்.

எனினும் திட்டமிடலின் அடிப் படை 'காலம்' ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு செயல் முடிக்கப்பட வேண்டும். காலம் ஓர் ஆற்றல், செல்வம் அதனை எப்படி செலவு செய்ய போகிறோம் என்பதே திட்டமிடல் (Planning) இதனை திருவள்ளுவர்

**'ஞாலங் கருதினுங் கை கூடுங் காலம்**
**கருதி இடத்தாற் செயின்"** என குறிப்பிடுகின்றார். அதாவது வீடு, நாடு, தொழிலகம் அனைத்திலும் திட்டமிடல் முதலாவது கட்டமாகும்.

தனி மனிதன் தன் வாழ்க்கைத் திட்டத்தை தானே வகுத்துக் கொள்ள வேண்டும்.

திட்டமிடும் பொழுது அதில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப என்னென்ன மாற்று வழிகள் செய்ய வேண்டும் என்பதையும் சேர்த்து சிந்தித்து வைத்திருக்க வேண்டும். திட்டத்தில் தடங்கல் ஏற்படும் பொழுது மாற்று வழி கொண்டு அதனை சரிசெய்தால் நடை முறைப்படுத்தல் எளிதாகி விடுகிறது.

ஒரு தனியாளை பொறுத்தமட்டில் பொருளாதாரத்தை திட்டமிடும் பொழுது மாதவருவாய், சேமிப்பு, செலவு என மாதாமாதம் பட்டியலிட்டு திட்டமிட்டு வாழ்பவர் எனின் பணம் இல்லை என்ற நிலையை பெற மாட்டார்கள்.

ஒரு பயணியை பொறுத்தவரை பணம், செலவு, பயணச்சீட்டு, உடை, தேவையான பொருள் என திட்டமிட்டு பயணம் செய்பவர் மகிழ்வுடன் திரும்புவர்.

ஒரு குடும்பம் எனின் எத்தனை குழந்தைகள் எந்தத்துறையான படிப்பு, வேலை என்று குடும்ப நலம் திட்டமிடுபவர் வெற்றி பெறுவது உறுதியாக அமைகின்றது.

ஒரு ஆசிரியரின் முகாமைத்துவ பணியில் திட்டமிடல் என்பது மிக உன்னத நிலையாக உள்ளது.

- திட்டமிடலின் அடிப்படை அம்சங்க ளாகிய குறிக்கோள்களை தீர்மானித்தல், குறிக்கோள்களை அடைவதற்கான முறை கள் மற்றும் தேவையான வளங்களையும் தீர்மானித்தல் முக்கியமானது. அத்தோடு

☐ பாடத்தை திட்டமிடல்

☐ கற்றல், கற்பித்தல் செயன் முறையை சரியாகத் திட்டமிடல்

☐ மாணவர் செயற்பாடுகளையும் மாணவரின் முன்னறிவிற்கான பணிகளையும் திட்டமிடல்

☐ மாணவர் மதிப்பீடு பரீட்சையை திட்டமிடல்

☐ ஆசிரிய மாணவருக்கும் மட்டு மல்லாது பாடசாலை அபிவிருத்திக்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற பணிகள் இன்றியமையாததாக இருக் கின்றன. இதனை கடைப்பிடிப்பவர் சிறந்த ஆசிரியராகிறார்.

எனவே எந்தவொரு செயலையும் வினைத்திறனுடையதாகவும் விளைத் திறனுடைய தாகவும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடல் கைக்கொடுக்கிறது என்பது உறுதி.

"வாழ்வில் திட்டங்களை வகுப்போம் திறம்பட வாழ்வோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.அருள் பிரகாஸ் சகாயம்.பிரியா

# பெண்ணே! இதுவே யதார்த்தம்...!

ஒளிவிழா கவிதை போட்டியில் 1ம் இடத்தை
பெற்றுக்கொண்ட கவிதை

கடவுளின் படைப்பிலே
கண்கவர் காட்சி அது நீயே!
கால மகளின் காவியம் பாடும்
கனிமலர் அவள் தான் பெண்ணடா!

சமூகம் சந்ததி சந்ததியாய்
சாக்கடைக்குள் சிக்கிய வண்ணம்
நாற்புறமும் நளிவுறும் பெண்ணினம்
ஒரு புறம் இந் நிலைமையே உனதடி!

இவ்வுலக வாழ்க்கை சொற்பகால
வேட்கை என்பதனை அறிந்தும்
நீ உன்னையே எரித்து
ஒளியேற்ற விரைகின்றாயே!

உன் கறுப்பு வலையல்கள்
உன்னகத்து உணர்வுகளை
எடுத்தியம்புகின்றது ஆழமாக
உன் உள்ளத்து ஏக்கங்களை

மெல்விரல்களால் நீ தீக்குச்சியை
மெதுவாக உரசுகிறாய்! ஆனால்
யாருக்கும் தெரியாமல் உன்
உயிரோடு உன் எதிர்பார்க்கைகள்
எரிவதை இங்கு எவருமே உணரவில்லை!



பெண் வீட்டின் கண்! ஆம்
அக் கண்களில் கண்ணீர்க் குளங்களோ!
அவள் தேகங்களில் கவலை வடுக்களோ!
அவள் ஆடைகளில் ஏமாற்ற கிழிஞ்ஞல்களோ....?

சிரித்த முகத்துடன் ஒளியேற்றுவோர்
சிலர், ஆனால் நீயோ உன்
முகத்திரையை மறைத்து ஒளியேற்றுகிறாயே
இது எதற்காக ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ அழகற்றவள் என்பதாலா?
இல்லை அறிவற்றவள் என்பதாலா?
பெண்ணே! பாரதி பாடிய புதிய பெண்ணடி
நீ! உனக்கேன் தயக்கம்!

இவ் உலகம் யாரைத்தான்
இதமாக சுவாசிக்க விட்டது! நீயும்
இதை யோசி! உனக்கான ஓர்
உலகம் வெகு விரைவில் உதயமாகும்!

காற்பந்து போல உன்னுள்
ஏக்கங்களை சுமக்காமல்
இனிய புல்லாங்குழல் இசையாய்
உன் வாழ்க்கையினை மாற்றிடு

எதிர்பார்ப்புக்கள் ஏராளமாக இருந்தால்
ஏமாற்றங்கள் தான் தாராளமாகும்
ஆசைகள் அதிகமானால்
அவஸ்தைகள் தான் சொந்தமாகும்!

பெண்ணே! உனக்குள் எதையும்
தாங்கும் உள்ளம் செய்!
எண்ணங்களே வாழ்க்கையின்
வண்ணங்கள்... இனியாவும் நலமாகும்!

உலகிற்கு ஒளியேற்ற நீ!
உன் உள்ளத்திற்கு உரமூட்டு!
உன்னைச் சுற்றியுள்ள இயலாமைகளை
உதறித் தள்ளு...!

பெண்ணே! உன்னால் முடியும்
இமயத்தை உனதாக்க நாளைய
சமூகத்தை வளமாக்க! இங்கே
பற்றி எரிவது நம்முள் உள்ள வேற்றுமைகளடி!

படுத்துக் கிடப்பவனுக்கு பகல் கூட
இரவு தான்! ஆனால் எழுந்து
நடப்பவனுக்கு பார்க்கும் திசை
எங்கும் கிழக்குத் தானடி!

பெண்ணே! நீ தூக்கி எரிந்த
தீக்குச்சி! உன் வீட்டுத் திரைச்சீலையை
மட்டும் சாம்பலாக்கவில்லை
சாம்பலாக பலர் மனதில் படிந்துள்ள
கறைகளையும் புனிதப்படுத்தியுள்ளது...

சூரிய மரணத்துக்காக நீ!
கவலைப்பட்டால் - சந்திர
கிறுக்கல்களை உன்னால்
இரசிக்க முடியாது!

நீ உன் வீட்டு திரைச்சீலையை
எண்ணியோ! இச் சமூகத்தை பற்றியோ
சிந்திக்காதே! நீ! பழைமை வாதியல்ல!
நீ இவ்வுலகம் சமைத்த புதுமை வாதி

தீக்குச்சிப் போல உன்னுள்
உறைந்துள்ள இயலுமைகளை
வெளிப்படுத்து! உன்னை தூற்றும்
இவ் உலகம் நாளை வாழ்த்தும்!

எப்படியும் வாழலாம் என்று
நினைப்பவர் மத்தியில்
நீ! யதார்த்தம் இதுவே
என்றெண்ணி வீறு நடைபோடு

பூவான இவ் உலகம்
உன் பாதைகளுக்கு
பூத்தூவும் இனி என்ன
நடைப்போடு எந் நாளும்!

ஒளி இல்லாத வீதியில் நீ
நடந்துச் சென்றாலும்
பெண்ணே வழி தெரியும்
உன் இதயத்தில் "புதுமைத் தீ"
எரிந்து கொண்டிருந்தால்

இதோ பாரதி கண்ட புதிய
பெண்! நாளைய சரித்திரம்
படைக்கும் "யதார்த்தப் பெண்"
அது நீயே....!!

பரந்திருக்கிறது வானம் - நீ
பறப்பதற்காக
விரிந்திருக்கிறது பூமி - நீ
நடப்பதற்காக....

இன்றே பறந்திடு
உனக்கான புதிய
சரித்திரத்தை எழுதிடவே

ஒளியாக நீயே உருமாறினாலே
வரும் நாளெல்லாம் நீயும்
சந்தோச வானிலே பெண்ணே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.
ஞானஆரோக்கியம் சில்வஸ்டர்

# "இவள் தான் பூங்கொடி"

இரவின் நீளம் மெது மெதுவாய் குறைந்து. கிழக்கின் உதயம் தடம் பதிக்க, காலைச் சேவல் கொக்கரக்கோ... கொக்கரக்கோ" என கூவிட, விடியலை மேலும் உறுதிப்படுத்த பறவைகள் இன்னிசை இசைக்க, காலை 5.00 மணியாகியது. "பூங்கொடி.. பூங்கொடி" நேரமாச்சு எழும்புடி வேலைக்கு போகலயா?" மாமியாரின் அதிகார குரல் கேட்டு திடுக்கிடுகின்றாள் 16 வயது நிரம்பிய பூங்கொடி.

முதல் நாளும் நெடுந்தூர மலைக்கு வேலைக்கு சென்ற களைப்பினின்று நிறைமாத கர்ப்பிணியான பூங்கொடிக்கு துயில் காண சொர்க்கமாக தோன்றியது. நிசப்தமான அம்மலைப் பிரதேசம் முழுவதிலும் "பனி" தன் கைங்காரியத்தை எடுத்தியம்பிய வண்ணமிருக்க எழும்பியவள் தன் காலைக் கடன்களை நிறைவேற்றி. அடுப்பை மூட்டி தீ எழுப்பி தன் மாமியாரின், கணவனின் கருமங்களை ஆற்றி விட்டு காலை ஆகாரத்தை தயாரிக்க முற்படும் போது அவளைப் போலவே அந்த லயம் முழுவதிலும் வசிக்கும் பெண்கள் "உயிரை ஊடுருவிச் செல்லும் குளிரையும் வென்று வியர்வை ததும்ப "பிரட்டுக்கு அழைக்கும் கூக்குரலை கேட்டு காலைக் கடமைகளை மின்னலாக முடிக்கின்றனர்.

அவசரமே அவள் வண்ணம் என்று தன்னுடைய இடுப்பிலே படங்குடனும் தலையிலே சாரத்துடனும் கூடையை தாங்கிய பூங்கொடி 10ஆம் நம்பராம் அவள் மலையை நோக்கி பதற்றமாக நடையிடுக்கின்றாள். பாதை இருமருங்கிலும் ஆணும், பெண்ணுமாக குதூகலத்துடன் தத்தம் வேலை, அவர்கள் நடுவே வெண் புறாக்களாய் கதைகள் பல பேசி பள்ளிச் சிறுவர்கள் பறந்தோட தன் அகலவிரித்த கண்களூடாக அச் சிறுவர்களை ஏக்கமாய் நோக்குகின்றாள் பூங்கொடி. ஆம் அந்த பார்வையில் தான் பலகோடி அர்த்தங்கள் நிரம்பியிருந்தன! யாருக்கும் தெரியாமல் மறைவாக.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலென பசுமையான தேயிலைச் செடிகள், மத்தியிலே காலை கதிரவனின் இதமான ஆட்சியுடன் மெல்லிய தென்றலையும் அனுபவித்த பூங்கொடியின் எண்ணங்கள் எங்கெங்கோ பறந்து திரிந்தன. ஆம் எளிமையான தோற்றமும், சிரித்த முகமும், புகழாரம் தேடாத அவளது போக்கும் அவளுக்கு அவளே தான் நிகர். வீட்டுக்கு மூத்தவளாக பிறந்த பெண், பெற்றோர் உட்பட அவளது பிறப்புக்களாக மூன்று தங்கைகளும் ஒரு தம்பியும் சிறு வயதிலிருந்தே கற்பதில் ஆர்வம் இருப்பினும் ஏழ்மை பிணியோ அவளை வாட்டியது வெகுவாக. தாயினதும் , தந்தையினதும் வருமானத்தில் குடும்ப வண்டி ஓடுவது சிரமமாக இருந்தது. அன்றைய நாளே! அடுத்த வேலைக்கு என்ன செய்வது என்ற நிலையிலிருக்க படிப்பென்ன படிப்பு! பதவியா, பட்டமா? கண்கள் சொருகி காதுகள் அடைக்க பசியுடன் பள்ளி சென்று வந்த நாட்கள் தான் எத்தனை எத்தனையோ?

"படிச்சது போதும்மா பேரை பதிஞ்சிக்கம்மா! கஷ்டமாவது குறையும்" பள்ளிக்கு ஆயத்தமாகும் நிலையில் அன்றாடம் தந்தை கூறும் திருவாசகம். அழுகை விம்மிக் கொண்டு வர என்ன செய்வது மூத்த பெண்ணாக பிறந்தவளாயிற்றே! தந்தையின் சொல்லே தாரக மந்திரம் என்று புத்தகங்களை கண்ணில் ஒற்றி கதறியழுது ஒரு புறம் வைத்தவளாய்! குடும்ப சுமையை பகிரும் சுமை தாங்கியாய் கூடையை சுமக்கிறாள் 12 வயதில். தன் எதிர்பார்க்கைகளை ஒரு புறம் முடக்கி கண்ணில் கண்ணீர் மல்க தினந்தோறும் வேலை செல்லும் அவள் அனைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையிலும் வாடா மல்லிகையாய் வலம் வந்தாள் பூங்கொடி. பிஞ்சு விரல்களால் பெருந்தொகை பணம் இல்லை என்றாலும் ஏதோ பஞ்சம் போக்க பாதியாவது சம்பாதித்தாள். அது அவளுக்கு மனதிருப்தி தான்!

3 வருடங்கள் எப்படி போனதென்று தெரியவில்லை! திடீரென்று ஓர் நாள் தந்தை " பிள்ள என்ன பொண்ணு கேட்டு பக்கத்து தோட்டத்துல இருந்து வந்தாங்க அடுத்த மாசம் கல்யாணம்" என்றார். உடல் அதிரும் படியாக அவளுக்கு அடுத்ததோர் இடி. வயதோ 15 ஓடி விளையாடும் பருவத்தை பலிவாங்க உருவான காலனை எண்ணி! ஓவென்று அழுதாள். தந்தை மீது தீரா கோபம் கொண்டவளாய்! விதியை எண்ணி புலம்புகிறாள்! மூன்று தங்கைகளாயிற்றே! எப்படி! இவளுக்கு பின் அவர்களை கரை சேர்ப்பது. இது தான் தாயின் புலம்பல் கேட்ட அவளுக்கு வாழ்க்கை என்பது உணர்வற்ற உயிரற்ற பொம்மை விளை யாட்டாக தெரிந்தது.

வாழ்வின் புது வரவாம் திருமணம் ஆணும் பெண்ணும் இன்பமாக சேர்ந்து வாழும் ஒரு மனமாம் திருமணம் அவ் வாழ்வும் ஏமாற்றத்தை தர புழுவாய் துடி துடித்தாள். கணவனோ, குடிக்காரன் அறியா பிள்ளை இவளோ பாடித்திரியும் வயதில் துன்பங்களை தனக்குள்ளே புதைத்துக் கொண்டு "கணவனே கண் கண்ட தெய்வ மாக" எண்ணி வாழும் சமூகத்திலே தானும் ஒரு பெண்ணாக திருமண உறவின் பரிசாக தனக்கு கிடைத்த கர்ப்பத்தை சுமந்து நடமா டுகிறாள் நடைபிணமாகவே நாளும்.

கர்ப்பம் தாங்கும் ஒரு தாயின் இன்பத்தை அனுபவிக் முடியாத பாவியான இவளுக்கு இக் காலத்திலும் கிடைத் தததுவோ கணவனின் அடிகளும், உதை களுமே! கூடவே மாமியாரின் கொடுமை களும் இவளது துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. பசிமயக்கத்தால் மலை யிலே மயங்கி விழுந்த நாட்கள் தான் எத்தனை எத்தனை!

திடிரென்று ஒரு நாள் மயக்கம் கலையாத பூங்கொடியை தோட்டத்து லொறி சுமந்து செல்கின்றது வைத்தியசாலைக்கு! அங்கோ அவளுக்கு அறுவை சிகிச்சை! பெற்றோரின் உள்ளமும் படபடக்க கணவ னிடமோ கையெழுத்து வாங்கினார் டாக்டர்! இந் நொடியே பூங்கொடியின் உறவை உணர்ந்தவனாய் கை நடு நடுங்க ஒப்பமிட்டு தன் உயிரை பூங்கொடியின் மூலம் "சிசுவாய்" காண உள்ளம் பட படத்தவனாய் ஆப்பிரேசன் தியேட்டர் அருகில் காத்திருக் கின்றான்.

ஆனதுவோ அரை மணி நேரம் வெள்ளைத்துணியினால் முற்று முழுதாக மூடப்பட்ட நிலையில் தள்ளுவண்டியொன்று "சவக்காம்பரா" நோக்கிச் செல்கின்றது. அது யாரோ என்றெண்ணி எட்டிப் பார்த்த கணவனிடம் நர்ஸ் ஒருத்தி "சொறி" ஓபரேசன்ல பூங்கொடிய எங்களால காப்பாற்ற முடியல" என்றாள். பனிக் கட்டியாய் பூங்கொடியின் கணவன் உறைந்து நிற்க "ஐயோ சாமி எங்கள விட்டு பொய்ட்டியா? தங்கம் நீண்டதொரு ஒப்பாரி... இந்நிலை என்று மாறுமோ இன்னுமொரு பூங்கொடி வேண்டாம் இம் மண்ணில் என்று தன் தவறை உணர்ந்தவனாக தன் குழந் தையின் "அழு குரல் கேட்டு திடுக்கிடுகின் றான். அதுவோ பெண் குழந்தை இவ் உலகில் இன்பம் காணும் பூங்கொடியாய் வளர்ப்பேன் இவளை என்ற உறுதி பூண்ட வனாய் குழந்தையை கையில் ஏந்துகின் றான்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. ஷரண்யா மைக்கல்

# குறிஞ்சியின் மரபு இசைக் கருவிகள்

இசை என்ற சொல்லுக்கு இசைய வைப்பது என்பது பொருள். மனிதனையும் மற்ற உயிரினங்களையும் ஏன் இறைவனையுமே இசைய வைக்க கூடியது இசையாகும். இசை இறைவனிடமிருந்து வந்ததென்பது நம் பண்டையோர் கண்ட முடிவு இனிய உணர்வு தரும் ஓசைத் தொகுதிகள். ஓர் ஒழுங்கு முறையில் வெளிப்படுத்தலே இசையாகும். தொட்டில் தாலாட்டில் தொடங்கி மணவறையில் நலுங்குப் பாடலாக மங்கள கீதமாக மலர்ந்து ஈற்றில் அவல ஒப்பாரி என மனித வாழ்வு இசையோடு இணைந்து காணப்படுகின்றது.

கலைகளில் முதன்மையானது இசையே என்பர். மனிதன் மட்டுமன்றி பிற ஜீவராசிகள் தருக்கள் என்பனவும் இசையால் இன்பம் அடைகின்றன. இசையால் பசுக்கள் மெய்மறந்து பால் சொரிவதையும். மரங்கள் பூத்துக் குலுங்குவதையும் பிரயோக உளவியலில் அறியலாம். இசையின் பெருமையை உணர்ந்தே பண்டைய தமிழனும் இசையை நடுநாயகமாக வைத்தே தமிழை இயல், இசை, நாடகம் எனப் பிரித்தான். இசையின்றி இயல் சோபிக்காது. இயலும் இசையுமின்றி நாடகம் பிறக்காது.

ஒரு நாட்டின் இசை வளர்ச்சியை அதன் இசைக்கருவிகளைக் கொண்டு மதிப்பிடுவது மரபாகும். குரலிசைக்குத் துணையாக இசை ஒலி எழுப்பும் வாத்தியக் கருவிகள் பல்வேறு வகைப்படும். வேத காலத்திலிருந்தே இசைக் கருவிகளின் வகைகளை அறியக்கூடியதாக உள்ளது. அவற்றுள் தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக் கருவிகள் என நான்கு வகையுள் அடங்கும். இந்த வகையில் உலக நாடுகளிடையே பல்வேறுபட்ட இசைக்கருவிகள் பயன் படுத்தப்படுகின்ற போதும் இசைத்துறைக்கு இலங்கை ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. ஏறக்குறைய இருநூறு நூற்றாண்டு வரலாற்று பூர்வீகத்தைக் கொண்ட மலையகத்துப் பெருந்தோட்டத்துறையை சேர்ந்த தமிழர் மரபில் சில தனித்துவமான இசைக் கருவிகள் வழக்கிலிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். மலையக மக்களால் பயன் படுத்தப்படும் இசைக்கருவிகள் ஏனைய பகுதி மக்கள் பயன்படுத்தும் இசைக் கருவிகளை விட சற்று வித்தியாசமானதாக அமைந்திருப்பதுடன் சங்ககால பகுதியில் இரவலர்கள் கொடை வள்ளல்களிடத்து சென்ற போது இசை மீட்டப் பயன்படுத்திய இசைக்கருவிகள் பல இம் மக்களிடையேயும் பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய மேல்நாட்டு இசைக் கருவிகள் பயன்பாட்டில் உள்ள இக் காலத்தில் இத்தகைய இசைக் கருவிகள் நம் தோட்ட மக்களிடமே பெரும் பாலும் காணக்கூடியதாகவுள்ளது.

யாழ், வீணை, தம்பூரா சுரகொத்து சுரபத்து, துங்கினா, வயலின், புல்லாங்குழல், நாதசுரம், ஒத்து, மகுடி, சங்கு. பூரி, கஞ்சிரா, பஞ்சமுகவாத்தியம், கிடிதிட்டி, உடல்ரகரா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமாரம், தவண்டை, சூரியப்பிறை, சந்திரப்பிறை, உடுக்கை, பம்பை. தமுக்கு, தம்பட்டம், முரசு, கஞ்சக்கருவிகள், சேமக்கலம், ஜால்ரா, குரித்தானம், ஜலதரங்கம், கடம், கொக்கரை, துடி, மொத்தை, கின்னாம், கத்திரிகை. குடமுழவம், கொடுகொட்டி, படகம், பேரிகை, சல்விகை, கரடிகை, திமிலை, சுக்கை களப்பறை, டமருகம், தன்னுமை, சல்லாரி, அந்தரி, முழவு. சந்திரவலயம், கணவீடு, நூம்பு, நிகானம், அடக்கம், தகுனிச்சம், விரவேறு, உபாங்கம், சல்லி, ஆவங்கி, குடுக்கை... எனும் பல்வேறுபட்ட இசைக் கருவிகளை இம்மக்கள் பயன்படுத்து கின்றனர்.

இவற்றுள் தப்பு என்ற இசைக் கருவியே கூத்தின் போதும், தோட்ட மக்களைத் துயிலெழுப்பவும், மரணத்தை அறிவிப்பதற்காகவும், மங்களகரமான விடயங்களுக்கும் பயன்படுத்துகின்றார்கள். உடுக்கின் பயன்பாடானது காவடி, கரகம், பேயாட்டம் போன்றவற்றுடன் தெய்வீகக் கலையான சாமி பார்ப்பதற்கும் பயன் படுத்தப்படுகின்றது.

இன்று மலையகத்தில் வழக்கிலுள்ள பாரம்பரிய இசைக்கருவிகளில் அநேக மானவை மேற்குறிப்பிட்ட இசைக் கருவி களை ஒத்தனவாகியுள்ளமையும் தென் னிந்திய கிராமிய இசைச்சூழலை அடியொற்றியவையாகவும் காணப்படு கின்றன.

மலையக மக்களின் வாழ்க்கையில் காணப்படும் இக்கருவிகள் இறைவழி பாட்டிற்கும், இசை வாயிலாக கிடைக்கும் இன்பத்தினை துய்ப்பதற்காக மட்டுமன்றி மலையக மக்களின் நாளாந்த வாழ்க்கை யோடும் அவர் தம் உழைப்போடும், உணர் வோடும் ஒன்றியிருப்பதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

**உசாத்துணை:** மலையக மக்களின் சமகால பிரச்சினைகள், (இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு எழுதியது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. மாட்டின் பெனடிகட்

# இனிய தமிழ் மொழியே

மழலைகள் மொழி பேசிட
கவிஞர்கள் கவிபாடிட உலகெல்லாம்
துதிபாடும் உயர்வான மொழி
எங்கள் தமிழ்மொழி.

இருவரிக் குறளால் வள்ளுவன்
வலு சேர்த்த மொழி
புது கவி பாடி பாரதி புதுமை
படைத்த மொழி எங்கள் தமிழ்மொழி

அகம் நானூறாய் புறம் நானூறாய்
எட்டுத் தொகை பத்துப் பாட்டாய்
ஐம்பெருங் காப்பியமாய் ஐஞ்சிறு காப்பியமாய்
பதினெண் கீழ்க் கணக்காய்
பதினெண் மேல் கணக்காய் ஏன்
சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்று ஆறாய்
உலகளவில் இலக்கிய வகைப்படுத்தல்
அதிகம் கொண்ட மொழி
எங்கள் தமிழ் மொழி.

பாமரனை கூட மேதையாக்கும் மொழி
பேச பேச தித்திக்கும் தேனான மொழி
எங்கள் தமிழ் மொழி!

உடல் மண்ணுக்கானாலும் - உயிர்
தமிழுக்காய் வாழும் உள்ளங்களை
வாழ்த்துகின்றேன் - என் தமிழ் தாய்
பாதம் பணிந்து.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.பெ.பிரான்சீஸ்
வருகை தரு விரிவுரையாளர்

# விழுமியக் கல்வியை வழங்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு

**முகவுரை**

கல்வியின் அடிப்படை நோக்கமான நிறைவுள்ள மனித உருவாக்க செயற்பாட்டின்விளைவே விழுமியக்கல்வி எனலாம். விழுமியம் என்பது ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சார்பாக அல்லது எதிராக எடுக்கப்படுகின்ற மனப்பாங்காகும். இந்த மனப்பாங்கு ஒரு தனி நபர் பற்றியதாக, அல்லது ஒரு குழு பற்றியதாக அல்லது ஒரு நிறுவனம் பற்றியதாக அமையலாம். இந்த வகையில் நோக்கும் போது பாடசாலை மாணவர்களின் செயற்பாடுகள் எப்பொழுதும் அவர்கள் வாழுகின்ற சூழலுக்குச் சார்பானவையாக இருக்க வேண்டும். இதற்கு அவர்கள் உள்ளங்களில் நல்ல விழுமியங்களைத் தழுவக்கூடிய மனப்பாங்கு உருவாக்கப்பட வேண்டும். இச்செயலைப் பெற்றோரும் பாடசாலை ஆசிரியர்களுமே அதிகம் மேற்கொள்ள வாய்ப்புண்டு.

**ஆசிரியர் பங்கு**

முறைசார் கல்வியின் மூலம் மாணவர்களை உருவாக்குவதில், அதிலும் சிறப்பாக அவர்களிடத்தில் ஆளுமைப் பண்புக் கூறுகளை உருவாக்குவதில் பாடசாலை ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆசிரியரின் பங்கு என்பது ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவரும் அப்பதவியிலிருந்து ஆற்ற வேண்டிய கடமைகளும், பொறுப்புக்களுமாகும். "மாணவர்களின் தேவைகளையும், கல்வி நோக்கங்களையும் நிறைவு செய்யும் வகையில் முழுக்கல்விச் செயற்பாட்டையும் ஒருங்கிணைப்பவர் ஆசிரியர்" இது யுனெஸ்கோ நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூல் ஒன்றில் எம்.சம்சியூட்ட என்ற அறிஞர் ஆசிரிய பங்கு பற்றிக் கூறிய கருத்தாகும். இதே கருத்தைப் பல்வேறு சொல் வடிவங்களில் டி.விஞ.டி.பிரின், எறிக் கொயில் போன்ற பல கல்வியியலாளர்கள் கூறியுள்ளனர்.

இவர்கள் ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின்போது மாணவர்களுக்கு அறிவு, திறனை ஊட்டும் அதேநேரத்தில், நல்ல விழுமிய மனப்பாங்கையும் ஊட்ட வேண்டும் என்பதை தமது கருத்துக்களில் கோடிட்டுக் காட்டியுள்ளார்கள். எவ்வளவு திறமையாக கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டடிருப்பினும் அதனை நடைமுறைப் படுத்துவது ஆசிரியர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்பதை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**ஆசிரியர் ஒரு குயவனின் பாத்திரத்தை ஏற்க வேண்டும்.**

நல்ல விழுமியக் கல்வியைத் தமது மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்கிற வாண்மை உள்ள ஆசிரியர், தான் ஒரு குயவனின் பாத்திரத்தை ஏற்க வேண்டும். அதாவது எப்படி ஒரு குயவன் தன்னிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ள களிமண்ணைப் பதப்படுத்தி உபயோகமுள்ள கலசமொன்றைத் தன் கைவண்ணத்தால் உருவாக்குகிறானோ அதே போல ஆசிரியரும் தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களின் உள்ளங் களை தமது சாதூரியத்தால் பதப்படுத்தி நல்ல மனப்பாங்கு விருத்தி கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள நற்பிரஜைகளை உருவாக்க வேண்டும். இதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் தமது மாணவரின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர முயலவேண்டும்.

**ஆசிரியர் ஒரு ஜனநாயக வாதி**

மனித நடத்தையின் நன்மை தீமையை நிர்ணயிப்பது விழுமியமாகும். ஒருவருடைய செயல்கள், ஒரு நோக்கோடும் சுதநதிரத்தோடும் மேற்கொள்ளப்படும் போது அவை விழுமியத்தன்மை பெறுவதாக அறிஞர்கள் கூறியுள்ளார்க்ள. இந்த வகை யில் மாணவர்களைச் சுதந்திரமாகச் செயற்பட வைப்பது ஆசிரியரின் பங்காகும். ஆசிரியர் வகுப்பறையில் எப்பொழுதும் ஒரு ஜனநாயகவாதியாகச் செயற்படுத்துவதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம். அதாவது மாணவன் சுயமாகச் சிந்திக்கவும்,தனது சிந்தனைகளை வெளியிட்டு அதன் மூலம் அவனது உள்ளார்ந்த திறன்கள் வெளிக்கொணரப்படவும், தன் திறனில் அவன் நிறைவு *(Self actualization)* காணவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

**சமநிலை ஆளுமையை வளர்த்தல்**

நிறைவுள்ள மனித உருவாக் கத்திற்கு மாணவர்களில் சமநிலை ஆளுமை வளருவதற்கான உத்திகளை ஆசிரியர் கையாளவேண்டும். இதற்கு முதலில் தானே தனது ஆளமையில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியர் தான்முரணான விழுமியத்தைக் கடைப் பிடித்துக்கொண்டு வேறு விழுமியங்களை மாணவருக்கு புகட்ட முற்படக்கூடாது. மாணவர் முன்னிலையில் ஒரு உதாரண புருஷராக நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்பிக்கின்ற போது அறிவு, திறன் என்பவற்றை ஊட்டுவதில் ஏற்படுகின்ற ஆர்வம், நல்ல மனப்பாங்கை ஊட்டுவதிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். இவற்றைத் திறம்பட மேற்கொள்ள ஆசிரிய மாணவ தொடர்பு மிகவும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும்.

இதனால் தான் என்னவோ கற்பித்தல் கற்றலின் பயன் கற்பித்தல் கற்றல் சந்தர்ப்பத்தில் ஆசிரிய மாணவருக்கிடையே நிகழும் தொடர்பாடற் செயற்பாட்டுக் கோலத்தின் தன்மைக்கமைவாயிருக்கும் என குறிப்பிட்டுள்ளார்கள். எனவே இந்த ஆசிரிய மாணவ தொடர்பு இறுக்கமானதாக இருக்க வேண்டுமானால் ஆசிரியர் மாணவரின் நண்பனாக மாறவேண்டும். "எனது நண்பரல்லாதவரிடமிருந்து நான் எப்படிக் கற்பது" இது ஒரு மாணவனின் உள்ளத்தில் எழுகின்ற அங்கலாய்ப்பு. மேலும் ஆசிரியர் காட்சிக்கு எளியன், கடும் சொல் அல்லனேன். மீ கூறும் மன்னனே" என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளார். இவற்றையெல்லாம் ஒரு ஆசிரியர் தனது மனதில் நிறுத்திச் சிந்திக்கும் போது விழுமியக் கல்வியை வழங்குவதில் தனது பங்கு எப்படிப்பட்டது என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடியும்.

**ஆசிரியப்பணியின் மகத்துவம்**

'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' இது முன்னோர் கூற்று, இன்று ஆசிரிய பணிமேன்மையானது, உன்னதமானது என்பதை எடுத்துக்காட்ட அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் செயற்பாடாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்ற பணிகளுக்கு ஒப்பிடுகிறார். இந்திய அறிஞர் "*Sunanda Ghosh*" என்பவர் அதாவது ஆசிரியர் என்பவர் நல்ல கருத்துக்களை, விழுமியங்களைப் பிள்ளையின் மனதில் உருவாக்குவதன் மூலம் படைத்தல் என்ற பணியையும், அவ்வாறு பிள்ளையின் மனதில் விதைக்கப்பட்டவற்றை தனது கற்பித்தல் திறமையால் வேரூன்றச் செய்து அவை அவனை விட்டகலாமல் செய்வதன் மூலம் காத்தல் என்ற பணியையும் மேற்கொள்கிறார். அத்துடன் பிள்ளையை நன்கு அறிந்து, அவனில்தான் அவதானிக் கின்ற ஒவ்வாத குணங்களைக் களைவதன் மூலம் அழித்தல் என்ற பணியும் மேற்கொள்வதாக வருணிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆசிரியர் அதாவது குரு என்பவர் அழியாத தீவு ஒன்றிலே விடப்பட்ட சீடனுக்கு வழிகாட்டுபவர் என்று இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ளது. விவிலியத்தில் ஆசிரியர் ஒரு நல்லாயனுக்கு ஒப்பிடப் பட்டுள்ளார். ஆசிரிய வாண்மை யானது ஏனைய துறைகளைப் போலல்லாது பல பாத்திரங்களை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்று கலாநிதி சபா ஜெயராசா அவர்கள் தமது "ஆசிரிய இயல்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது 60 இற்கும் மேற்பட்ட பாத்திரங்களை ஆசிரியர் ஏற்று, அதன் மூலம் அவர் ஒரு சிறந்த ஆளுமை உள்ளவராக மாணவர் முன்செயலாற்றும் போது அவர்களுக்கு நல்ல விழுமியக் கல்வியைப் புகட்ட முடியும் என்பது அவரது கருத்தாகும். உதாரணமாக நெடுகாலம் தாயின் அன்பில் தழைத்திருந்த பிள்ளை, தற்காலிகமாகப் பிரிக்கப்பட்டு வகுப் பறைக்கு வரும்பொழுது அத்தாயின் பாத்திரத்தை ஆசிரியர் ஏற்பதன் மூலமே அப்பிள்ளையின் அங்கலாய்ப்பை போக்கி, அவன் நன்கு கற்பதற்கேற்ற வகுப்பறைச் சூழலை ஏற்படுத்த முடியும்.

**முடிவுரை**

மேலே எடுத்துக் காட்டப்பட்ட அம்சங்களை எல்லாம் ஒட்டு மொத்தமாகத் தொகுத்து நோக்குகின்றபோது ஒரு பாடசாலை ஆசிரியர் தனது மாணவர் களுக்கு வெறும் நூற்கல்வியை மட்டுமல்லாது, விழுமியக் கல்வியையும் வழங்குவதில்தனது பங்கை உணர்ந்து செயற்பட முடியும் என்பது கோடிட்டுக் காட்டப்படுகிறது. நிறைவாக இன்றைய கல்வி உலகின் பின்னணியை ஆசிரியர்கள உற்று நோக்குவதன் மூலமும் விழுமியக் கல்வியை வழங்குவதில் தமது கடமைப் பாட்டை உணர்ந்து கொள்ள முடியும். அதாவது இன்றை கலைத்திட்டத்தில் கடந்தகால கசப்பான அனுபவங்களை முன்னைச்சரிக்கையாகக் கொண்டு பல முற்போக்கான அம்சங்கள் விழுமியக் கல்வி தொடர்பாகப் புகுத்தப்பட்டுள்ள போதிலும் அவைநடைமுறையில் மாணவருக்கு புகட்டப்படுவது குறைவு என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். குறிப்பாக இன்றைய போட்டிச் சமூகத்தில் பாடசாலைக் கல்வி என்பது ஒரு பரீட்சைமையக் கல்வியாகவே வியாபித்துள்ளது.

இதனால் விழுமியக் கல்வி என்பது அலட்சியம் செய்யப்படுவதாக உள்ளது. இதனால்தான் மாணவர்களும், பெற்றோரும் வெறுமனே நூற் கல்வியை தனியார் கல்வி நிறுவனங்களில் பெற்றுவிடலாம் என எண்ணிப் பாடசாலைக் கல்வியைப் புறக் கணிக்கப்படுகின்ற நிலை காணப்படுகின்றது இவ்வாறான அவலமான கல்விப் பின்னணியில் பாடசாலை ஆசிரியர்கள் அதிலும் ஆசிரியர் வாண்மை பற்றித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்சார் கல்வி மூலம் உணர்ந்து கொண்டவர்கள். தமது பாட அலகுகளைக் கற்பிக்கின்ற பொழுது அறிவு. திறன் என்பவற்றை வளர்க்க முற்படுகின்ற அதே அளவு ஆர்வத்தை நல்ல மனப்பாங்கை ஊட்டுவதிலும் கடைப்பிடித்து விழுமியக் கல்வி வழங்குவது எமது தலையாய பங்கு என்பதை மனதில் இருத்திச் செற்பட வேண்டும்.

இதன்மூலம் ஆங்கிலேய கல்வி மானான ஓ.எ.ஒய்சர் என்பவர் கூறுவது போல ஆசிரியர் என்பவர் மாணவரின் நடத்தைக் கோட்பாடுகளை வெளியிடுபவரும், அவர் களின் நன்நடத்தையைக் காப்பாற்றுபவரும் என்ற பணியைத் திறம்பட ஆற்றமுடியும்.

**உசாவியவை:**

1. கல்வியின் உளவியற் பின்னணி - பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை தேசிய கல்வி நிறுவனம் - மகரகம

2. பாடசாலைக் கலைத்திட்டத்தில் விழுமியக் கல்வி (பிரசுரிக்கப்படாத கல்வி டிப்ளோமாவுக்காக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரை யாழ்ப்பாணப் பல்கலைககழகம்) வணபிதா. ஞா.பிலேந்திரன்

3. ஆசிரியர் இயல் - கலாநிதி சபா ஜெயராசா - பக்கம் 19

4. *Teachers / Handbook of the course in Human values, Edited and partly Written By*

*Dr. V.K.Gokag and Prop. S.R.Robidekar*

5. வகுப்பறைக் கற்பித்தல் - வ.ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Sitting L-R :** Mrs.T.Karunakaran, Mrs.S.Anantharaja, Mrs.M.Ulaganathan, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mrs.I.Ramachandra, Mrs.S.Rathakrishnan, Mrs.V.Elankovan

**Standing L-R :** Mr.N.Manoranjithan, Mr.A.Sriranjan, Mr.K.Hariharasakthy, Mr.S.Gunaseelan, Mr.I.Mariyathas, Mr.F.Francies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விசார் அலுவலர்கள் - 2011

| பெயர் | பதவி | தகைமை | சேவை | விலாசம் |
|---|---|---|---|---|
| திரு.ம.இக்னேசியஸ் | அதிபர் | BA. (Hons) PGDE M.Ed | SLEAS III | இல 88 கோயில் வீதி யாழ்ப்பாணம் |
| திரு.சி.கருணாமூர்த்தி | உப அதிபர் | Spl.Trd.P.E | SLEAS III | மஞ்சத்தடி இணுவில், சுண்ணாகம் |
| திருமதி.இ.இராமச்சந்திரா | விரிவுரையாளர் | BA. PGDE Dip.in.Eng | SLEAS III | லவ்லேன் உடுவில், சுண்ணாகம் |
| திரு.ஆ.இளங்கோ | விரிவுரையாளர் | B.Sc PGDE M.Ed, M.Phill | SLEAS II | டச் ரோட், அளவெட்டி |
| திருமதி.இ.இராதாகிருஸ்ணன் | விரிவுரையாளர் | Spl.Trd.P.E | SLEAS III | ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி |
| திரு.வ.சி.குணசீலன் | விரிவுரையாளர் | B.Sc. (Hons) PGDE, | S.L.T..S I | விக்னேஸ்வராவீதி, கரவெட்டி |
| திரு.நா.மனோரஞ்சிதன் | விரிவுரையாளர் | BA. (Hons) PGDE, M.A, M.Ed | S.L.T.E.S III | மாசில் அகம், ஆவரங்கால், புத்தூர் |
| திரு.க.ஹரிஹரசக்தி | விரிவுரையாளர் | BA. PGDE, Spl Trd. | S.L.T.E.S III | தொல்புரம் மேற்கு, சுழிபுரம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகை விரிவுரையாளர்கள் - 2011

| பெயர் | பதவி | தகைமை | சேவை | விலாசம் |
|---|---|---|---|---|
| பெ.பிரான்சீஸ் | வருகைவிரிவுரையாளர் | B.A (Hons) Dip in Edu | SLTS I | 859/19, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| திருமதி. ஷ.ஆனந்தராஜா | வருகைவிரிவுரையாளர் | B.F.A Spl.Trd.Art | SLTS 2 II | 128/6 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் |
| திருமதி.வலன்ரீனா இளங்கோவன் | வருகைவிரிவுரையாளர் | B.A (Hons) Dip in Edu MA. Sas | SLTS 2 II | பலாலிவீதி, தபாற்பெட்டி உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் |
| அ.ஸ்ரீரஞ்சன் | வருகைவிரிவுரையாளர் | G.C.E A/L Dip.English | | "குணமணி" இல 41 றக்காலேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் |
| வண.பிதா.ஜீட் நிக்ஷன் | வருகைவிரிவுரையாளர் | GCE A/L, Dip in Ph, B.Th (Rome) | | புனித மைக்கல் ஆலயம் உரும்பிராய், யாழ்ப்பாணம் |
| இ.மரியதாஸ் | வருகைவிரிவுரையாளர் | பயிற்றப்பட்ட மறைக் கல்வி ஆசிரியர் (திண்டிவனம்) விவிலிய டிப்ளோமா (புதுடில்லி) | | வோல்டன் பிலேவல் தும்பலை, பருத்தித்துறை |
| திருமதி.T.கருணாகரன் | வருகைவிரிவுரையாளர் | Dip in Dance spl.Trd | SLTS 2 I | 1229/5 பூநாரிலேன் கொக்குவில் |
| திருமதி.M.உலகநாதன் | வருகைவிரிவுரையாளர் | Dip in Music, Dip in Edu PGDE | SLTS 2 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Sitting L-R :** Mrs.P.Nishanthini, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Mr.R.Srikanthan, Mr.N.Patkunananthan

**Standing L- R :** Mr.Achuthan, Mr.S.Thangavelu, Mr.S.Vijayaruban, Mr.Mayuran, Mr.V.Thayalasivam, Mr.S.Arumainayagam, Mr.N.Arumugasamyniyanar, Mr.S.Pradeeban

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி வாணிஸ்ரீ மணிவண்ணன்

# இறை உறவு

"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் **உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன் உமது** கிரியைகள் அதியமான **வைகள், அது** என் **ஆத்மாவுக்கு நன்றாய்த் தெரியும்"** (சங்கீதம் 139:14)

இறைவனோடு மனிதனுக்கு இருக்கின்ற ஆழமான தொடர்பு நிலையே இறை உறவு எனப்படும். (தொடக்க நூல் 1:27) இன் படி மனிதன் இறை சாயலாக படைக்கப்பட்டவன். ஆவி, ஆத்மா, சரீரம் உடையவன் மனிதன். எனவே நான் இறைவனோடு உறவை வைத்திருக்க மனிதனால் மட்டுமே இயலும்.

## ஏதேனில் இறைவன்

இறைவனால் முதலில் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளுடன் ஏதேன் என்னும் அழகிய தோட்டத்தில் தேவனாகிய கடவுள் மனிதனோடு ஒரு நெருங்கிய உறவை பேணி வந்தார். இங்கு தந்தை மகன் உறவு நிலையே கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்து வந்தது. எனவே தான் இறைவன் தன் படைப்புக்கள் அனைத்தையும் பயன் படுத்தவும், பாதுகாக்கவும் அவற்றை ஆளவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்களை ஆசிர் வதித்தார். (ஆதியாகமம் 1:28)

## மனிதனும் சாத்தானும்

கடவுளின் பிரதான தூதர்களில் ஒருவனாக இருந்து பின்னர் பாதாளத்திற்கு தள்ளப்பட்ட சர்ப்பமாகிய சாத்தான் ஏவாளிடம் சென்று பல பொய்களைச் சொன்னான் இதை நம்பிய ஏவாள் இறை உறவை இழந்து சாத்தானால் வஞ்சிக்கப்பட்டாள், ஏவாள் மூலம் ஆதாமும் வஞ்சிக்கப்பட்டான் இருவருமே இதனால் இறை உறவு, இறை ஆசி, இறை வல்லமை போன்ற பலவிதமான ஆசிகளை இழந்தனர். இங்கு கடவுளின் ஆசீர்வாதமான உறவை விட்டு சாத்தானுடன் சாபமான ஒரு உறவை ஏற்படுத்தினார்கள். மனு குலத்திற்கே சாவுமணி அடித்தான் சாத்தான் ஏனெனில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்கிறது திருவிவிலியம்

## பாவமும் சாபமும்

முதல் மனிதனின் கீழ்படியாமையினால் பாவமும் சாபமும் மனு குலத்திற்குள் பிரவேசித்தது. எனவே இறைவன் பரிசுத்தர் இதனால் பாவமுள்ள மனுசனுக்கு பரிசுத்த இறைவனோடு இறை உறவைப்பேண முடியாமல் போய்விட்டது. ஆதாம் ஏவாளின் சந்ததி இப் பூமியில் பலுகி பெருகத்தொடங்கியது. இம் மண்ணின் மனிதர் பெருகத்தொடங்க கூடவே பாவமும் பெருகி தீய கனிகளை திரளாகக் கொடுக்க லாயிற்று **மனிதரின் வழிகளை ஆண்டவர் அறிவார் இளமை தொட்டே அவர்களின் வழிகள் தீமையை நாடுகின்றன.** (சீராக் 17:16) இதனால் இறை உறவிலிருந்து மனிதன் மென்மேலும் விலகிச்சென்று கொண்டிருந்தான்.

## இளமை இறை மனித உடன்படிக்கை

இறைவன் அளவற்ற அன்புள்ளவர் நோவாவின் காலத்திற்கு பின்னர் ஆபிரகாம் என்ற ஒரு இறைபயம் உள்ள மனுஷனை தெரிந்து அவனுடன் ஒரு உடன்படிக்கையை செய்து இறை உறவை ஏற்படுத்தினார். இதன் மூலம் இஸ்ராயேல் என்கிற ஒரு சந்ததியை ஏற்படுத்தி அவர்களுக்கு மோசே என்கிற ஒரு தலைவனையும் நியமித்து 10 பிரதான கட்டளைகளை கொடுத்தார். இக் கட்டளைகளை பின்பற்றுவதனூடாக இறை மனித உறவு நிலை நிற்க உதவினார் ஆனாலும் சிலர் தவிர ஏனையவர்கள் இதற்கும் கீழ் படிந்து நடக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலக மீட்பர் இயேசு**

எனவே காலத்திற்கு காலம் தம் இறைவாக்கினர் வழியாக பேசிய இறைவன் இறுதி காலத்தில் தன் மகன் வழியாக பேசினார் "இழந்து போனதைதேடியும் அதை பெற்றுக் கொடுக்கவுமே மானிட மகன் இப் பூமிக்கு வந்தார்" இறைவார்த்தைக்கு இணங்க மனுகுலம் இழந்து போன அத்தனை ஆசிகளையும் கிறிஸ்து இயேசு மீண்டும் மனு குலத்திற்கு பெற்று கொடுத்தார் **"பாவத்தின் விளைவு மரணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையோ நித்திய ஜீவன்"** எனவே கிறிஸ்து இயேசுவின் மூலம் மனுகுலம் இறை உறவில் இணைந்து அவன் மரித்தாலும் நிலை வாழ்வை பெற்று கொள்ள முடியும். (யோவான் 3:16) கூறுகிறது. "தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அழிந்து போகமல் நிலை வாழ்வை பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு உலகின் மீது அன்பு கூர்ந்தார்" என்கிறது திருவிவிலியம். **"திருவிவிலியத்தை அறியாதவன் இறைவனை அறியாதவன்" என்ற புனிதர் இரேனியுஸின் கூற்றுக்கு இணங்க**

ஒவ்வொரு தனி மனிதனும் இறை வார்த்தையை கற்பதனூடாக இறைவனை அறிந்து இறை உறவை ஏற்படுத்த முடியும் இவ் உறவை வளர்ந்து கொள்ள ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்தவுடன் பரிசுத்த திருவிவிலியத்தை வாசித்து அதை தியானித்து தூய ஆவியானவரின் உதவியுடன் ஜெபம் செய்தால் இறைவனோடு இசைந்த வல்லமையான மகிழ்ச்சிகரமான ஒரு வாழ்ககையை வாழ முடியும்.

**"என்னை நோக்கி கூப்பிடு நீ அறியாததும் எட்டாததுமான காரியத்தை நான் உனக்கு அறிவிப்பேன்"** (எரேமியா 33:3) என அதை திருவிலியம் உறுதிப் படுத்துகிறது.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. வதனி நித்தியானந்தன்

# ஞான நூலிலிருந்து

ஆதாம் ஏவாளுடன் ஆரம்பமாகிய மனித இனம் பல கோடி ஆண்டுகளைக் கடந்து இன்றும் வழி வழியாக பரவிக் கொண்டிருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் இயந்திரமாகிப் போன மனித வாழ்வியலில் எத்தனையோ மேடு பள்ளங்கள். நாம் தடுக்கி விழுகின்றோம் சில வேளை சதியால் வீழ்த்தப் படுகின்றோம் வீழ்வது ஒரு தவறல்ல வீழ்ந்து கிடப்பதே தவறு. வீழ்ந்தால் மீண்டும் எழ வேண்டும் வீணே எதற்கு அழ வேண்டும் என்று பாடி வைத்தான் அன்றொரு கவிஞன் சூழ்ச்சி நிறைந்த உலகில் தன்னம்பிக்கையுடன் வெற்றி பெற ஞான நூலிலிருந்து ஞான மிகு வார்த்தைகள் சில......

- தக்க நேரம் பார்: தீமையைக் குறித்து விழிப்பாயிரு:உன்னைப் பற்றியே நாணம் அடையாதே.
- பாகுபாடு காட்டி உனக்கே கேடு வருவித்துக் கொள்ளாதே பணிவின் பெயரால் வீழ்ச்சி அடையாதே.

- பேச வேண்டிய நேரத்தில் பேசாமல் இருந்து விடாதே

- ஞானம் பேச்சில் புலப்படும்: நற்பயிற்சி வாய் மொழியால் வெளிப் படும்

- உண்மைக்கு மாறாகப் பேசாதே: உன் அறியாமைக்காக நாணம் கொள்

- மூடருக்கு அடிபணியாதே: வலியோருக்கு பாகுபாடு காட்டாதே

- இறக்கும் வரை உண்மைக்காகப் போராடு: கடவுளாகிய ஆண்டவர் உனக்காகப் போரிடுவார்

- பேச்சில் துடுக்காய் இராதே: செயலில் சோம்பலாகவும் ஈடுபாடின்றியும் இராதே.

- வீட்டில் சிங்கம் போல் இராதே: பணியாளர் முன் கோழையாய் இராதே

- வயிறு எல்லாவகை உணவு களையும் உட்கொள்கின்றது எனினும் ஒரு வகை உணவு மற்றொன்றை விட மேலானது

- வேட்டையாடிய உணவை நாக்கு சுவைத்து அறிகின்றது அறிவுக் கூர்மை கொண்ட உள்ளம் பொய்யைப் பிரித்தறிகின்றது

- மனக் கோட்டம் கொண்டோர் வருத்தத்தைக் கொடுப்பர் பட்டறிவு கொண்டோர் அவர்களுக்கு எதிரடி கொடுப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ச.செபஸ்டியன்

# புத்தகம்

அறிவாற்றலின் சேமிப்பு நீ
அறிவுடையோரின் வழிகாட்டி நீ
கற்றோருக்கு விருது நீ
கல்லாதோரின் கனவு நீ!
அட்டைக்குள் மறைந்திட்ட
அற்புத ஓவியம் - நீ!
நூலகத்திலிருந்து கொண்டே நுண்ணறிவை
நுண்ணறிவை வளர்க்கும் சக்தி நீ.

ஆற்றல்களின் வழிகாட்டி நீ!
ஆன்றோரின் சான்று நீ
ஒவ்வொருவரின் நிலைக்குமாய்
உருமாறும் ஓவியம் - நீ!

திருவள்ளுவரின் கையில் - நீ!
இருவரிக் குரலானாய்.
பாரதியின் கையில் - நீ!
பார்போற்றும் கவியானாய்.


சட்டமியற்றும் வல்லுனர்களில் - நீ!
சட்டமாய் மாறுகின்றாய்
வைத்தியம் கற்போர் கண்ணுக்கு
வைத்தியராய் ஜொலிக்கின்றாய்.

கவிஞர்களின் கையில் - நீ
கவிதை நூலாய் மாறுகின்றாய்
எழுத்தாளர் கையில் - நீ!
எழில் காவியமாகின்றாய்.

புரட்சிக்காரரின் எழுத்தில் - நீ!
புதுயுகம் படைக்கின்றாய்
வரலாறு தேடலில் - நீ!
வழிகாட்டியாகின்றாய்.

கற்கும் மாணவர்களுக்கு நீ!
கல்வியாய் மாறுகின்றாய்
சொல்வன்மை கொண்டோருக்கு நீ!
சொற்களஞ்சியமாகின்றாய்.

இத்தனையும் அகம்கொண்டு
இவ்வுலகம் கண்ட புதுமை நூலே
புத்தகமாய் உன்னை பலர் கண்டாலும்
புதுயுகமாய் தினம் மலரும்
புத்தருவி நீ தானே..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி மலர்வேணி நவராஜ்

# சிந்தனைத்துளி

கல்விக்கடலில் ஓர் சிறந்த ஆசிரியர்

'பிள்ளை ஒரு சிறிய மனிதன் அல்ல அவன் காண்பது, சிந்திப்பது, உணர்வது, செயற்படுவது வயது வந்தவரை விட வேறுபட்டதாகும்'

என்று கல்வி தத்துவவியலாளர் ரூ சோவும்

"பிள்ளைகளின் ஆசைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்ப கற்பித்தல் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்று கல்விதத்துவியலாளர் பெஸ்டலோசியும்"

"மாணவருக்கு சுயமாக கற்பதற்கு தேவையான சுதந்திரமும் சூழலும் உருவாக்கப்படவேண்டும்"

என்று கல்வி தத்துவவியலாளர் மொண்டி சூரியும் கூறி வைத்ததற்கு இணங்க ஓர் ஆசிரியர் பல கடப்பாடுகளை பின்பற்ற வேண்டியவராக இருக்கின்றார் அவற்றில் சில துளிகள்.....

துளி 1: கற்பித்தற் தொழிலில் ஈடுபடும் எவரும் அதற்குரிய மனப்பாங்கு அதற்கான அர்ப்பணம் அதனிடத்தில் மனப்பூர்வமான கடமையுணர்ச்சி ஆகியவற்றை கொண்டிருத்தல் அவசியம் விசுவாசம் நிறைவான கமையுணர்ச்சி ஆகியவற்றை கொண்டிருத்தல் அவசியம்

துளி 2: தன்னிடத்தே கற்கும் மாணவர்களிடத்தில் அக்கறையுடன் அவர்களுடைய வளர்ச்சிக்காக உழைக்க தயாராக இருக்க வேண்டும்.

துளி 3: ஆசிரிய தொழிலின் கல்வி விழுமியங்களை மதிப்பவராகவும் சிறந்த கல்வி முகாமையாளராகவும் திகழ வேண்டும்.

துளி 4: மனித பௌதீக வளங்களில் மிக அரிதான வளமான நேரத்தின் பயன்பாட்டிற்கு மதிப்பளித்து திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆசிரியர் சிறப்பாக செயற்பட வேண்டும்.

துளி 5: சமூகத்தின் மத்தியில் சமூகத்திற்காக ஆற்றப்படும் ஆசிரிய சேவையானது ஒவ்வொரு கணமும் சமூகத்தின் கூர்மையான பார்வைக்கு இலக்கானது என்பதை ஆசிரியர் மறக்கலாகாது.

துளி 6: காலத்திற்கேற்ற கல்வியை வழங்குவதற்கு அக்கல்வியை வழங்கும் ஆசிரியர் அதற்கேற்ற அறிவை கொண்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர் எனும் விளக்கிற்கு அறிவு எனும் நெய் வார்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளி 7: மாணவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தடைகள் என்பவற்றையும் தாண்டுவதற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது ஓர் நல்லாசிரியருடைய பணியாகும்.

துளி 8: ஆசிரியர் என்ன தோற்றத்தில் காட்சியளித்தாலும் அவருடைய கடமை தன்னிடத்து ஒப்புவிக்கப்படுகின்ற மாணவ சமூகத்தின் நலனை கருத்திற்கொண்டு அதற்கேற்ப செயற்படுவதேயாகும்.

துளி 9: ஒரு பாடசாலையின் கல்வித்தரம் உயரவும் கல்வி ஏற்பாடுகள் ஆக்கம் பெறவும் ஆசிரியரின் ஆளுமைத்திறன்கள் கல்விப்பணிகள் பாடசாலை சமூகத்தில் அவர்வகிக்கும் மதிப்பு என்பன மிக முக்கியமானது என்பதை ஓர் ஆசிரியர் உணர வேண்டும்

துளி 10: ஒரு நாட்டின் உயர்வும் மாணவர்களின் அறிவும் ஆசிரியர்களினது விருத்தியில் தங்கியுள்ளது ஆகவே நெறி புரழ்வான மாணவர்களை இனங்கண்டு அவர்களை நெறிப்படுத்துவதும் ஓர் சிறந்த ஆசிரியரின் பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
திரேசாம்மாள் போல் பெரேரா

# மனித நேயம் (Humanism)

மனித நேயச் சிந்தனைகளை புலப்படுத்துவதற்கு பல்வேறு கல்வியாளர்களின் கூற்றுக்கள் அதிகமாக காணப்படுகின்றது. மனித குலத்தின் மேம்பாட்டை வளர்த்தெடுப்பதற்காக சிற்சில சிந்தனைகள் முக்கிய மூலமாக விளங்குகின்றது. அதே வேளை மனித நேயம் என்பது மனிதனோடு தொடர்புடைய ஒரு வகையான தத்துவக் கோட்பாடாகும். மனித நேயக் கோட்பாட்டினை மனித இனத்திற்கான நலக் கோட்பாடு என்றும் " மக்களின் நலக்கோட்பாடு" என்றும் கூறுவது சிறந்ததாகும். எனவே "மனித நேயம்" என்பதை ஆங்கிலத்தில் *(Humanism)*

உலகில் பிறந்து அனைத்து மக்களையும் சாதி, சமய, வேறுபாடுகள் இன்றி சகலரையும் சமமாக கருதுவது மனித நேயக் கோட்பாட்டின் அடிப்படை அம்சமாகும். ஆதலால் தான்

"யாதும் ஊரே யாவரும் கேளீர்"

என்ற வரி மனித நேயத்தின் ஆணி வேராகின்றது. சமூக சமத்துவம் என்ற மனித நேயத்தின் உணர்வினூடாக நாம் அனைவரும் அன்பை வளர்க்க வேண்டும். மனித நேய உணர்வுகள் அனைத்திற்கும் அன்பு நெறியே அடிப்படையாக விளங்குகின்றது. நாம் கடவுளிடத்தில் காட்டுகின்ற பக்தி முக்கியமல்ல மாறாக ஏழைகள் மேல் காட்டும் இரக்கத்திற்கும் உயிரினங்களிடையே காட்டும் ஜீவகாருண்யத்திற்கும் அன்பே ஆதாரமாக விளங்கு கின்றது.

மனித நேயத்தை நாம் எமது மத்தியிலும், எமது எதிர்கால சந்ததிக்கும் விளங்குமாறு வழிப்படுத்த வேண்டும்."மனித நேயம்" என்பது மனிதர்களிடையே காணப்படும் நற்பழக்கங்களான அன்பு, இரக்கம், கருணை. பணிவு, பெரியோரை மதித்தல் ஏனையோருக்கு உதவுதல் என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

மனித நேயம் அற்ற ஓர் சமூகத்திலே நிம்மதியின்மை வாழ்க்கையில் பல்வேறு தடைகள் உருவாகக் கூடும். இது மனித தத்துவத்தையே அழித்துவிடும் மனித நேயம் ஒரு தனி மனிதனின் ஊடாக குடும்பம் ஒன்றினூடாக சமூகத்தினூடாக ஆரம்பமாக வேண்டும். இந்த மனித நேயம் நாடு நாடுகளிற்கிடையே, கணவன், மனைவிக்கிடையே, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே தோற்றம் பெற வேண்டும். பெற்றோர் பிள்ளைகளை சிறு வயதிலிருந்தே நற்பழக்கங்கள் ஊடாக வளர்த்து உருவாக்கும் போது " மனித நேயம்" சமூகத்திலே மிளரக்கூடியதாக உள்ளது.

மனித நேயம் அற்ற ஒரு நிலையிலேதான் பல்வேறு பிளவுகள் கருத்து முரண்பாடுகள் என்று உருவாகி அவை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. சிறிதளவு குறைத்துக் கொண்டு செல்ல வேண்டுமானால் ஒரு சிறிய சொல்லான "*(Humanism)*" மட்டுமே தீர்வாக அமைகின்றது.

உன்னை முதலில் திருத்து
உலகம் தன்னால் திருந்தும்

என்பதே எனது கூற்றாகும். நான், நீ, நீங்கள், அனைவரும் என்று மனித நேயம் செயற்பாட்டினூடாக செயற்படுமானால் நிம்மதியான, சுபீட்சமான, சிறந்த நற் சமூகம் ஒன்றை நாம் காணமுடியும்.

உன் சுயநலத்தை விட்டுவிடு - மனிதா!
மனிதநேயத்தை வளர்த்துக் கொள்!
மனிதா வாழ்க்கையிலே - நீ
வருந்தி நிற்காதே!
கடந்து வந்த வாழ்க்கையில் - நீ
வெற்றியை நினைந்து - களிக்கூர்ந்து கொள்
தோல்வியை நினைந்து - என்றும் நீ
துவண்டு விடாதே!
ஒவ்வொரு பொழுதும் கழியும் போதும்.
உன் ஆயுற்காலம் கழிவதையே
உணர்ந்துகொள்!
கனவு வாழ்வை மறந்துவிடு - மனிதா!
உன் வாழ்வை மனித நேயத்துடன் கொண்டு
செல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி
கிரிசிந்தியா நில்மினி கஜேந்திரன்


# 2ஆம் வத்திக்கான் சங்கமும் 16 கொள்கைத் திரட்டுக்களும்

உலகமானது பொருளாதார, கலாசார அரசியல், விஞ்ஞான ரீதியாக வளர்ச்சியடைந்த போதும் திருச்சபை ஆனது இவை எல்லாவற்றிற்கும் ஈடுகொடுக்க முடியாமல் பின் தங்கிய நிலையிலேயே இருந்தது. மாற்றங்கள் காணப்படவில்லை. திருச்சபை தன்னைத் தானே மூடி வைத்தது. இதிலிருந்து திருச்சபை விடுபடவும் திருச்சபைக்குள் புதிய காற்று வீசட்டும் என்பதற்கமைய பொது நிலையினரையும் உள்ளடக்கும் நோக்குடனே கூட்டப்பட்டதே இச்சங்கமாகும்.

இவ் 2ஆம் வத்திக்கான் சங்கமானது 11.10.1962 இல் கூட்டப்பட்டு 8.12.1965 இல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.வத்திக்கான் நகரில் தூய பேதுரு தேவாலயத்தில் கூட்டப்பட்டது. இரண்டாவது தடவையாய் வத்திக்கானில் கூட்டப்பட்டமையினால் இது 2ம் வத்திக்கான் சங்கம் எனப் பெயர் பெற்றது. இதில் 2900 இற்கும் மேற்பட்ட ஆயர்கள் கலந்த கொண்டனர்.

இச்சங்கமானது 23 ஆம் அருளப்பர் பாப்பரசரினால் ஆரம்பிக்கப்பட்டு 6ம் சின்னப்பரினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. முதலாவதாய் மக்களின் குரல் ஒலித்தது இச்சங்கத்திலேயே "உலகோடு உறவாடும் திருச்சபை" இதன்முக்கிய குறிக்கோளாகும். மேலும் உலகிலுள்ள எல்லா ஆயர்களும், நிபுணர்களும் இறையியலாளர்களும், (துறைசார்) விவிலிய வல்லுனர்களும் இவ்வத்திக்கான் சங்கத்தில் அங்கத்துவம பெற்றனர். இச்சங்கத்தில் 16 கொள்கைத் திரட்டுகள் முக்கியம் பெறுகின்றன. இவற்றினை 4 வகையாகப் பிரிக்கலாம்.

1. கோட்பாடு சார்ந்தவை - 3
2. கொள்ளை சார்ந்தது - 1
3. விதித் தொகுப்பு சார்ந்தது - 9
4. அறிக்கைகள் சார்ந்தது - 3

போன்றவையாகும். இனி 16 கொள்கைத் திரட்டுக்களையும் விரிவாக நோக்குவோமாயின், அவை பின்வருவனவாகும்

### 2ம் வத்திக்கான் சங்கத்திலுள்ள 16 கொள்கைத் திரட்டுக்கள்

1. திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு - 21.11.64

2. இறைவெளிப்பாடு பற்றிய கொள்கைத் திரட்டு - 18.11.65

3. திருவழிபாடு பற்றிய கொள்கைத் திரட்டு - 04.12.63

4. இ.உல. திருச்சபையின் மேய்ப்புப்பணி - 07.12.65

5. திருச்சபையில் ஆயர்களின் மேய்ப்புப்பணி - 28.10.65




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. திருச்சபையின் மறையறிவிப்பு பற்றிய தீர்வுத்தொகுப்பு - 07.12.65

7. கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றிய தீர்வுத் தொகுப்பு - 21.11.64

8. கத்தோலிக்க திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு - 21.11.64

9. குருக்களின் பணி வாழ்வு பற்றிய கொள்கைத் திரட்டு - 07.12.65

10. குருத்துவப் பயிற்சி பற்றிய கொள்கைத் திரட்டு - 28.10.65

11. தழுவியமைத்து துறவறவாழ்வை புதுப்பித்தல் - 28.10.65

12. பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி - 18.11.65

13. சமூகத் தொடர்புக் கருவிகள் - 04.12. 63

14. மறைச் சுதந்திரம் பற்றிய அறிக்கை - 07.12.65

15. கிறிஸ்தவமல்லாப்பிறமறைகளுடன் திருச்சபைக்குள்ள தொடர்பு - 28.10.65

16. கிறிஸ்தவ கல்வி பற்றிய அறிக்கை - 28.10.65

இவையனைத்தும் திருச்சபைக்குள்பொது நிலையினருக்கும் உரிமை வழங்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்டவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி மாலினி உலகநாதன்
பகுதிநேர விரிவுரையாளர் (சங்கீதம்)

# பாடசாலை மாணவர்களிடையே நடைபெறும் பல்வேறுபட்ட துறைசார்ந்த போட்டி நிகழ்வுகளும் நடுவு நிலைமையும் பற்றிய ஓர் கருத்து வெளிப்பாடு

நான் ஆசிரியர் பணிக்குள் புகுந்து இன்று இருபத்து மூன்று வருடங்களைக் கடந்து வந்துள்ளேன். இவ்வளவு காலத் துக்குள் பல துறை அனுபவங்களைப் பெற்றுள்ளேன். அவற்றுள் முக்கியமானது மாணவர்களிடையே இதுவரை காலமும் நடைபெற்று வருகின்ற பல்வேறுபட்ட துறை சார்ந்த போட்டி நிகழவுகளாகும்.

நானும் பல போட்டி நிகழ்வுகளைக் கண்டுள்ளேன். மேடையேற்றியுள்ளேன், வெற்றியீட்டியுள்ளேன், தோல்விகளையும் சந்தித்துள்ளேன். பல்வேறு துறை சார்ந்த பெரியோர்கள், ஆசிரியர்கள். மாணவர் களுடன் அனுபவங்களைக் கேட்டுப் பகிர்ந்து கொண்டேன். பல சந்தர்ப்பங்களில் மாணவர் களையும் ஆசிரியர்களையம் தேற்றி யுள்ளேன். இதைவிட நானும் பல போட்டி களுக்கு நடுவராகவம் கடமை புரிந்தேன். போட்டி நிகழ்வுகளில் காணப்பட்ட குறை பாடுகளை அவதானித்தேன். அனுபவித் தேன். என்னோடு கடமை புரிந்த நடுவர்களின் மனநிலைகளைப் புரிந்து கொண்டேன். நேரில் பலவற்றைப் பார்த்தேன். இதைவிட நிறையக் கேள்விப்பட்டேன்.

இதனால் பாடசாலை மாணவர் களிடையே நடாத்தப்படும் போட்டிகளுக் கான பெறுபேறுகள் சரியான முறையில் சென்றடைகின்றதா? என்பதில் மிகவும் மனவருத்தமடைகின்றேன். இந்த நிலை வருங்காலங்களில் தொடரக்கூடாது என்று ஆதங்கப்படுகின்றேன். எனவே மாணவர் களுக்கு அரசினாலும், தனியார் நிறுவனங் களாலும் நடாத்தப்படும் சகலவிதமான போட்டிகளைப் பற்றியும் தான் கூறுகின்றேன்.

யார் நடத்துகின்ற எந்தப் போட்டி யாக இருந்தாலும் அதில் உண்மைத் தன்மை இருக்க வேண்டும். மாணவர்கள் சரியான முறையில் தரப்படுத்தப்பட வேண்டும்.

முதலில் போட்டிக்கான சுற்றுநிருபம் எல்லோரும் வாசித்து விளங்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் போட்டியை நடாத்துபவர்கள் நடாத்த முன்வர வேண்டும். சுற்றுநிருபத்தில் மயக்கமான வசனப் பிரயோகங்கள் இடம்பெறக்கூடாது. சுற்று நிருபத்துக்கமைவாகவே போட்டி திட்டமிட்ட படி நடாத்த வேண்டும்.

அடுத்து சுற்று நிருபங்கள் சகல பாடசாலைகளுக்கம் ஒரே காலப்பகுதயில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சில பாடசாலைகளுக்குச்சுற்று நிருபம் அனுப்பப்படுவதில்லை. தனியார் பாடசா லைகள் இந்த விடயத்தில் பல சிரமத்தைச் சந்தித்துள்ளார்கள். வேறு சில பாடசா லைகள் நிழல் பிரதிகளைத் தாமாகவே யாரிடமும் கேட்டறிந்த பெற்றுக் கொள் கிறார்கள். உரிய காலத்தில் கிடைக் காமையால் பின்னடைவுகள் ஏற்படவும் ஏதுவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பாடசாலைகள் சுற்று நிருபம் எப்போது வெளிவரும் என்று காத்திருந்து தனிப்பட்ட செல்வாக்கு மூலம் மற்றைய பாடசாலைகளுக்குக் கிடைக்க முன்னரே பெற்று விடுகிறார்கள்.

இதனால் தம்மை முன்னதாகவே தயார்ப்படுத்திக் கொள்கின்றார்கள். இந்த நிலைமைகளில் மாற்றம் வேண்டும். போட்டிகள் யாவும் போட்டியாகவே இருக்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் முதல் இடம் கிடைக்கும் மாணவர், தங்கப்பதக் கங்களைப்பெறுகின்ற மாணவர், பணப் பரிசில்களைப் பெறும் மாணவர்கள் எவ்வளவு தூரம் கௌரவிக்கப்படுகிறார்கள். இது உரிய முறையில் சில வேளைகளில் சென்றடையாவிட்டால் பாதிக்கப்படுப வர்கள். சம்பந்தப்பட்ட மாணவர்களும் ஈடுபடுத்திய ஆசிரியர்களும் தான். ஆகவே நம்பகத்தன்மையுடனான செயற்பாடுகள் தான் அவசியமானது.

மாணவர்கள் முதலில் போட்டி களுக்காக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இது பாடசாலை மட்டத்தில் முதல் தெரிவு இடம்பெறும் இங்கே மிக அவதானமாக வயதெல்லைக்கேற்ப பிரிவுகளுக்கேற்ப தெரிவுகள் இடம்பெறவேண்டும். பல மாணவர்கள் எந்த விதமான போட்டி நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளாத சந்தர்ப் பங்கள் நிறையக் காணப்படுவதும் கவனிக்கப்பட வேண்டியது.

சில பாடசாலைகளில் உயர் அதிகாரிகள் அல்லது உத்தியோகத்தர்கள் அதிபர்கள், ஆசிரியர்களின் பிள்ளைகளை எப்படியும் தெரிவு செய்வார்கள். பண வசதி படைத்தவர்களைத் தெரிவு செய்வார்கள். வறுமையான மாணவர்களும், திறமையான மாணவர்களும் சில வேளைகளில் தவிர்க்கப்படுகிறார்கள். சகல மாணவர் களையும் சமனாகப் பார்க்கிறவர்களாக ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

சில பாடசாலைகளில் மாணவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ள விரும்பு வதில்லை. காரணம் தங்களுக்கு வெற்றி கிடைக்காது என்ற மனப்பாங்கு. போட்டி களில் பங்கு கொண்டால் தமது கல்வி வீணடிக்கப்படும் என்ற மனநிலை. சில பெற்றோர்கள் போட்டிகளில் பங்குகொள்ள அனுமதிக்காத நிலை, இதைவிட பாட மாக்கும் தன்மை, தேடும் தன்மையில் விருப்பம் குறைந்தவர்களாக இருப்பார்கள். இவர்களை ஆசிரியர்கள் வலிந்து பிடித்து பழக்கும் நிலையும் காணப்படுகின்றது.

வேறு சில இடங்களில் எங்களைப் போட்டிகளில் பங்குபற்ற அழைக்க வில்லையே என்று ஏங்கும் மாணவர் களையும் காண முடிகின்றது. இவற்றுக் கெல்லாம் உரிய தீர்வுகள் கிடைக்க வேண்டும்.

சில தனியார் நிறுவனங்கள் போட்டிகளை நடாத்தும் போது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, ஆக்கங்களை அனுப்பி வைக்கவும் என்று முகவரியைத் தருவார்கள். உண்மையில் மாணவர்களால் அனுப்பப் படும் ஆக்கங்கள் எல்லாம் சொந்தக் கற்பனையிலானதா? மாணவனின் சிந்தனை வெளிப்பாடா? என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது. சில விடயங்கள் அந்த ஊர்ப் பெரியவராலோ அல்லது புலமை மிக்கவர்களினாலோ எழுதப்பட்டோ, வரை யப்பட்டோ ஆக்கங்கள் மாணவரின் பெயர் பொறித்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இங்கே மாணவனுக்கா? ஆசிரியருக்கா? புலமை வாய்ந்த பெரிய வருக்கா பரிசில் என்பது புரியாத ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி நடாத்தப்படும் தினத்திலே மாணவனை நேரடியாக தலைப்புகளுக்குரிய ஆக்கத் திறமைகளை வெளிப்படுத்த வைத்து பரிசில்கள் வழங்குவதுதான் சிறந்த முறையாகும்.

எதிர்வரும் காலங்களில் மாண வனை மையமாகக் கொண்ட போட்டிகளை நடாத்த முன்வரவேண்டும்.

அடுத்து முக்கியமான அம்சமாகக் கருதப்படபவர்கள் நடுவர்கள். இவர்களைத் தெரிவு செய்வது நல்ல முறையில் இடம்பெற வேண்டும். நடுவர் பணி என்பது சாதாரண பணி அல்ல. நடுவு நிலைமை என்பது மிகவும் உன்னதமான உண்மைத் தன்மை வாய்ந்த பணியாகும். இப்பணிக்கு அமர்த்தப்படுபவர்கள் நீதி தவறாது சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல தெய்வீகத் தன்மையோடு நேர்மையாகச் செயற்பட வேண்டும்.

இப்பணிக்கு வருபவர்கள் தங்க ளைச் சரியான முறையில் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். மன ஒருங்கிணைப்புடன் செயற்பட வேண்டும். ஒரு சத்திரசிகிச்சை நிபுணர் எவ்வாறு சத்திரசிகிச்சையில் அவதானமாக இருப்பாரோ அதேபோல நடுவர்கள் இருக்க வேண்டும்.

தமது சுய பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு கடவுளுக்குச் சாட்சியாகப் பணியை நிறைவேற்ற நினைக்க வேண்டும். ஏனோ, தானோ மனப்பாங்கு மற்றவர்களை விழுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு மாற வேண்டும். பணிக்கு அமர்த்தி விட்டார்களே என்றோ? பணத்துக்காகவோ? செயற்படக் கூடாது. எனது உறவு, எனக்கு வேண்டியவர், தெரிந்தவர், அதிகாரிகளின் பிள்ளை என்றெல்லாம் நினைக்கக்கூடாது.

அத்துடன் பணியில் அமர்த்தப்படு பவர்கள் அந்தந்தத் துறையில் நல்ல புலமை மிக்கவராக இருக்க வேண்டும். போட்டி விதிகள் தெரிந்தவராக இருக்க வேண்டும்.

சில அதிகாரிகள் போட்டி நடாத்தி முடித்தால் காணும் என்று வந்தவர், நிண்டவர், கண்டவர் எல்லாரையும் இந்தப் போட்டிக்கு கொஞ்ச நேரம் நடுவராகப் பணிபுரியுங்கள் என்று திடீரென அமர்த்தக் கூடாது. அதோடு போட்டிக்கு மாணவர்களை அழைத்து வரும் ஆசிரியர்களையும் அவமரியாதை செய்யவும் கூடாது. "எல்லாம் வெளியாலை போ" என்று அதட்டிக் கலைப் பார்கள். இந்த வேளையில் ஆசிரி யர்கள் ஆயினும் கேவலமாக மதிக்கப்படு வதைக் காணமுடிகிறது.

ஏதோ போட்டியை நடத்தி முடித்தால் காணும் என்று நிற்பார்கள். இவை எல்லாம் மாற்றமடைய வேணும். மாணவர்கள் அதிகாரிகளையோ, நடுவர்க ளையோ கீழ்த்தர நிலையில் எடைபோட விடலாமா? சிறிய விடயம் என்றாலும் சரியான முறையில் மாணவனைச் சென்றடைய வேண்டும்.

சில நடுவர்கள் தங்களின் மூத்த ஆசிரியர்களுக்குப் பயந்து அவர்களின் பிள்ளைகளுக்குப் புள்ளிகளை வழங்குவது ஒவ்வொரு நடுவரும் தான் உங்களுக்கு முதலாவது தான் போட்ட நான் அவை என்ன போட்டினமோ? தெரியாது என்று போட்டி நடக்கும்போது ஆசிரியர்கள் தங்களின் பிள்ளைகள் பங்குபற்றும் இடத்துக்கு வந்து நடுவர்களைப் பார்த்துச் சிரித்தவுடன் புள்ளிகளை அள்ளி வழங்கக்கூடாது. சில வேளைகளில் பெரிய பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்றெல்லாம் புள்ளிகள் போட நினைப்பார்கள். இதைவிட எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கும் ஏதோ ஒரு இடம் கொடுக்க வேணும் என்பார்கள். இப்படி நினைத்தால் அது போட்டி இல்லை என்பதை விளக்கத்தெரியவேண்டும்.

சில போட்டிகளில் அதிகமான தொகை அதாவது 20 -100 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கூட ஒரு நடுவர் குழு தொடர்ச்சியாக மதிப்பிட்டை மேற் கொள்ளும். இது சரியானதா? உண்மை யாகச் சிறந்த மாணவனை இப்படி இருந்து தெரிவு செய்வது நியாயமற்றது. இப்படி ஒரு குழு இருந்து முதலாவது மாணவனைத் தெரிவு செய்வது என்பது ஒரு பூச்சிய முடிவாகும்.

குறைவான 10 பேருக்குள் நடுவு நிலைமை வகிப்பது இலகுவான மாணவனை அடையாளம் காணமுடியும். ஆகவே தொகையான மாணவர்களுக்கு ஒருபோதும் ஒரு நடுவர் குழுவால் மதிப்பிட முடியாது. ஆட்களைப் பிரித்து நடுவர் குழுவைக்கூட்டி போட்டியை நடாத்த வேண்டும். ஏனெனில் எல்லா மாணவர்களும் தங்களுக்கு முதல் மூன்று இடங்களில் ஒன்று கிடைக்கவேணும் என்று தான் சிந்திப்பார்கள். மாணவர்களின் எதிர்பார்ப்பு சரியான முறையில் சென்றடைய வேண்டும் போட்டிகள் நிறைவு பெற்றதும் முடிவு அறிவிக்குமுன் மாணவர்கள் விட்ட பிழைகள், தவறுகள் பொதுவாகக் கூறினால் மாணவர்கள் மனதைக் கொஞ்சம் தளர்த்திச் செல்வார்கள். வருங்காலங்களில் பிழைகள் வராது தவிர்த்துக் கொள்வார்கள்.

போட்டிகளை சீராக அலசி ஆராய்ந்து செயற்பட்டால் திறமையான மாணவனை வெற்றி சென்றடையும்.

போட்டிகள் முடிவடைந்து முடிவு அறிவித்தவுடன் வெற்றி கிடைக்காத மாணவர்கள் விரக்தியடைகிறார்கள். அழுகி றார்கள், திட்டுகிறார்கள், சண்டை பிடிக்கி றார்கள், நடுவர்களுக்கு என்ன தெரியும் என்கிறார்கள். அதிகாரிகள் புள்ளிகளை மாற்றி விட்டார்கள். என்கிறார்கள் மாணவர்களோடு ஆசிரியர்கள், அதிபர்கள் கூட சேர்ந்து அவர்களின் தீர்ப்பு பிழையானது என்று சோர்ந்து போவார்கள். இனிமேல் ஒரு போட்டிக்கும் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானிக்கிறார்கள். இதற்கிடையில் நடுவர்கள் நின்றால் தங்களின் குற்றம் சுமத்துவார்கள் என்று முடிவு அறிவிக்க முன் ஓட்டம் பிடிப்பார்கள். பயம் கொள்வார்கள், சில வேளைகளில் மீள் பரிசீலனை செய்யுங்கள். திரும்பப் போட்டியை நடாத்தும் படி எழுதிக் கொடுப் பார்கள். முதலாம் இடம் கிடைத்த மாணவர்களின் பிழைகளைச் சுட்டிக் காட்டு வார்கள். சிலர் நடுவர்களை எங்களுக்கு என்ன போட்டீர்கள் என்று கேட்பார்கள். நடுவர்கள் சொல்வர் உங்களுக்குத்தான் முதலாமிடம் போட்டேன் அடுத்தவரும் உங்களுக்குத்தான் போட்டார் மற்றவர் என்ன செய்தாரோ தெரியேலை என்று ஒருவரை ஒருவர் சாட்டிப் பிரச்சினையை உண்டு பண்ணுவார்கள்.

சிலவேளை இரவிரவாக நடுவர் களின் வீடுகளுக்கே செல்வார்கள். தொலை பேசியில் பேசுவார்கள். மிரட்டு வார்கள் "என்ரை பிள்ளை தான் பார்த்துப் போடுங்கோ" என்றும் சொல்வார்கள். இப்படியாக போட்டி முடிந்தாலும் பிரச்சினை யாகத்தான் இருக்கும்.

இதைவிட நடுவர் பணிக்குத் தெரிவு செய்து நடுவராக இருக்கும்போது உந்த நடுவர் இருந்தால் நாங்கள் நிகழ்ச்சி மேடையேற்றமாட்டம் என்று நடுவரைக் கலைக்கிற புதினமும் அதிகம்.

சில ஆசிரியர்கள் சமாதானமாக மாணவர்களை வழிப்படுத்தி அழைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவார்கள். ஒரு காலமும் தோல்வியை ஒப்புக்கொள்ள யாரும் எளிதில் விரும்புவதில்லை. நாங்கள் நன்றாகத்தான் செய்தோம். வேணுமென்று எங்களுக்கு இப்படிச் செய்தார்கள் என்று சொல்வதையும், திட்டுவதையும் தான் இன்று வரை பார்க்கிறோம்.

சரியான தீர்ப்பு, நடுவு நிலைமை மாணவனைச் சென்றடைய வேண்டும். இது மாணவனின் மனதை எந்த அளவுக்கு வாழ்க்கையில் பாதிக்கின்றது என்பது அந்தந்த மாணவனுக்குத் தான் தெரியும். ஆகவே நடுவர் பணி என்பது அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது. வகுப்பறையில் நடுவு நிலைமை புரிகின்ற ஆசிரியராக இருப்பவர் எப்பொழுதும் நடுவுநிலை மாறமாட்டார்.

நடுவர் பணி பற்றிய ஒரு சிறந்த நோக்கும் பயிற்சி நெறியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது. இதற்காக விசேட பயிற்சி நெறிகள் தயாரிக்கப்பட வேண்டும். பயிற்சிநெறியின் இறுதியில் ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். துறைசார்ந்த பயிற்சிகளை வழங்க வேண்டும். நடுவு நிலைமைக்கு செயன்முறை ரீதியாகவும், அறிமுறை ரீதியாகவும் பயிற்சிகள் வழங்க வேண்டும்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டின்போது முன்மாதியாக மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளிகள் போடப்பட்டு ஏன் குறைந்த புள்ளி போட்டீர்கள்? எப்படி? அதிக புள்ளி போட்டார்கள் என்று ஆராய்வது போன்ற பல மதிப்பீடுகள் போட்டி விதிகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

உண்மையான மதிப்பீட்டிற்கான பயிற்சிகள் நன்றாக வழங்கினால் நடுவர் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

இனிவரும் காலங்களில் மாணவன் ஒவ்வொருவரினதும் எதிர்பார்ப்புக்களையும், திறமைகளையும் சரியான முறையில் முன்னெடுக்கவும் சிறந்த மாணவர்களை உருவாக்கவும் இந்தப் போட்டி நடைமுறைகளைச் சரியான முறையில் முறைப்படி நடாத்தி நல்லதொரு மாணவ உயர் சமூகத்தை உருவாக்க அனைத்துப் பணியாளர்களும் முன்வரவேண்டும் என்று கேட்டு இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.கெமிலஸ் ஜெயவதி ஜெகன்

# ஆசிரியர்......

சிப்பிக்குள் முத்தைப் போல்
உன்னுள்ளும் ஓர் திறன்
அதனை கொண்டு நீ செய் -ஓர்
ஆயிரம் கல்விமான்களை


நீ கண்ட கனவு
வேறெருவரும் காண முடியாது
நீ செய்யும் சாதனை
காணும் இவ்வுலகம்.

ஆசிரியராய் நீ அயராது
ஆற்றிடுவாய் உன் சேவையை
எத்தனை எதிர்பார்ப்புக்கள்
எதிர்கால உலகிற்கு

உன் படைப்பால் சீர் பெறும்
உன் சமூகம்
கல்வியாலும் பண்பாலும்
உயர்த்திடுவாய் உன்னை

ஓரிடத்தில் நீ நின்றால்
ஒளி பெறும் அச்சமூகம்
மங்காத ஒளி சுடராய்
நிதமும் வீசுவாய்

துணிவுடனே செய்திடுவாய்
தூய்மையாய் உன் பணியை
உயர்வாய் பேசும் இவ்வுலகம்
நீ மறைந்தாலும் கூட...............






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.முனித்தா குலேந்திரன்

# பரத நாட்டியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

பரத நாட்டியம் என்றழைக்கப்படும் சாஸ்திரீய நடனமானது நுண்கலைகளுள் ஒன்றாகும். இது கி.மு. 3000 ஆண்டு பழைமை வாய்ந்ததெனக் கருதப்படுகிறது. சிந்துவெளி நாகரீக காலத்திலேயே நடனம் முக்கியமான ஓரிடத்தை வகித்திருக்கலாம் என்பதனை இங்கு கண்டெடுக்கப்பட்ட மண்ணாலான உருவங்கள் மற்றும் கல், வெண்கலம் ஆகியவற்றிலான சிலைகள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

வேதகாலத்திலும் நடன நாடகக் கலையானது மலர்ச்சியுற்ற நிலையிலே இருந்தது. நடனம் கோவில்களிலே இருந்ததாகத் தெரிகின்றது. ஆகம விதிப்படி அபிஷேகம் முதலியன முடிந்த பின் இறுதி நிகழ்ச்சியாக நடனம் இறை அர்ப்பணமாக ஆடப்பட்டது. இதனைத் தொடர்ந்தே கோவில்களில் நவசந்தி நாட்டியம் இடம் பெற்றது. அடுத்து வந்த மௌரியர் காலத்தில் பரதக்கலை அரசியல் காரணங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. நடன மகளிர் அந்நாட்டரசனுக்கு எதிராக உள வரிய வரும் ஒற்றர்களிடமிருந்து இரகசியங் களைச் சாதுரியமாக பெற்றுக் கொண்டு அரசனுக்குக் கூறுவர். அவர்கள் 'ராஸநர்த் தலிகள்' என அழைக்கப்பட்டனர்.

தொடர்ந்து வந்த குப்த பேரரசுக் காலத்து நடன சிற்பங்கள் மூலம் அக் காலத்தில் நடனம் வகித்திருந்த இடத்தை அறியலாம். தற்கால நடனக் கச்சேரியினை நினைவூட்டும் வகையில் அக்காலத் துக்குரிய சிற்பங்களிலே நடனக் காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. கிபி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நேர்த்தியான நடராசர் சிலை ஒன்றும் கிடைத்துள்ளது. பரதக்கலை அன்று நாட்டிய நாடகமாகவே ஆடப்பட்ட தென்ப தற்குப் பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் சான்றுகள் உள்ளன. பரதர் 2 ஆம் நூற்றாண்டளவில் இந்நூலை எழுதியதாகக் கூறப்படுகின்றது. இந்தியா வின் பற்பல மாநிலங்களிலும் பரத நாட்டியம் பரவியது. பரத நாட்டியம் அவ்வவ் மாநிலங் களுக்குரிய கலாச்சாரம், பாரம்பரியங்களின் ஊடாக சில மாற்றங்களுடன் கேரளா, கல்கத்தா, மணிப்பூர், ஒரிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் முறையே கதகளி, கதக், மணிப்பூரி, ஓரிசி, குச்சுப்புடி என்று ஐவகை சாஸ்திர நடனங்களாகப் பரிண மித்தது.

தமிழ் நாட்டிலும் பரதநாட்டியம் நாட்டிய நாடகப் பாணியிலேயே அமைந் திருந்தது. அன்றைய நிலையில் அதனைக் 'கூத்து' என்றழைத்தனர். ஆடுபவர் களைக் கூத்தர், கூத்தியர் என்றும் பாடல் பாடுவோ ரைப்பாணர், விறலியர் என்றும் அழைத்தனர். கூத்து மார்க்கம், தேசி என இரு வகைப் பட்டது. அக்காலத்தில் வேலன், வெறி யாடல், கூத்து முதலிய ஆடல் வகைகள் இருந்தன என்பதற்குச் சங்ககால இலக்கி யங்கள் சான்று பகர்கின்றன.

இதன்பின் சிலப்பதிகார காலத்தில் நடனம் தமிழ் நாட்டில் இருந்ததென்பதற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காவியமே சான்று பகரும். நடனம் சாஸ்திரிய மயமாக்கப்பட்டது. கதாநாய கியாக மாதவி ஆடல் வகைகளை பயின்று அரங்கேற்றம் செய்தாள் என அறிந்தோம். அவை கொடுகொட்டி, பாண்டரங்கம், அல் லியம், மற்கூத்து, துக்கூத்து, குடக்கூத்து, குடைக்கூத்து, மரக்காற்கூத்து, பாவைக் கூத்து என்பன வையாகும். சிலப்பதி காரத்தின் ஆய்ச்சியர், குரவை, வேட்டுவலி என்பன அக்காலத்தில் பொதுமக்களிடையே நிலவிய நடன வகைகள் பற்றிய செய்தி களைத் தெரிவிக்கின்றன.

தமிழ் நாட்டில் சைவ சமயம் தளர்ச்சியாக தொடங்கியது. சமனம் பரவ ஆரம்பித்தது. சமணத்தின் வளர்ச்சி பரதத்தின் முதல் வீழ்ச்சியாக கருத வேண்டியுள்ளது. சமணருக்கு பின் மீண்டும் சைவம் தலைத்தோங்க பல்லவ பேரரசுகள் துணை புரிந்தன. சைவத்தின் திருகடவுளாம் நடராஜனின் திருவுருவமும் அவரின் 108 காரணநிலைகளும் சிதம்பரத்தில் செதுக்கப் பட்டன. தமிழகம் எங்கும் சிவாலயங்கள் அமைக்கப்பட்டு அங்கு பரசு நடனம் ஆடுவதற்கென மண்டபங்களும் அமைக்கப் பட்டன.

பரதம் ஆடுவதற்கு தேவரடியார் என்றழைக்கப்பட்ட ஆடல் மகளீர் அமர்த்தப் பட்டனர். இதன் பின் சோழப் பேரரசின் வீழ்ச்சியுடன் பரதத்தின் இரண்டாவது வீழ்ச்சி ஆரம்பமாகியது பரதக்கலை மீண்டும் தேவரடியார்களிடம் தஞ்சம் அடைந்தது. சோழரை அடுத்து தமிழகத்தை ஆண்ட விஜயநகர நாயக்கர் காலத்தில் பரதக்கலை தேவதாசிகளிடம் சென்றது. இதனால் இக்கலை பெருமளவிற்குப் பாதிப்புக்குள்ளாகியது. தேவதாசிகளின் ஒழுக்கச் சீர்கேட்டினால் பரதக்கலை தனது புனிதத்துவத்தை இழந்தது.

தாசியாட்டமாக சின்னமேளம், குடக் கூத்து என்ற பெயர்களில் பரதம் வெளி வரலாயிற்று. நடனமாடுபவர்களுக்கு சமு தாயத்தில் மதிப்புக் குறைந்தது. 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தஞ்சை பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடி வேலு சகோதரர்கள் இந்நடனத்தை மாற்றி யமைத்தனர். இவர்களுள் தஞ்சை பொன் னையா அவர்கள் முறையான அடவு வகை களைத் தாளத்திற்கு அமைத்து பரதநாடடிய நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் தயாரித்தார். இன்று பரதத்தில் காணப்படுவது போல் அலாரிப்பு, ஜதிஸ் வரம், சப்தம், கௌத் துவம், வர்ணம், பதம், தில்லானா எனப் பல நிகழ்ச்சிகளாக வகுத்தார். அதுவே இன் றைய பரதமாகவும் விளங்குகின்றது.

இந்திய தேசிய எழுச்சியின் போது சுப்பிரமணிய பாரதியார் சுதந்திரப் போராட டப் பாடல்களுக்குப் பரத நடனம் ஆடப்பட் டது. சங்கீதம், பரதம் ஆகிய கலைகள் எழுச்சியுறத் தொடங்கின. இன்றைய பரதக் கலையின் புனிதத்து வத்தை உருவாக்கி எமக்குத் தந்தவர் களுள் ஈ.கிருஸ்ணையர், திருமதி ருக்மணி தேவி, அருண்டேல் ஆகியவர்களின் பங்களிப்பு முக்கியமானது. இலங்கையில் யாழ்ப்பாண பல்கலைக்கழ கத்திலும், பாடசாலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பரத நாட்டியம் கற்பிக்கப் படுகின்றது. பரத நடனம் இன்று எல்லோ ராலும் விரும்பத்தக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நுண்கலையாக ஆற்றுகை கலைகளில் ஒன்றாக மிளிர்கின்றது.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



පී. කෝකිලාවර්ධනී.

## නත්තල් කාලේ

සීත සුළං රැළි
හමන රෑ කාලේ
මරියා තුමියගේ කුස තුළ
බිහිවූ සාමයෙ කුමරා ..........................................

ගැළ වීම් දෙන්නට
පව් බර උසුලන්නට
බෙත්ලෙම් ගවමඩු වෙත
වඩින ලද යේසුස් ක්‍රිස්තුස් වහන්සේ

සාමයෙ සතුට පිරි
නත්තල් කාලේදී
කරමු හොඳ දේ
කියමු සුභාරංචියක්
ලෝකේ ජීවත් වනතුරු ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.
லினஸ்லீலா தேவஅருள்நாயகம்

# இறையரசை நோக்கி......

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள்" (மத்:5:48)

இறைமகன் கிறிஸ்து மண்ணுலகிற்கு வந்தது இறையரசை மக்களுக்கு அறிவித்த பாவ அடிமைத்தனத்தில் இருந்து மீட்டு எம்மை இறையரசில் சேர்ப்பதற்காகவே. இதுவே இறைத்தந்தையின் விருப்பமுமாகும். இறைத் தந்தையை மகிமைப் படுத்துவதுடன் அவரின் கீழ்ப் படிதலின் மூலம் அதுவும் சிலுவைச்சாவை ஏற்கும் வரை இயேசு தந்தைக்கு கீழ்ப்படிந்தார்.

இறைமகன் கிறிஸ்து இறையரசில் எம்மை சேர்ப்பதற்காக போதனையின் மூலமாகவும், தனது முன் மாதிரிகையான வாழ்வின் ஊடாகவும் வாழ்ந்து காட்டினார். அத்துடன் அவரின் பணியை இவ்வுலகில் தொடர்ந்தாற்றுவதற்கு பல்வேறு பணியாளர்களைத் தெரிவு செய்துள்ளார்.

திருவிவிலியத்தில் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலே அழைப்புக்கள் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்.
( 1 கொரி 12:28)

"திருச்சபையிலும் கடவுள்..... முதலாவதாக திருத்தூதர்களையும், இரண்டாவதாக இறைவாக்கினர்களையும், மூன்றாவதாக போதிப்பவர்களையும், அதன் பின் பிணி தீர்ப்போர், வல்ல செயல் செய்பவர்கள் என....." தெரிவு செய்கின்றார். நாம் இன்று எமது சமூகத்திலும் கூட போட்டி நிகழ்வாயினும் ஏனைய நிகழ்வாயினும் தெரிவுகளை மேற்கொள்ளும் போது முதலாம், இரண்டாம், மூன்றாம் இடமென தெரிவு செய்வோம். எமது அழைப்பும் அவ்வாறானதே போதிக்கும் பணியாகிய (கற்பித்தல் பணி) இப்பணியை நாம் நிறைவேற்றுவதற்கு எம்மை இறைவன் மூன்றாவதாக தெரிவு செய்துள்ளார். கிறிஸ்துவின் மூலம் இறையரசை போதிப்பதற்காக எம்மை தேர்ந்து கொண்டுள்ளார். வேறு பாடங்களை கற்பிக்கும் போது பாடம் தொடர் பான பூரண அறிவும், ஆளுமையும் இருந் தால் போதும் ஆனால் கிறிஸ்தவ பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர், மாணவனுக்கு இறை யரசை அடைவதற்கு ஏணியாக இருப்பது கடமையாகும். கிறிஸ்துவை பற்றி முழுமை யாக அறிந்து கிறிஸ்துவை **விசுவாசித்து** அவரை எம் வாழ்வில் சுவைத்து வாழக் கூடிய முன் மாதிரியான வாழ்வின் மூலமே அவற்றை நாம் கற்பிக்க முடியும் அவ்வா றான கற்பித்தலை வழங்கும் போது

அறிவு - விசுவாசம்
திறன் - செபம்
மனப்பாங்கு -இறைவனுக்கு ஏற்ற வாழ்வு வாழுதல்

என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். விழுமியப் பண்புகளுடன் விசுவாசித்து செபத்தினூடாக நல் வாழ்வு வாழ்ந்து இறையரசை அடைவதற்கு மாணவர்களிடையே இப்பாடத்தின் மூலம் இறையரசின் பண்புகளை வெளிப்படுத்தல் வேண்டும்.

இறைமகன் கிறிஸ்து ஆற்றிய முக்கிய பகிரங்க பணி கற்பித்தல் (போதிக்கும்) ஆகும். அவ்வாறு இயேசு இறையரசு பற்றி கற்பித்த அனைத்தையும் நாம் நற்செய்தி நூல்களினூடாக அறியலாம். அவற்றில் நற்செய்தி ஆசிரியர் மத்தேயு. இயேசு இறையரசுப் பற்றிப் (போதித்தவை) கற்பித்தவை அனைத்தையும் தம் நற்செய் தியில் ஐந்து நீண்ட அறவுரைகளாக எமக்கு அளித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.மலைப்பொழிவு
(மத்:5-7அதிகாரங்கள்)
2. திருத்தூதுப் பொழிவு
(மத்:10)
3. உவமைப் பொழிவு
(மத்:18)
4. திருச்சபை பொழிவு
(மத்:18)
5. நிறைவுகாலப் பொழிவு
(மத்:24-25)
என்பனவாகும்

இறையரசை அடைய எம்மிடம் இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதிகள் என்ன? என்பவற்றை மத்தேயு நற்செய்தியில் மலைப் பொழிவின் மூலம் விளக்கியுள்ளார். இதுவே அறிவுரைகளில் முதலாவதும் அதி முக்கியமானதும் ஆகும். அவற்றை இயேசு எவ்வாறு கற்பிக்கின்றார் என்பதை மத்தேயு நற்செய்தியினூடாக நோக்கும் போது (மத்:5:1-10)

**"இயேசு மக்கள் கூட்டத்தை கண்டு மலைமீது ஏறி அமர அவர்களுடைய சீடர்கள் அவரருகே வந்தனர் அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை "**

**ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்: ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது**

**துயருறுவோர்** பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்

**கனிவுடையோர்** பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கி கொள்வர்

**நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர்** பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்.

**இரக்கமுடையோர்** பேறுபெற்றோர்: ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.

**தூய்மையான உள்ளத்தோர்** பேறு பெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.

**அமைதி ஏற்படுத்துவோர்** பேறு பெற்றோர்: ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்

**நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்: ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.**

என்ற இறைவார்த்தைகளை நோக்கும் போது முதலில் இயேசு மக்கள் கூட்டத்தை **"கண்டு"** என்று தொடங்குகின்றார். இங்கு **"கண்டு"** என்பதின் மூலம் இயேசு மக்களின் தேவைகள், கவலைகள், ஏக்கங்களை அறிந்துள்ளார். என்பது புலப்படுகின்றது. அவ்வாறே எல்லோரும் இயே சுவை பார்க்க வேண்டும் எனவும் அவரும் எல்லோரையும் தெளிவாக காணும் படியாகவும் விரும்பி மலை மீது ஏறி திருவாய் மலர்ந்து இறையரசின் சட்ட திட்டங்களை கற்பிக்கின்றார்.

<u>எமது கற்பித்தல்:</u> ஆசிரியர்களாகிய நாம் இவற்றை எமது கற்பித்தலுடன் நோக்கும் போது நாம் எமது வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவர்களையும் அவர்களின் உடல், உளத்தேவைகளையும் அறிந்து அவற்றினை நிறைவேற்றி (பூர்த்தி செய்து) கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்களுக்கு எமது கற்பித்தல் விளங்கும் வண்ணம் அமைவதுடன் கற்றலில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்தும் வகையில் அனைத்து மாணவர்களையும் நாம் பார்வையிடுமாறும் எம்மை அனைத்து மாணவர்களும் நோக்குமாறும் வகுப்பறைச் சூழலை அமைத்து கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

<u>கற்பித்தலின் நோக்கம்:</u> மலைப் பொழிவினூடாக இயேசு "கடவுள் எங்கள் தந்தை நாங்கள் அவரின் பிள்ளைகள்......" எனும் சகோதர, சகோதரிகள் உறவை வெளிப்படுத்துவதுடன் நாம் இறையரசின் அங்கத்தவர்கள். இறைவன் மட்டிலும், சக மனிதர்கள் மட்டிலும் நாம் கொண்டிருக்க வேண்டிய உள்ளார்ந்த மன நிலையை வலியுறுத்துவதாக மலைப் பொழிவு அமைந்துள்ளது.

ஏழையரின் உள்ளத்தோர் எனும் வார்த்தைகள் மக்கள் கூட்டத்தில் ஏழ்மை, அடக்குமுறை, அநீதி, ஜாதி, மதம், இனம், மொழி என்று நலிவுற்ற நிலையில் வாழ்பவர்களைக் குறிக்கின்றது. இவர்கள் "கடவுள் ஒருவரே கதி" என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். வாழ்வில் **கனிவு,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கம், நீதி, தூய்மை, அமைதி போன்ற இறையரசின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப வாழ்பவர்களுக்கு தங்கள் வாழ்வின் இறுதி நாளில் அவர்களுக்கு கிடைக்கவிருக்கும் கைமாறு எது என இயேசு கற்பிக்கின்றார். இதன் மூலம் அன்றைய சூழ்நிலையில் அம் மக்களுக்கு இயேசு ஆறுதல் அளிப்பவராக நம்பிக்கை எனும் ஒளியை ஏற்றும் விளக் காக இருப்பதை இவ் இறையரசின் போத னைகளில் காணக்கூடியதாக உள்ளது.

**மலைப் பொழிவை தற்கால உலகில் வாழ்ந்து காட்டல்**

இறையரசின் மதிப்பீடுகளை இறை மகன் கிறிஸ்து போதித்த போதனைகளை தன் வாழ்வின் மூலம் வாழ்ந்து காட்டினார். அதே வாழ்வை இன்று எம்மோடு இருந்து வாழ்ந்து காட்டியவர் தான் எம் அன்னை **"அன்னை தெரேசா"** இவரின் இயற் பெயர் அக்னஸ் கொன்சகா. இவர் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ஆம் நாள் யுகோஸ்லாவிய நாட்டில் ஸ்காப்ஜே எனும் இடத்தில் பிறந்தார். இவர் இரண்டாம் உலகப் போரிலே தந்தையை இழந்தார். இது தெரோசாவை சோகத்தில் ஆழ்த்தியது. சிறு வயதிலே ஏழைகளுக்கு சேவை செய்து இறைவார்த்தையை அறிவித்து வாழ் நாளெல்லாம் இறைவனுக்கு அர்பணிக்கத் தீர்மானித்தார். பின்பு லொரேட்டோ துறவற சபையில் 1928 ஆம் ஆண்டு சேர்ந்தார். டார்ஜிலிங் சென்று இறையியல் பயிற்சியும் ஆசிரிய பயிற்சியும் பெற்று கொல்கொத் தாவிலுள்ள புனித மரியாள் பள்ளியில் தலைமை ஆசிரியராக 17 ஆண்டுகள் பணி யாற்றினார்.

இவர் பள்ளியிலே பணியாற்றும் போது அன்னை தெரேசாவின் பார்வை பள்ளியை சுற்றியிருந்த குடிசை வாழ் மக் கள் மீது விழுந்தது. ஒரு முறை அன்னை தியானத்திற்காக இரயில் வண்டியில் போய்க் கொண்டிருந்த போது **"ஏழைகளிடம் செல் சேவை செய்"** என்னும் இறைவனின் குரல் கேட்டது. இதை ஏற்று 1946 இல் அன்பின் பணியாளர் சபை என்ற துறவற சபையைத் தொடக்கினார். இச் சபையின் குறிக்கோள் ஏழை எளியவர்கள், கைவிடப் பட்டோர், நோயாளிகள், இறக்கும் நிலையில் உள்ளோர் ஆகியோருக்கு பணிபுரிவதே ஆகும். இவ்வாறு தனது பணியை கல்க த்தாவில் மோட்தஜில்லில் ஒரு குடிசையில் தொடங்கினார். ஆரம்ப காலங்களில் மிகவும் துன்பப்பட்டு சேவை புரிந்தார். ஒரு முறை ஏழை மக்களுக்கு உணவு வேண்டி ஒரு பணக்காரர் வீட்டுக்கு சென்றார். அவரோ அன்னை மீது காரி உமிழ்ந்தார். அப்போது "அன்னைதெரேசா" எனக்குத் தரவேண்டி யதை கொடுத்து விட்டீர்கள் இப்போது ஏழைகளுக்கு கொடுக்க உணவு கொடுங் கள்" என்று கேட்டார். மனம் வருந்திய அவர் அன்னையிடம் மன்னிப்பு வேண்டி ஏழை களுக்கு உணவு அளிக்க உதவி செய்தார்.

இவ்வாறு பல்வேறு துன்பப்பட்டு ஏழைகளுக்கு உதவி புரிய வசதியாக ஓர் இடம் தேடினார். அவரின் நல் முயற்சிக்கு பலர் உதவி புரிந்தனர். 1950 இல் பிச்சை எடுப்போர்கள் முதல் தொழுநோயாளிகள் வரை சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டோர் அனைவரையும் அரவணைக்கும் வகையில் தன் சேவையை விரிவுபடுத்தி ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டார். அன்னை தெரேசா சபை இன்றும் உலகின் பல நாடுகளில் உள்ளது. இவ்வாறு பணிபுரிந்த அன்னைக்கு உலகெங்கிலும் இருந்து பல விருதுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டது. இத்தனை விருதுகளையும் பட்டங்களையும் அன்னை பெற்றாலும் மக்கள் இவருக்கு தந்த அழியாப் பட்டம் "நடமாடும் புனிதை" என்பதே. ஏழைகளுக்காகவும், ஆதர வற்றோர்களுக்காகவும் இறுதி மூச்சு வரை பாடுபட்ட அன்னை 1997 செப்டம்பர் 05 ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் விண் ணகம் சென்றார். 2003 ஆம் திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அன்னை திரே சாவுக்கு **"வணக்கத்துக் குரியவர்"** என்ற பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளார்.

இவ்வாறு தனது வாழ்வை தனக்கென்று வாழாது பிறருக்காக வாழ்ந்து பிறர் துன்பத்தில் பங்கு கொண்டு பல துன்பங்கள், துயர்களை ஏற்று தன்னை முழுமையாக இறைவனுக்கு அர்பணித்து இறையரசின் மதிப்பீடுகளின் படி வாழ்ந் தவர்தான் நம் அன்னை. மலைப் பொழிவில் நம் ஆண்டவர் கிறிஸ்து எடுத்துக்கூறிய கூற்றை ஏழை, எளியவர்களுக்காக வாழ்ந் தவள். எனவே நாம் எமது வாழ்வை மலைப் பொழிவுடன் ஒப்பிட்டு நோக்கும் போது நிலையில்லா இவ்வுலக வாழ்வின் ஆசைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு அடிபணிந்து சுயநலப் போக் குடன் இக்கால நடைமுறைக்கு ஏற்ப விழுமியப் பண்புகளை மறந்து மனிதநேயமற்ற வர்களாகவே வாழ்கின்றோம்.

கற்பித்தல் பணி செய்யும் நாம் எமது சமூகத்திலுள்ள எதிர்கால பிரஜை களை உருவாக்கும் நல் எண்ணங்களுடன் மாணவர்களுக்கு கற்பித்தல் பணியினூடாக விழுமியப் பண்புகளை கற்பித்து மனித நேயம் வளரச் செய்ய வேண்டும். மெழுகுதிரி ஒன்றின் மூலம் எத்தனை திரிகளை ஒளியேற்ற முடியும்? எனும் கேள்வியை எழுப்பும் போது ஆயிரம் ஆயிரம் திரிகளுக்கு ஒளியேற்ற முடியும். ஒரு திரி அதாவது **"நமது திரி"** அணைந்தாலும் நம்மால் ஒளியேற்றப்பட்ட ஒரு திரியால் இன்னும் பத்து திரிகளை ஒளி யேற்ற முடியும். அதே போல் ஆசிரியர் களாகிய எம்மால் பத்து நல்ல மாண வர்களை விழுமியப் பண்புகளுடன் உரு வாக்கும் போது அவர்கள் எதிர்காலத்திலே இன்னும் பல நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்குவார்கள்.

இயேசுவின் முன் மாதிரியான வாழ்வானது அவரின் ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. இயேசு கூறுவது போல் (மத்: 5:13) "நீங்கள் **மண்ணுலகில்** உப்பாக இருக்கின்றீர்கள். உப்பு உவர்ப் பற்று போனால் எதைக் கொண்டு உவர்ப்புள்ளதாக்க முடியும்...?" அவ்வாறே ஆசிரியர்களாகிய நாம் மாணவர்களுக்கு உவர்ப்புள்ள உப்பாக இருக்க வேண்டும். நாம் உவர்ப்பற்ற உப்பை போல பயனற்றவர்களாக வாழ இறைவன் எம்மை தேர்ந்து கொள்ளவில்லை. எம்மிடையே உள்ள ஆற்றல்களைக் கொண்டு இறையரசு நோக்கிய எமது பயணத்திலே அறநெறி பண்புகளை ஊற்றி மாணவர்களை நல் வழிப்படுத்துவது அவசியமானது. எமது முன் மாதிரியான வாழ்வு, கற்பித்தல் ஆகியவற் றின் மூலம், மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கை, வளர்க்க கூடிய நல்ல ஆசா னாக, வழிகாட்டியாக, தாயாக, ஆலோசராக, நாம் திகழ வேண்டும் இவற்றையே இறை மகன் கிறிஸ்து எம்மிடம் எதிர்பார்க்கின்றார் வாழ்ந்தும் காட்டியுள்ளார். எனவே இறை யரசை நாமும் அடைந்து ஏனையோரும் அடைவதற்கு உப்பாக, ஒளியாக, பிறருக்கு பயன்தரும் நல்ல **"மனிதனாக"** (ஆசானாக) வாழ்வோம்.

"ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுத்துணிவோடு தடையேதுமின்றிக் கற்பித்துக் கொண்டிருந்தார்." தடையேது மின்றி தொடர்வோம் இறையரசு நோக்கிய எமது பயணத்தை.......

(தி.தூ.பணி.28:31)

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. கரோலினா இளையராஜா

# மோயீசனின் விடுதலைப் பயணமும் எமது விடுதலைப் பயணமும்

"விடுதலையை நோக்கி பயணிப்பவர்களை ஆண்டவர் கைவிடுவதில்லை"

"விடுதலைப் பயணம்" எனும் போது ஏதாவதொரு சிக்கலில், இன்னலில், இடையூறுகளில், அடிமைத்தனத்திலிருந்து, கட்டுக்குளிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதையே குறிக்கும். இவ்வாறே மோயீசனின் நாம் எவ்வாறு விடுதலைப் பயணம் செய்ய வேண்டுமென எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

அதாவது மோயீசன் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டு அரச குடும்பத்தில் வளர்த்தெடுக்கப்பட்டவர். அதனாலேயே அவருக்கு மோயீசன் எனப் பெயரிடப்பட்டது. இவ்வாறு அரச குடும்பத்தில் வளர்ந்தாலும் தன்னுடைய மக்கள் எகிப்தில் பார்வோனின் அடிமைத்தனத்தில் சிக்கி, அவதியுற்று. இன்னல்பட்டுக் கொண்டிருந்த வேளையில் தனது மக்களை விடுதலை வாழ்விற்கு அழைத்துச்செல்ல வேண்டுமென எண்ணிக் கொண்டிருந்த போது இறைவனால் மோயீசன் தெரிந்து கொள்ளப்பட்டு அனுப்பப் பட்டார்.

இவ்வாறாக இஸ்ரயேல் மக்களை மோயீசன் விடுதலை வாழ்வை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கும் தருணங்களில் அவர் பல்வேறுபட்ட இடையூறுகளையும், தடைகளையும், கஷ்டங்களையும், எதிர்ப்புக்களையும், பாடுகளையும், எதிரிகளின் தாக்குதல்களையும், இயற்கையின் இன்னல்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. அதாவது உதாரணமாக செங்கடலை கடக்க வேண்டிய சூழ்நிலையையும் பார்வோன் படையெடுப்புக்களையும் சந்திக்க வேண்டிய சூழ்நிலை, பசி, தாகம், உடலியற் தேவைகள் என பலதரப்பட்ட இன்னல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறாக நாமும் தீய ஆவிகளின் செயல்களால் பாவ காரியங்களில் ஈடுபட்டு அடிமை எனும் சிறைக்குள் கைதிகளாக இருக்கிறோம். அதாவது எமது நாளாந்த வாழ்விலேயே நாம் அதிகமான விடயங்களில் அடிமையாகவே இருக்கிறோம். மனித உயிர்கள் அனைத்துமே பசி, தாகம் என உணவு தேவைகளுக்கும், ஆடம்பரமான ஆடையணிதல், ஆபரணங்கள் மீது அதிக விருப்பம், புதிய புதிய ரகங்களில் வெளிவரும் அணிகலன்களை அணிதல், வாசனைத் திரவியங்களை பூசிக் கொள்வதிலும் என உடை தேவைகளுக்கும், மாட மாளிகைகள் கட்டி அதில் வாழ்வதற்கும், அடுத்தவர்களுடைய நிலபுலன்கள் மீது தனது வீட்டைக் கட்டி வாழவும் என உறையுள் தேவைகளுக்கும் அடிமைப் பட்டுக் கிடக்கின்றான் இன்றைய நவீனயுக மனிதன்.

அது மட்டுமல்ல பிறர் பொருள் மீது விருப்பம், பிறர் மனைவி"கணவன் மீது விருப்பம், அதற்காக பொய்களை சொல்லுதல், களவு செய்தல், பாவகாரியங்களில் ஈடுபடுதல், தவறான வழிகளில் பணம் சம்பாதித்தல், போதைப் பொருள் பாவித்தல், புகைப்பிடித்தல், துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல், கொலை செய்தல், கருக்கலைப்புக்களை செய்தல், நவீன தொலைத் தொடர்புகளில் மோகம் கொண்டு அதில் தனது நேரத்தை வீணடித்தல், பணம், என்றும் அழியக் கூடியதும் நிலைக் காததுமான அதன் மீது ஆசை கொள்ளுதல், உயிர் நீத்த பிறகு மண்ணில் மக்கிப் போகும் உடல் மீது ஆசைக் கொண்டு அழகுபடுத்தும் அழகு சாதனங்கள் மீது மோகம் கொள்ளுதல், தொலைக்காட்சி நாடகங்களில், சினிமாப்பாடல்கள், மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகம் கொள்ளுதல், இன்டர் நெட் என்று நாம் நம்மையே எமது மனம் போன போக்கில் போக விட்டு உலக இன்பங் களுக்கும், மாயக் கவர்ச்சிகளுக்கும், பொய்யான இந்த உலக வாழ்விற்குமென அடிமைகளாக்கி இவ்வுலகின் மனித வாழ்வு மாயச் சக்கரமாய் சுழன்றுக் கொண்டி ருக்கிறது.

இவ்வாறாக அழியும், நிலையாத, பெறுமதியில்லாத உலக அடிமைத்த னங்களிலிருந்து எம்மை நாம் விடுவித்து வாழ நாமும் மோயீசனைப்போல விடுதலைப் பயணம் பயணிக்கவேண்டும். அதை மோயீசன் எவ்வாறு மேற்கொண்டு இஸ்ரயேல் மக்களை விடுத்தாரோ அதை போலவே நாமும் எல்லா தடைகளையும் தாண்டி விடுதலை வாழ்வு வாழ வேண்டும்.

அது எவ்வாறெனின், அன்று மோயீசன் தனது மக்களை பார்வோனின் அடிமை வாழ்விலிருந்து இறைவனின் வேண்டு கோள்படி அழைத்துக்கொண்டு எகிப்திலிருந்து பாலும் தேனும் பொழியும் வளமான நாட்டிற்குச் சென்றார். அப்போது அவர்களுக்கு பசி, தாகம் ஏற்பட்டது. இறைவனிடம் மன்றாடி பாறையில் தண்ணீர் வரவைத்து தாகம், பசி தீர்த்தார். செங் கடலை கடக்க வேண்டிய சூழ்நிலையில் இறைவனிடம் உருக்கமாய் மன்றாடி கடல் நீரை ஒரு பக்கம் நீரும் மறுபக்கம் வறண்ட பிரதேசமாக மாற்றி வழியமைத்துக் கொடுத்தார். இவ்வாறான பார்வோனின் படைப்புக்களையும் தகர்த்தெறிந்து இஸ்ர யேல் மக்களின் முணுமுணுப்புக்களையும் பொறுத்து, இறைவனிடம் பத்துக் கட்டளை களைப் பெற்று அதன் படி வாழ வேண்டும் என்ற விடுதலை வாழ்விற்காக வழி அமைத்த கொடுத்தார் பிதாவான மோயீசன்.

அதே போல நாமும் எமது அடிமைத்தனத்திலிருந்து வெளிவர வேண்டும். அப்போது தான் எமக்கு விடுதலை கிடைக்கும். மோயீசனின் விடுதலைப் பயணத்தையும், அவரது வாழ்க்கை முன் மாதிரிகளையும் பின்பற்றி நாம் விடுதலை வாழ்வை நோக்கிச் செல்ல வேண்டும். அதாவது உலக இன்பங்களுக்கு எம்மை இட்டுச் செல்லக் கூடாது, உடலியல் ஆசைகளை கட்டுப்படுத்தல். பொய், களவு. கோபம், வஞ்சனை, அகங்காரம், ஆணவம், பொறாமை, ஆத்திரம், மனம் நோகப் பேசுதல், புறங்கூறுதல், பெற்றோர்களை மதியாமை, இவைகளை எங்களுடைய உள்ளங்களிலிருந்து வெளியெறிந்துவிடல், பத்துக் கட்டளைகளை நாமும் பின்பற்றி வாழுதல். இறைவனையே நினைத்து வாழுதல், நேர்மையான காரியங்களில் ஈடுபடுதல், எந் நேரமும் மோயீசனை போல உருக்கமாக இறைவனிடம் மன்றாடுதல், தியானம் செய்தல், நற்காரியங்களை செய்தல், பாவத்தை எமது வாழ்விலிருந்து விலக்கி விடுதல், பிறரின் மீது அன்பு செலுத்துதல், பிறர் கருத்துக்களை ஏற்று நடத்தல், பிறரை மதித்தல். பகைவரையும் அன்பு செய்தல், பிறர் எமக்கு செய்தவற்றை மன்னித்தல் என பல்வேறு நற்காரியங்களை செய்யும் போது எமது விடுதலைப் பயணம் சிறக்கும்.

ஆகவே, எமது வாழ்விலே நாம் சுமக்கும் பாரச்சுமைகளை கலைந்து, விடுதலை வாழ்வை நோக்கி பயணிப்போம், தீய ஆவிக்குரியவைகளை விட்டு விட்டு, மோயீனைப் போல தடைகளை தகர்த் தெறிந்து, இறைவனிடம் உருக்கமாய் மன்றாடி, இறைவனின் துணையோடு எமது விடுதலையை நாமே உறுதி செய்வோம். "பாரச் சுமைகளை அகற்றுவேன், மீட்பளிப்பேன்" என்றும், விடுதலை நோக்கி பயனிபபவர்களை கைவிடாமல் காத்து இறைவன் விடுதலை செய்த வாழ்வை சிறக்க வைப்பார்.

முற்றும்

**ஒளிவிழா போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற கட்டுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Miss J.Sonali Ingrid*

## *Roles of the teacher in the classroom*

*Teachers play various role of the students in their classrooms. Teachers are best known for the role of educating students the that are placed in their care. The teachers is just like a parent, friend and also a guardian in the class room. the teacher have to build a warm environment, mentor to become a role model*

### *Teaching knowledge*

*The most common role of a teacher plays in the classroom is to teach knowledge to children. A teacher should gather a lot of information day by day and also teach good knowledge to the students. Teachers search and collect various information about the subject. Teachers teach in many ways including group work, project, playing, games and lectures.*

### *Creating classroom environment*

*Teachers also play an important role in the classroom. If the teachers makes a warm, happy environment students are more likely to be happy. A teacher can set a classroom positive or negative the classroom should be neat, ventilated and pleasent the students react depending on the classroom.*

### *Role Modeling*

*Students often mimic a teacher's action. the teacher becomes a role model of them. This can be positive or negative depending on the teachers. Teachers not only teach but also have to love and care of the students. Teachers are highly respected by the people in the society, threefore they have to become a good role model to the students.*

### *Mentoring*

*Mentoring is a natural role taken by teachers. this again can have positive or negative effects on children. Mentoring is a way a teacher encourages students. to be the most they can and enjoy learning. Part of mentoring consists of listening to students. This helps the students to build their confidence and helps them to be successful.*

### *Signs of trouble*

*Another role played by the teacher is protector. Teacher is thaught to look signs of trouble in the students. When students behaviours change or physical signs of abuse are noticed, teachers are required to look in to the problems*

*"A good teacher is like a candle-*
*it consumes itself to light the way of others"*

*Reference:- www.othws.com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.ஜெசிந்தா சதானந்தன்

# திருவிவிலியம்

திருவிவிலியம் ஒரு நூல் உலகி லேயே மிகவும் புகழ் பெற்ற பிரசித்தி பெற்ற நூல் உலகில் முதன் முதலில் அச்சேறிய நூலும் அதுவே உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமையும் திருவிவிலியத்திற்கே உரிய தனிசிறப்பு. உலகில் வாழ்கின்ற எல்லா நாட்டு மக்களாலும் வாசிக்கப் படுகின்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தகம் என்றால் அது மிகையாகாது அதிக மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டு கின்னஸ் சாதனை படைத்ததும் திருவிவிலியமே யாகும்.

இவை பைபிள் வேதாகம் வேத நூல், மறைநூல் என பல பெயர்களில் அழைக் கப்படுகின்றன இந்நூல் ஏனைய நூல்களைப் போல் இல்லாமல் "புனித நூல்" என கருதப்படுகிறது 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்டதாகக் கூறப்படுகிறது விலியம் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அனுபவங்களுடன் வாழ்ந்த ஆசிரியர்களால் வெவ்வேறு இலக்கிய நடைகளில் எழுதப்பட்ட நூல்களின் தொகுப்பாகும் இது கி.மு 950க்கும் கிபி 100க்கும் இடைப்பட்ட காலப்பகுதயில் எழுதப்பட்டதாக விவிலிலிய ஆராட்சி யாளர்கள் கருதுகின்றனர்

திருவிவிலியமானது இறைவன் மனித அன்பு உறவு அவற்றின் மூல முதல் ஆசிரியரும் இறைவனே ஆகும் விவிலியம் 73(66) நூல்களை உள்ளடக்கியுள்ளது அதை இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது முதல் பகுதி "பழைய ஏற்பாடு" என அழைக்கப்பட்டு 46(39) நூல்களை கொண்டுள்ளது இரண்டாம் பகுதி புதிய ஏற்பாடு என அழைக்கப்பட்டு 27 நூல்களை கொண்டுள்ளது

செங்கடலை கடத்தல் அதன் மூலம் அடிமை தனத்தில் இருந்து விடுதலையாகும் நிகழ்வுகள் அனுபவங்கள் என்பவற்றினை மையமாக கொண்டு இஸ்ராயேல் மக்கள் இறைவனோடு கொண்டுள்ள தொடர்பு என்பவற்றினை மையமாகக் கொண்டு பழைய ஏற்பாடு எழுதப்பட்டுள்ளது நாசரேத்து இயே சுவின் வாழ்க்கை வரலாறு நிகழ்வுகள் அவற் றின் நற்செய்தி பரலோக ராஜ்சியம் சபைகள் வளர்ச்சி போதனைகள் என்பவற்றை மைய மாகக் கொண்டு புதிய ஏற்பாடு எழுதப்பட் டுள்ளது. திருவிவிலியமானது பல்வேறு சமூக அரசியல் பொருளாதார கலாச்சார சித்தாந்தங்கள் ஒட்டுமொத்தமான உணர்வு களின் சங்கமமாக அமைந்திருந்தாலும் விவிலியம் இறைவனின் திருவாக்கா கவும் திருவசனமாகவும் நமக்கு கிடைத்திருக்கும் ஒரு விலையேரப்பெற்ற பொக்கிஷமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.தி.சித்ரா

# சாதனை எம்முன்...

தென்றலின் சுகங்கள் தொடுத்து
திங்களின் பனிதனை கொய்து
குன்றுபோல் திடமாய் நிமிர்ந்து - நற்
குருவாய் திரள்வோம்.

கற்றவை நெஞ்சுள் மீட்டி
கற்பவை உரமாய் கொண்டு
கற்பதே தொழிலாய் மேவி -இனி
கற்றவை விதைப்போம் நாளும்.

குருவின் பண்புகள் பருகி
குணமாய் குவலயம் காத்து
குறைகளே இல்லா மனதாய் - இப்
புவிதனில் புஸ்பமாவோம்.

சாதனை எம்மால் தானே
சரித்திரம் சொல்லும் இன்றும்
வெற்றியுள் அகிலம் வெல்ல
பூணுவோம் ஆசிரியப் பணியை

ஆற்றல் பல்கிட வேண்டி
ஆசிரியர் பணிகளோ கோடி
முச்சாய் பயிற்சியில் நின்று
முரசாய் கொட்டிடுவோம் இன்று

சேவையில் தனித்துவமுண்டு
சோர்வில்லா இயக்கமும் நன்று
சோதனை எது வந்திடினும் - நற்
சாதனை எம்முன் பிறக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி பா.கிறேஸ்



# கிறிஸ்தவபாட ஆசிரியரே! நீங்கள் ஏன் முக்கியமானவர்கள்?

கற்பித்தலே அனைத்து உத்தியோ கங்களிலும் பார்க்க சிறப்பானது, முக்கிய மானது, கௌரவமானது என நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஓர் ஆசிரியர் நல்ல வழிகாட்டியாகவும், நல்ல ஆலோசக ராகவும், சமூகத்தை நல்வழியில் வழி நடத்திச் செல்பவராகவும் காணப்படுகின்றார். இதற்கு இயேசுகிறிஸ்து ஓர் முன்மா திரியாவார். இயேசுகிறிஸ்து ஓர் சிறந்த ஆலோசகர், ஓர் சிறந்த வழிகாட்டி, ஓர் சிறப்பான ஆசிரியர் என்று கூறுவது சாலப்பொருத்தமான ஒரு விடயமாகும்.

அநேக வித்தியாசமான வரங்களை ஒவ்வொருவருக்கும் இறைவன் தந்துள்ளார். அவ்வகையில் எமக்கு விசேஷித்த ஞானத்தை கொடுத்து, பிறர் முன்னிலையில் எம்மைத் தெரிவுசெய்து அற்புதமான, சிறப்பான ஓர் ஊழியத்தை செய்வதற்கு இறைவன் எங்களை முற்குறித்து தெரிந்து கொண்டபடியால் நாங்கள் முக்கிய மானவர் களாக காணப்படுகின்றோம்.

அவ்வகையில் நாம் ஏன் முக்கிய மானவர்கள்? விசேஷித்தவர்கள்? எனச் சில தலைப்புக்களின் கீழ் உற்றுநோக்குவோம்.

- நீங்கள் கடவுளின் கற்பிக்கும் உப கரணமாக இருப்பதால் நீங்கள் முக்கிய மானவர்கள்.
    - நீங்கள் தேவனுடைய வார்த் தையை கற்பிக்க ஆயத்தமாய் இருப்பதால் நீங்கள் முக்கிய மானவர்கள்.
    - நீங்கள் தேவ வசனத்தை விபரிப் பவர்களாகையால் நீங்கள் முக்கிய மானவர்கள்.
    - நீங்கள் எல்லோரையும் எல்லா வற்றையம் சீர்திருத்துபவராக இருப் பதால் நீங்கள் முக்கியமானவர்கள்.
    - அவருடைய பணிக்காக அழைக்கப் பட்டவர்களாக இருப்பதால் நீங்கள் முக்கியமானவர்கள்.

**1) நீங்கள் கடவுளின் கற்பிக்கும் உபகரணமாக இருப்பதால் நீங்கள் முக்கியமானவர்கள்**

கடவுள் எங்களின் மூலம் எங்களை நம்பி வரும் பிள்ளைகளுக்கு அவரின் அன்பையும், அவரின் வார்த்தைகளையும் எடுத்து விளக்குகின்றார். எமது தோற்றமும், திறமைகளும் வித்தியாசமாக வழங்கியுள்ள இறைவன் ஒவ்வொரு பிள்ளைகளின் நிலையினைக் கருத்திற்கொண்டு, கல்வியை வழங்கக்கூடியதாக எம்மைத் தம் கருவி யாய் பயன்படுத்தி வருகின்றார்.

தேவன் எமக்கு கொடுத்துள்ள பணியினை நிறைவேற்றுவதற்கு தினமும் அர்ப்பணிப்புடையவராய் இருக்க வேண்டும். நாம் அன்பினால் செயற்பட வேண்டும் அத்துடன் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்ய வேண்டும்.

கற்பித்தலைக் குறித்து உங்கள் அபிப்பிராயத்தை ஆராய்வதற்கு நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்குங்கள். ஏனெனில் இறைவன் இந்த மிகப்பெரிய ஊழியத்தை அல்லது சேவையை எம்பொறுப்பில் கொடுத் திருக்கின்ற சந்தர்ப்பத்திலே, நாம் அதற்கு ஏற்றாற்போல் எம்மை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது.

அத்தோடு எமக்கு கொடுக்கப் பட்டுள்ள இப்பாரிய பணியை நாம் கடமைக்காக செய்கின்றோமா? அல்லது கட்டாயத்தின் பேரில் செய்கின்றோமா? என ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில் "தேவவார்த்தையை கற்பிக்கும் முகமாக நீங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக் கிறீர்கள் இது தெய்விக நியமிப்பாகையால் நீங்கள் முக்கியமானவர்கள்" என்பதை எப்போதும் உணாந்து கொண்டு அதன்படி நடந்துகொள்ள வேண்டும்.

**2) நீங்கள் தேவ வார்த்தையை கற்பிக்க ஆயத்தமாய் இருப்பதால் நீங்கள் முக்கியமானவர்கள்.**

வேதாகமமானது தெய்வீக நோக்கத் தையும், வல்லமையையும் உடையதால் அது விசேஷமாகின்றது. அது வகுப்பில் பாவிக்கப்படும் பிரதான பாடப்புத்தக மாகையால் வாரம் முழுவதும் அநேக பிள்ளைகளுக்கு கிடைக்கும் ஒரே ஆவிக் குரிய உணவு அதுவாக இருக்கலாம். நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும் போது அப்பகுதி என்ன கூறுகிறது? என்ற விளக்கத்துடனும் அதனை வகுப்பில் எப்படி எடுத்துரைப்பது என்ற ரீதியில் உங்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

ஆயத்தமான ஆசிரியராவதற்கு நீங்கள் கற்பிப்பதற்காக நேரமும் ஸ்தான மும் ஒதுக்கப்பட வேண்டும். நீங்கள் கற்பிக்கும்போது ' பிள்ளையின் வாழ்க் கையில் உறுதியான நல் மாற்றங்களும், நடைமுறைப்படுத்தலும் அமைவதற்காக உங்களுக்காகவும், அப்பிள்ளைகளுக் காகவும் பாடத்திற்காகவும் நீங்கள் ஜெபம் செய்ய வேண்டும்.

அத்தோடு எமது கற்பிக்கும் பணியை வெற்றிகரமாக்குவதற்கு நாம் தேவ வசனத்தை ஆர்வமுடன் கற்கும் ஆசிரியராக இருக்க வேண்டும். நாம் கற்பிக்கும் போது அக்கல்வியானது எமது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதற்கூடாக ஒவ்வொரு பிள்ளையும் அதனைப் பின்பற்ற அப் பாடத்தைக் கற்றுக்கொடுக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

அவ்வாறு நீங்கள் தேவ வார்த் தையை கற்றுக்கொடுக்க ஆயத்தமாக இருப்பதால் நீங்கள் முக்கியமானவர்கள்.

**3) நீங்கள் தேவ வசனத்தை விபரிப்பவர்களாகையால் நீங்கள் முக்கிய மானவர்கள்**

"வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் ஒரு கற்பனை கதை அல்ல" உண்மையான சம்பவங்களை அடிப் படையாக கொண்டு எழுதப்பட்டவையாகும். வேதாகமத்தில் சகல சம்பவங்களும், அச்சம்பவங்கள் நடைபெற்ற இடங்களும் குறிப்பிடப்பட்டு காணப்படுகின்றது. எனவே எமது சேவை என்ன என்று நோக்கினால் மாணவர்களுக்கு விளங்கும் வகையில் மிக தெளிவாகவும், அவர்களது வாழ்க்கைக்கு உதவக்கூடிய வகையில் தேவவசனத்தை விபரமாகவும் கற்பிக்கின்றவர்களாக இருக் கின்ற படியால் நீங்கள் முக்கிய மானவர்களாகக் காணப் படுகின்றீர்கள்.

நாம் எமக்கு வழங்கப்பட்டுள்ள பாடத் திட்டங்களுக்கமைய தெளிவாகவும், பிள்ளைகளுக்கு விளங்கக்கூடிய வகை யிலும் கற்றுக்கொடுக்கவேண்டும். ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் வார்த்தையானது உயிருள்ளதாக இருக்கின்றமையால் ஆழமான கருத்தை நாம் தெளிவாக கற்றுக்கொடுக்க கடமைப்பட்டவர்களாக காணப்படுகின்றோம்.

நாம் கற்றுக்கொடுக்கும் முன்பதாக ஓர் தெளிவான சிந்தையுடனும் ஆயத்த நிலையிலும், மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலும் கற்றுக்கொடுக் கிறவர்களாக இருக்க வேண்டும்.

எனவே இவ்வாறான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் தேவ வசனத்தை விபரிப்பவர்களாகையால் நீங்கள் முக்கியமானவர்களாக இருக் கின்றீர்கள்.

**4) நீங்கள் சீர்திருத்துபவராக இருப் பதால் நீங்கள் முக்கியமானவர்கள்.**

தேவ வசனம் மனிதனின் உள்ளத்தில் ஊடுருவி அங்கு ஜீவ வல்லமை செயற்பட வேண்டுமாயின் அவ் வசனத்தின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். நாம் ஜெபத்துடன் கற்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையானது சிறப்பாகக் காணப்பட வழிவகுக்கின்றது.

இவ்வாறு ஓர் அர்ப்பணிப்போடு நாம் செயற்பாடுகளில் ஈடுபடும்போது பிள்ளை களின் மத்தியில் சிறந்த ஒரு பிரதிபலனை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அவ்வகையில் பின்வரும் விடயங்களை நாம் மாணவர்களிடம் எதிர்பார்க்க முடியும்.

1)மாணவர்கள் வழிபாடுகளில் ஈடுபடுவர்

2)கடவுளின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவர்

3)தாங்கள் பிழைகள் செய்யும் சந்தர்ப்பங் களில் அதற்காக அழுது புலம்பி மனந்தி ரும்புவர்.

4)கடவுளின் வார்த்தையைக் கேட்டு மனமகிழ்வுடன் செயற்படுவர்.

எனவே ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் சீர்திருத்துபவராக இருப்பதால் நீங்கள் முக்கியமானவர் களாக காணப்படுகிறீர்கள்.

**5) அவருடைய பணிக்காக அழைக்கப் பட்டவர்களாக இருப்பதால் நீங்கள் முக்கிய மானவர்கள்.**

இவ்வுலகிலே கோடான கோடி மக்கள் இருந்தாலும் ஆண்டவர் தேர்ந் தெடுத்திருப்பது உங்களையே. ஏனெனில் உங்களின் தகுதி, திறன்கள், ஆளுமைகள் அனைத்தையும் கொண்டு அவரின் அழைப்பிற்கு உண்மை உள்ளவர்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஏனெனில் அவருடைய பார்வையில் நாம் விசேஷித்தவர்களாகக் காணப்படு கின்றோம். எனவே தான் உங்களை அவருடைய மகத்தான பணிக்கு தேர்ந்தெடுத்திருக்கிறார். 'அந்தப் பணியே கற்றுக்கொடுக்கும் பணி'.

இயேசுக்கிறிஸ்து ஒரு சிறந்த ஆசிரியர் என்று கூறினால் அது சாலப் பொருத்தமாகும். ஏனெனில் அவருடைய போதனைகள் மூலம் இருண்டு கிடந்த இதயங்கள் ஒளி பெற்றிருக்கின்றன. உண் மையான அன்பு வெளிப்பட்டிருக்கின்றன. பல மறைவான இரகசியங்கள் வெட்ட வெளிச்சமாகி இருக்கின்றன. இவ்வாறான ஓர் மகத்தான பணியான ஆசிரிய பணிக்கு அழைக்கப்பட்டவர்களாகையால் முக்கிய மானவர்களாகக் காணப்படுகின்றீர்கள்.

**"நீ. மலைமேல் உள்ள பட்டணம்**
**மறைந்து வாழாதே - நீ**
**மறைந்திருக்கும் காலமல்ல**
**எழுந்து ஒளிவீசு!"**

**உசாத்துணை நூல்:- சிறார் ஆசிரியர் கைந் நூல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
மேரி ரோஜினி புண்ணியராஜ்

# கணினியை உங்களுடையதாக மாற்ற

கணினி நம்முடையதுதான் என்றாலும் யூசர்நேம், அதற்கான படங்களில் மட்டுமே நமது பெயர், படங்கள் இடம்பெறுகின்றன. இவற்றுடன் இன்னும் சில இடங்களில் நம் பெயர்களை அமைத்து கணினியை நம் பெயரையும் படத்தையும் போட்டு முழுமையான நம் கணனியாக எப்படி மாற்றலாம் என்று பார்ப்போம். இதனை விண்டோஸ் எக்ஸ்பிக்கு குறிப்பு களாக தருகிறேன்.

விண்டோஸ் சிஸ்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி கணினியில் நீங்கள் விரும்புவதனை பதிக்கலாம். முதலில் டெஸ்க்டொப்பில் உள்ள *My computer* ஐ கிளிக் செய்யவும். கிடைக்கும் மெனுவில் *Properties* என்பதனை தேர்ந்தெடுக்கவும். இங்கு சிலரின் கணினிகளின் விண்டோஸ் லோகோ அருகே கணினியை தயாரித்த நிறுவனத்தின் லோகோ கூட இருக்கலாம். அப்படியானால் நம் லோகோ அல்லது பெயரினை எப்படி இணைப்பது.

1. முதலில் ஒரு படம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். மைக்ரோசொப்ட் பெயிண்ட் புரோகிராமினை இயக்கவும் இதற்கு *start - All programs - accessories - paint* எனச்செல்லவும்.

2. இங்கு நாம் அமைக்க இருக்கும் படம் *or* லோகோ 180x115 என்ற அளவிலான பிக்ஸெல்களில் மட்டுமே இருக்க வேண்டும். என்பதால் கான்வாஸ் எனப்படம் படத்தின் தன்மையை செட் செய்திட வேண்டும். இதற்கு *Image* மற்றும் *Attributes* தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் *box*இன் அளவு யூனிட்டாக *[pixels]* என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இதில் மேலே சொன்ன அளவினை அமைக்கவும். பின்னர் *ok click* பண்ணவும்.

3. டூல்பாரில் உள்ள டூல்களை பயன்படுத்தி நீங்கள் விரும்பும் லோகோவினை அமைக்கவும். லோகோவின் பின்னணியினை அமைக்க *Fill tool* பயன்படுத்தலாம். *texst tool* பயன்படுத்தி கலரில் டெக்ஸ் அமைக்கலாம். மேலும் கிளிப் ஆர்ட் கலரியிலிருந்து ஏதேனும் நமக்குப் பிடித்த படத்தை தேர்ந்தெடுத்து அமைக்கலாம். உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் போட்டோக்களை இணைத்து லோகோ வினை தயார் செய்திடலாம்.

4. அடுத்து *file menu click* செய்து அதில் *save as* என்ற பிரிவினை தேர்ந்தெடுக்கவும். இனி கிடைக்கும் டயலொக் பொக்ஸில் *save* செய்ய வேண்டிய டைரக்டரியாக *c:windows / system* 32 என்ற டைரக்டரியைத் தேர்ந்தெடுக்கவும் *save* செய்யப்படும் பைலின் பெயராக *oemlogo.bmp* என்று கொடுக்கவும். இப்போது லோகோ தயாராகிவிட்டது அடுத்து டெக்ஸ்ட் என்டர் செய்ய வேண்டும். இதற்கு நோட்பாட் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோட்பாட் கிடைக்க *Start → All programs → accesories → not pad* என்று செல்லவும்

*Genera, manufacture* - (இங்கு எதனையும் கொடுக்கலாம்)

*model - (Support information)*

*Line `= This computer was devised by*

*Line 2 Mr.....*

*Line 3 = Enjoy using It*

*line 4 = *****

இங்கு சமன் (=) அடையாளத்தினை அடுத்து நீங்கள் எந்தத் தகவலையும் டைப் செய்திடலாம். இன்னும் அதிகமான வரிகளையும் இணைக்கலாம். ஆனால் அதே போர்மட்டில் இருக்க வேண்டும்.

இங்கு அனைத்தும் முடிந்தவுடன் *file* தேர்ந்தெடுத்து அதில் *save as* என்பதில் *click* செய்து கிடைக்கும் டயலொக் பொக்ஸில் மேலே குறிப்பிட்ட அதே டைரக்டரியின் *(C/windows / system 32)* பெயரை டைப் செய்து பைலை *oeminfo.ini* என்ற பெயரில் *save* செய்திடவும்.

இதில் கவனமாக பைல் டைப் *(file type)* என்பதில் டெக்ஸ் டொகுமெண்ட் *(text document )* என்பதற்குப் பதிலாக *All files* என இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.

மேலே சொன்ன அனைத்தையும் சரியானபடி நீங்கள் செய்து விட்டால் அடுத்த முறை கணனியை ரீ ஸ்டார்ட் செய்து பின்னர் சிஸ்டம் புரோப்பர்ட்டீஸ் பார்க்கையில் உங்களுடைய புதிய லோகோ மற்றும் தகவல்களை காணலாம். நம் செய்தியை காண *support information* என்பதில் கிளிக் செய்திட மறக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி பாலேஸ்வரி எட்வேட்

# படித்தவற்றில் சுவைத்தது

**நண்பர்கள்**

1. உன் பழைய நண்பர்களை கைவிடாதே! புதிய நண்பர்கள் அவர்களுக்கு இணையாக மாட்டார்கள்.
2. தன்னலம் தேடும் நண்பர்களும் உண்டு. அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள்.
3. உன்னுடன் விருந்துண்ணும் நண்பர்களும் உண்டு. அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள்.
4. நீ இறக்கும் முன் உன் நண்பர்களுக்கு உதவி செய். உன்னால் முடிந்தவரை தாராளமாக கொடு.
5. இன்பத்தில் உண்மையான நண்பனை அறிந்துகொள்ள முடியாது. துன்பத்தில் உன் பகைவனைக் கண்டுகொள்ள முடியும்.
6. செல்வர் தடுமாறினால் நண்பர்கள் தாங்குவார்கள். எளியோர் விழும்போது நண்பர்கள் சேர்ந்து தள்ளி விடுவார்கள்.
7. உன் பகைவர்களிடமிருந்து விலகி நில். உன் நண்பர்களிடம் எச்சரிக்கையாக இரு.
8. பகைவர்களாய் மாறும் நண்பர்களும் உண்டு. அவர்கள் உன் நெருக்கடியான வேளையில் உன்னோடு இருக்க மாட்டார்கள்.
9. நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை. அவர்களது தகைமைக்கு அளவுகோல் இல்லை.
10. நீ. தாழ்ந்து விட்டால் நண்பர்கள் உனக்கு எதிராய் மாறுவார்கள். உன் முகத்தில் விழிக்கமாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.ஜெப்ரி ரபாயல்

# தமிழின் தொன்மை

## அறிமுகம்

தமிழ் தமிழர்களின் தாய் மொழி. தமிழ் திராவிடர் மொழிக் குடும்பத்தின் முதன்மையான மொழிகளில் ஒன்றும் செம் மொழியும் ஆகும். 1997 ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி உலகம் முழுவதிலும் 8 கோடி (80 மில்லியன்) மக்களால் பேசப்படும் தமிழ் ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசும் மக்களின் எண்ணிக்கை அடிப்ப டையில் பதினெட்டாவது இடத்தில் உள்ளது.

## வரலாறு

தமிழ் இந்திய மொழிகளில் மிக நீண்ட இலக்கிய, இலக்கண மரபுகளைக் கொண்டது. தமிழ் இலக்கியங்களில் சில இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. கண்டெடுக்கப்பட்ட தமிழ் ஆக்கங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டைச் சேர்ந்த பிராமி எழுத்துக்களில் எழுதப் பெற்றவைகளாகும். இந்தியாவில் கிடைத் துள்ள ஏறத்தாழ 100000 கல்வெட்டு தொல்லெழுத்துப் பதிவுகளில் 55000 க்கும் அதிகமானவை தமிழில் உள்ளன. பனை யோலைகளில் எழுதப்பட்டடு அல்லது வாய் மொழி மூலம் வழிவழியாக பாதுகாக்கப்பட்டு வந்ததால் மிகப் பழைய ஆக்கங்களின் காலங்களை கணிப்பது மிகவும் கடினமாக உள்ளது. எனினும் மொழியியல் உட் சான்றுகள் மிகப் பழைய ஆக்கங்கள் கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 3 ஆம் நூற்றா ண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயற்றப் பட்டிருக்கலாம் எனக் காட்டுகின்றது. இன்று கிடைக்கக்கூடிய மிகப் பழைமையான நூல் தொல்காப்பியமாகும். இது பண்டைக்காலத் தமிழின் இலக்கணத்தை விளக்கும் ஒரு நூலாகும் இதன் சில பகுதிகள் கி.மு. 200 அளவில் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. 2005 இல் அகழ்ந்தெடுக்கப்பட்ட சான்றுகள் தமிழ் எழுத்து மொழியை கி.மு. 500 அளவுக்கு முன் தள்ளியுள்ளன. பண்டைத் தமிழில் எழுதப்பட்ட குறிப்பிடத்தக்க காப்பியம் கி.பி 200 - 300 காலப்பகுதியைச் சேர்ந்த சிலப்பதிகாரம் ஆகும் .

### தமிழ் இலக்கியத்தினதும் தமிழ் மொழியினதும் ஐந்து காலப்பகுதிகள்

சங்க காலம் (கி.பி. 000 - கி.பி 300)
சங்கமருவிய காலம் (கி.பி 300 - கி.பி 600)
பக்தி இலக்கிய காலம் ( கி.பி 600 - கி.பி 1200 )
மையக் காலம் (கி.பி 1200 - கி.பி 1800)
தற்காலம் (கி.பி 1800 - இன்று வரை)

## மொழிக்குடும்பம்

தமிழ் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியாகும் இக் குடும்பத்தில், இருளா, கைகாடி, பெட்டக்குறும்பா, சோலகா, யெருகுலா என்னும் மொழிகள் அடங்கும். தமிழ் மொழிக் குடும்பம், தமிழ், மலையாளம், மொழிகளின் ஒரு துணைக் குடும்பமாகும். தமிழ் கன்னடம் மொழிக் குடும்பத்தின் துணைப்பிரிவாகவும் உள்ளன. தமிழ், மலையாளம், மொழிகள் தமிழ்குடகு மொழிக் குடும்பத்தின் துணைப்பிரிவாகவும் உள்ளது.

## சொற் பிறப்பு

தமிழ் என்ற சொல் " த்ராவிட " என்னும் சமஸ்கிருத சொல்லின் திரிபு என சிலரும், தமிழ் என்பதே " த்ராவிட" என்னும் சமஸ்கிருத சொல்லின் மூலம் என வேறு சிலரும் கூறுகின்றனர்.

சௌத்துவருத்து என்பவர் தமிழ் என்பதன் ஆறு தம் - மிழ் என்று பிரிந்து காட்டி " தனது மொழி" என்று பொருள்படும் என்று தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பேசப்படும் இடங்கள்

தமிழ் தென் இந்திய மாநிலமான தமிழ் நாட்டின் பெரும்பான்மையினரதும், இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களதும் முதன் மொழியாகும். இது தவிர இந்தியாவின் கர்நாடகம், கேரளம், மற்றும் மகாராட்டிரத்திலும், இலங்கையின் கொழும்பு மற்றும் மத்திய மலை நாட்டு பகுதிகளிலும் வழங்கி வருகின்றது.

மேலும் சிங்கப்பூர் , மலேசியா, மொரீசியாஸ், தென்னாபிரிக்கா, கயானா, பிஜி, சுரினாம் மற்றும் ட்ரினிடாட்டும் டொபோகோ போன்ற நாடுகளிலும்

மிக அண்மைக்காலங்களில் பெரும் பாலும் இலங்கையின் இன முரண்பாடுகள் காரணமாக அகதிகளாக இடம் பெயர்ந்த வர்களும் அஸ்திரேலியா, கனடா, ஐக்கிய அமெரிக்கா போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

## எழுத்து முறை

தமிழ் எழுத்து முறைமை ஒலிப் பியல் அடிப்படையிலானது. குறுக்கம் அளபெடை மற்றும் புணர்ச்சி நெறிகளுக்கு உட்பட்டே எழுத்துக்கள் ஒலிக்கப் படுகின்றன. தற்போதைய தமிழ் எழுத்து முறை தமிழ் பிராமியில் இருந்து தோன்றியது ஆகும்.

## தமிழ் ஒலிப்பு முறை

தமிழில் 12 உயிரெழுத்துக்களும், 18 மெய்யெழுத்துக்களும் உள்ளன. ஒவ்வொரு உயிரெழுத்தும் 18 மெய்யெ ழுத்துக்களோடும் சேர்வதனால் 216 உயிர் மெய்யெழுத்துக்களும் பிறக்கின்றன. இவற் றோடு ஆயுத எழுத்தும் சேர்ந்து தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247 ஆகும்

## குறுக்கம்

குறுக்கம் என்பது சில ஒலிப்பியல் கூறுகள் சில குறிப்பிட்ட ஒலிகளையடுத்து வரும் பொழுது தத்தம் இயல்பான ஒலி அளவுகளிலிருந்து குறைந்து ஒலித்தலைக் குறிக்கும். அவை பின்வருமாறு
குற்றியலுகரம் - உயிர் உ
குற்றியலிகரம் - உயிர் இ
ஐகாரக் குறுக்கம் - கூட்டுயிர் ஐ
ஔகாரக் குறுக்கம் - கூட்டுயிர் ஔ
ஆய்தக் குறுக்கம் - சிறப்பெழுத்து ஃ

## இலக்கணம்

இலக்கண அடிப்படையில் தமிழ் ஒரு ஒட்டு நிலை மொழியாகும். தமிழில், பெயர், வகை, எண், வேற்றுமை, காலம் போன்றவற்றை விளக்கச் சொற்களுடன் பின்னொட்டுக்கள் சேர்க்கப்படுகின்றன. தமிழின் பொதுவான கருவி மொழியியல் சொற்களும் கலைச் சொற்களும் தமிழா கவே உள்ளன.

தமிழ் இலக்கணம் பெரு வாரியாக தொல் காப்பியத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. தற்கால தமிழ் இலக்கணம் பெரும்பாலும் நன்னூலைத் தழுவியமைந்துள்ளது.

சொல் வளம்

தமிழ் சொல் வளம் நிறைந்த மொழி. திருக்குறள் போன்ற சிறந்த பழந்தமிழ் படைப்புக்கள் தமிழர்களால் சிறப்பாகக் கற்கப்படுவதனால் தமிழ் இன்னும் சொல் வளம் நிறைந்த மொழியாகக் காணப் படுகிறது.

**தமிழ் மொழி ஆய்வு மற்றும் வளர்ச்சியும் அமைப்புக்கள்**

1)உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
2)செம்மொழி தமிழ் உயராய்வு மையம்
3)அறிவியல் தமிழ் மன்றம்
4)தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்
5)உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றம்
6)தமிழ் இணையப் பல்கலைக்கழகம்

உசாத்துணை :- இணையம் வீக்கிபீடியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி
ஜேன்.மெட்டில்டா மதியழகன்

# என் உணர்வுக்குள்

இயற்கை எழில் கொஞ்சும்
மலைத்தாய் மடியில்...
மண்ணின் மைந்தர்களாய்
நாளைய வாழ்வின்
விடியலுக்காய்
ஏற்றி வைக்கப்பட்ட
தீபங்கள்- நாம்

துள்ளித் திரிந்த
சின்ன வயதில்
கண்ணியமாய் கல்வி கற்க
களிப்போடும், கவனத்தோடும்
பள்ளிக்குச் சென்றோம்
வெற்றிகள் பல பெற்று
*O/L, A/L* என தோற்றி
சித்தியும் எய்தினோம்



காலங்கள் கரைந்தோட
சேதி ஒன்றறிந்தோம்
படிவமும் அனுப்பி
பரீட்சையும் வந்தது
உறங்க மறுத்து பெற்றோரும்
கைகோர்க்க மிக
கவனமாய் படித்தோம்

பெறுபேறுக்காய் காத்திருந்தோம்
பேறுகாலவலியை விட
பெரும் வலியுடன்...
நேர்முகம் காணவென அறிந்து
எடுத்துச் சென்றோம்
கடிதங்களை மட்டுமல்ல
பெற்றெடுத்த குழந்தைகளையும்

"ஹட்டன்" மாநகரத்து
டன்பார் மைதானத்தில்
திரண்டோம் பேரணியாய்ப்
பெற்றோம் பெருமையாய்
கரம் நீட்டி- நியமனப் பத்திரங்களை

பள்ளிக்குள்
தடம் பதித்தோம் -நாம்
பல பள்ளிக்கூடங்களையும்
தடம் பதிக்க வைத்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி ஓடிப் பெற்ற எம்
ஆசிரிய நியமனத்தில் தினம்
ஆயிரம் எள்ளி நகையாடல்கள்

உயர் தரத்துடன் உள்
நுழைந்த எம் ஆளுமைக்கு
அத்திவாரமாய்
பதினாறு நாட்கள் - பலநூறு
பயன்கள் பெற்று
தேரோட அச்சாணியானோம்

ஆண்டுகள் மூன்றோட
அழைப்பொன்று வரக்கேட்டு
வார நாள் பள்ளிக்கு
வெள்ளி" முடிய இவ்விரு நாள்
இறுதி வகுப்புக்கும் என
பாதி கரை கண்டோம்
மீதி கரை காணவந்தோம்.

பத்திரிகைகள் படித்தோம்
பேசியில் பல அறிந்தோம்
விரைந்தோம் நாமும்...

அவசரமாய் ஆசனங்களை
பதிவு செய்து
சுமைகள் பல உள்வாங்கி
இரவிரவாய் பேருந்தில்
திறந்த விழி
கனவுகளுடன்

சங்கமித்தோம் - நாம்
யாழ் மண்ணில்
முதல் நாள் பெற்றிட்ட
அனுபவமோ பல நாள்
வண்ண கனவுகளுடன்
வந்திறங்கினோம் கலாசாலைக்குள்
தங்குமிடங்கள் தேடியலைந்து
பல நாள் கடந்து போக
பலதும் பழகினோம்

தெவிட்டாமல் நாளும்
பொழுதும் கற்பித்தல்
முறைகளும்
பழைய, புதிய, திருச்சபை
வரலாறுகளையும்
சஞ்சலப்படாமல் சரி பார்த்தோம்.

அக்குவேர் ஆணிவேராக
இலக்கணமும் இலக்கியமும்
குழுக்களாய் கூடி - மிக
இனிதாய் சிந்தித்தோம்
தமிழ் இலக்கிய வரலாறையும்
சுகமாகவே சுவாசித்தோம்.

ஆர்வமுடன் ஆங்கில அறிவையும்
உடற்கல்வியையும்
வசீகரமாய் வாங்கிக் கொண்டோம்.
கற்றதினை வென்று காட்டிடுவோம்.

தூரிகையின் பல வண்ணத்
துளிகளையும்
ஆடலும், பாடலும் கலந்து
நாடகமும் அரங்கியலுமாய்
வலம் வந்து சென்றோம்.
ஓர் கல்விச் சுற்றுலா

விழாக் கோலமாய் உலாப் போய்
உண்ணா விரதத்துடன்
தள்ளினோம் கைகோர்த்து
அணிதிரண்டு "பஸ்ஸை"
அப்போது கிடைத்த
அன்னதானத்தை அருமருந்தாய்
சுவைத்திட்டோம்.

மறந்தும் மறக்காத
பல நினைவுகளுடன்
தடம் பதிக்கப்பட்ட - பல
தடயங்களுடன்...
கலையாத இக் கனவுகளுக்கு
சொந்தக்காரர் யார்?
பலர் வந்து நிலைநாட்டி
அத்திவாரம் பலர் பெற்று
நிதர்சனமாக பல உண்மைகளை
நிற்கும் திசைகளெல்லாம்
நினைவு சின்னங்களாக்கிய
"பலாலி ஆசிரியர் கலாசாலை"
இது எம் ஆதிமார்த்த ஜீவன்.
நான்வாழ, நீவாழ என நாம்
வாழ வழிகாட்டும் உம் பணி வாழியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.ஆ.அலெக்ஷியர்

# ஆளுமை வளர்ச்சியின் இயல்புகள்

1. ஆளுமை வளர்ச்சி வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து இடம்பெறும் ஒன்று

2. ஒருவர் சமூக அங்கத்தவர் என்ற வகையில் வாழ்வதற்கு அவசியமான ஆளுமை இயல்புகளை வளர்ப்பதற் காகச் சட்ட திட்டங்கள், பிரிவு தண்டனை, ஊக்குவித்தல் நுட்பங்கள் ஆகியவற்றைச் சமூகம் பயன்படுத்துகின்றது.

3. ஆளுமைப்பண்பு அடிக்கடி மாற்றமடையும் பிள்ளை உடலால் வளரும் போது அதனது ஆற்றல்களும் மாற்றமடைகின்றது. இதனால் நடத்தை மாற்றம் நிகழும்.

4. மறுசீரமைப்பு, ஒன்றிணைத்தல் ஆகிய செயற்பாடுகளினால் ஆளுமை வளர்கின்றது.

5. ஆளுமை வளர வளர அது மிகவும் சிக்கலாகவும் ஒன்றிணைந்து காணப்படும் காலம் போகப்போக மிகவும் உறுதியான ஆளுமைப்பண்புகள் வெளிவரும்.

6. தனியாளின் மனவெழுச்சி, ஊக்கம், மனப்பான்மை, எதிர்பார்ப்பு போன்ற பல்வேறு உளவியல் அமைப்புக்களில் இந்த ஒன்றி ணைப்பும், ஒன்றித்தலும் ஏற்படுகின்றன.

7. சமநிலையற்ற ஆளுமையானது எத் தகைய முறையோ முடிவோ, பொருத்தமோ இல்லாத சித்திரத்தைப் போன்றதாகும்.

8. சமநிலையுள்ள அல்லது நல்ல ஆளுமை சகல அம்சங்களும் பூரணமாயமைந்த சித்திரத்தைப் போன்றதாகும்.

9. ஆளுமை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள் பல்வேறு அம்சங்களுக்கிடையில் முறையான குறுக்கு குத்தான தொடர்பு இருப்பதே முன் மாதிரியான நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.நாகமுத்து மனோரஞ்சிதன்
விரிவுரையாளர்

# சார்பெண்ணங்களும் குழுநடவடிக்கைகளும்

ஒரு நிறுவனம் அல்லது சமூகம் தன்னகத்தே பலவேறுபட்ட தனிநபர்களை கொண்டிருப்பதுடன் அந்நபர்கள் வயது கல்வியறிவு, தொழில் நிலையின் தன்மை, தொழிலனுபவம், அவர்கள் கொண்டிருக்கும் சமூக மதிப்பு, அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல், அவர்களது நியாயவாதத் தன்மைகள் ஒரு விடயத்தை புரிந்து கொள்ளும் ஆற்றல் விடயங்களைத் தர்க்க ரீதியாகச் செயற்படுத்தும் முறை, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் தேவைகள் மற்றவர்களை ஒருங்கிணைக்கும் திறன், ஏனையவர்களுடன் ஏற்படுத்தும் ஆளிடைத் தொடர்புகள் என்பனவற்றின் அடிப்படையில் வெவ்வேறு தன்மையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வளவு வேறுபட்ட தன்மையுடையவர்கள் கூட ஏதாவது ஒன்றின் அடிப்படையில் அல்லது பலவற்றின் அடிப்படையில் ஒன்று சேர்ந்து குழுவா கின்றனர்.

எமது சமூகப்புலத்திலுள்ள ஒரு சிறிய நிறுவனத்திலிருந்து பாரிய நிறுவனம் வரை ஒரு சிறிய சமூகக் குழுவிலிருந்து ஒரு பெரிய சமூகக் குழுவரை அதன் உறுப்பினர் களிடையே காணப்படும் குழுநிலைச் செயல்களும் தனிமனித செயல்களும் அந் நிறுவனங்களில் பாரிய தாக்கத்தை செலுத்துவனவாக உள்ளன. இவ்வாறு காணப்படுகின்ற சமூகக் குழுக்களால் அனேக நன்மைகள் ஏற்படும் அதே வேளை சில தீமைகளும் ஏற்படுகின்றன.

எனவே ஒரு சமூக அல்லது நிறுவன இயங்கியலை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் அச் சமூகத்தினுள் இயங்கி வருகின்ற குழுக்கள் அவற்றுக்கிடை யேயான உள்ளார்ந்த இடைவினை உறவுகள் பற்றி நாம் ஆழமாக அறிந்திருக்க வேண்டும். இதன் மூலம் தான் அந்தச் சமூகக் குழுவின் முன்னேற்றம் பற்றியோ வீழ்ச்சி பற்றியோ அல்லது அதன் அஸ்தமனம் பற்றியோ நாம் துல்லியமான மதிப்பீடுகளைச் செய்ய முடியம் அல்லது தேவையான தலையீடுகளை மேற் கொண்டு அதை மேம்படுத்தவோ அல்லது வினைத் திறனுடைய தாக்கவோ முடியும்.

எந்த ஒரு சமூகத்தை அல்லது நிறுவனத்தை எடுத்தாலும் இக் காரணி களின் சேர்க்கையின் அடிப்படையில் குழுக்கள் தோன்றினாலும் கூட அக் குழுக்களினால் களச்செயற்பாடு அல்லது நடவடிக்கை என்பது பின்வருமாறு மூன்று வகையில் ஏதாவது ஒன்றுக்குள் உள்ளடங் கிவிடும்

1.விரும்பி நெருங்குதல்
2.வெறுத்து ஒதுங்குதல்
3.எதிர்த்துச் செயற்படல்

இக் குழுக்கள் சமூகத்தின் அல்லது நிறுவனத்தின் இயக்கத்தில் செலுத்தும் தாக்கம் நிச்சயம் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

**விரும்பி நெருங்குதல்**

ஒரு குறித்த நிறுவனத்தில் உள்ளவர்கள் ஒருவரோடு ஒருவர் நல்ல உறவினை ஏற்படுத்தி தமது உறவை வலுப்படுத்தி ஒரு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளல் இவ்வகையாகும். இங்கு இவர்கள் ஏதாவது ஒரு விடயத்தின் பால் கருத்தொருமித்தவர்களாக ஈர்க்கப் பட்டு அந்த விடயத்திற்காக ஒன்றி னைந்து செயற்படுவர் அல்லது அந்நிறுவனத் திலுள்ளவர்களில் ஒத்த எண்ணம், மனப் போக்கு, கொள்கை உடையவர்கள் அவர்களது நடவடிக்கை காரணமாக ஒரு குழுவாக ஒன்று சேர்வர் இவ்வாறு உருவான குழுக்கள் இந் நிறுவன விடயங்களில் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும். எவ்வாறு இருந்த போதும் இவ்வாறு உருவான குழு விரும்பி நெருங்கி ஏற்பட்ட குழுவாகும்

**வெறுத்து ஒதுங்குதல்:-**

ஒரு நிறுவனத்தில் உள்ளவர் களிடையே ஏற்படும் தொடர்புகளின் போது அவர்களில் சிலர் வேறு சிலர் மீது கொண்டுள்ள அதிருப்தி அல்லது ஒத்துப் போகாமை காரணமாக அவர்களிடமிருந்து முடிந்தளவில் தனித்திருப்பதற்கும் விடு பட்டுக் கொள்வதற்கும் முயற்சி செய்வர் அல்லது விலகி தொடர்பைத் துண்டித்துக் கொள்வர் இவ் வகையான உறவே வெறுத்து ஒதுங்குதல் எனப்படும். இதுவும் இரண்டு விதமாக ஏற்படும். ஒன்று ஒரு விடயம் செயற்படுத்தும் போது அதில் முரண்பட்ட கருத்துடையவர்கள் அவ் விடயத்திலிருந்து தாமாக ஒதுங்கி கொள்ளுதல். இது விடயத்தின்பாற்பட்டது. இரண்டாவது செயற் பாட்டுக் குழுவில் முன்னிலை பெறும் தனியாட்களின் மீது கொண்டுள்ள அதிருப் தியான எண்ணம், மனப்போக்கு, கொள்கை உடையவர்கள் இவ்வகையான நடவடிக்கை களிலிருந்து ஒதுங்கிக் கொள்வது தனிமனித இயல்பின்பாற்பட்டதாகும்.

**எதிர்துச் செயற்படல்**

மேலே குறிப்பிட்டது போன்று ஒரு நிறுவனத்தின் செயற்பாடுகளின் மீது அல்லது செயற்பாடுகளுக்குப் பொறுப் பானவர்கள் மீது அதிருப்தி கொண்டுள்ள குழுவினர் அமைதியாக ஒதுங்குவதுடன் நின்று விடாது அந்நிறுவனத்தில் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தமது எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொள்வர். இது நிறுவனச் செயற்பாட்டில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஒரு நிறுவன நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு அல்லது ஆரோக்கியமாக வளர்த்துச் செல்வதற்கு இக் குழுக்களை சமூகத் தலைவர்களோ நிறுவனத் தலை வர்களோ சரியாக அடையாளம் கண்டு நன்கு பயன்படுத்தத் தெரிய வேண்டும். மதி நுட்பம் மிக்க உள்ளாராய்வுத் தன்மை அல்லது அனுபவ ஆற்றல் மூலம் வெகுதிமயான இத் தகவலை தலைவர் பெற்றுக் கொள்வது என்பது அத் தலைவரின் முகாமைத்துவத்திற்கு கிடைக்கவுள்ள வெற்றிக்கான முதலாவது அடித்தளமாகும். ஏனெனில் விரும்பி நெருங்குகின்ற குழுவானது பொதுவாக குறுகிய சுயலாபச் சிந்தனையிலிருந்து விடுபட்டு பரந்து விரிந்த பொது நிலைப்பட்ட வெளிப்படையான தன்மையினால் உருவானது என்பதை உறுதிப்படுத்திய பின் இக் குழுவை தலைமைத்துவம் தனது நடவடிக்கைகளில் கட்டாயம் உள்ளீர்ப்புச் செய்து கொள் வதிலும் கூட அதீத கவனம் செலுத்த வேண்டும். நிறுவனங்களின் முக்கிய நடவடிக்ககைகளில் இக் குழுவின் உண்மைத் தன்மை உள்ள உறுப்பினர் களை செயற்குழு அங்கத்தவர்களாக ஆக்கி விடுவதன் மூலம் அக்குழுவின் நிறைவான பங்களிப்பை சுலபமாகப் பெற்றுக்கொண்டு எடுத்த செயற்பாட்டில் மிக உயர்வான வெற்றியினை மிக இலகுவாக பெற்றுவிட முடியும். நிறுவனத் தலைவர்கள் கொண் டிருக்க கூடிய ஏகபோக தனியுரிமைகளும், எதேட்சதிராகக் கொள்கைகளும் தன்னை மாத்திரம் முதன்மைப்படுத்தி வெளிப் படுத்தும் நடவடிக்கைகளும் இவ்வாறு கிடைக்கக் கூடிய வெற்றிகளைத் தட்டிப் பறித்துவிடும்.

ஒரு நிறுவனத்தில் ஆக்க பூர்வமான செயற்பாடு நடைபெறும் போது அதனை முன்னின்று நடத்துகின்ற நபர்கள் மீது ஒருவரோ அல்லது ஒரு சிலரோ தனிப்பட்ட ரீதியில் விரும்பத்தகாதவர்கள் என்பதனால் அச் செயற்பாட்டிலிருந்து ஒதுங்கியிருப்பது ஒரு நியாயத் தன்மையற்ற நடத்தையாகும். இது ஏற்கக்கூடிய ஒன்றல்ல என்பதனால் இவ்வாறானவர்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து அப்பணியில் இணைந்து செயற்படுவதென்பது அவர்களின் தார்மீகக் கடமையாகும். இன்னும் குறிப்பாக நிறுவன முகாமைத்துவமும் நிறுவனத்தை தனது வீடு போல் கருதி சுயவிருப்பு வெறுப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுக் காது நிறுவன சட்டதிட்டங்கள் நியதிகளை வெறுமனவே மனனம் செய்து செயற் படுபவராக இராமல் இத்தகைய குழுவி னரையும் இணைத்துக் கொண்டு சிறந்த ஆளுமைப் பண்புள்ளவராக விளங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் மாறாக "யாராக இருந்தாலும் போகிறவர்கள் போகட்டும் செய்கிறவர்கள் செய்யட்டும்" என்ற கருத்துடன் தனது அதிகாரத்தை முதன்மைப்படுத்தும் முகாமை நாளடைவில் பாரிய இடை வெளிகளைக் கொண்ட பல குழுக்குள் உருவாகக் காரணமாகி அந் நிறுவனத்தில் ஒட்ட முடியாத ஓர் நிலையை ஏற்படுத்தி விடும்.

முறையற்ற அல்லது நியாயமற்ற முறையில் செயற்பட்டு நிறுவனங்கள் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டுள்ளமை உண்மையாயினும் இது நீண்ட காலப் போக்கில் நிறுவனத்திற்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளமை வரலா றாக உள்ளது. ஏனெனில் இவ் வகைச் செயற்பாடுகள் பொதுவாக ஒரு குறுகிய நோக்கமுடையவையாக இருப்பதுடன் உடனடி வெற்றியொன்றை ஈட்டித் தருவ தையும் இலக்காகக் கொண்டதாகவும் இருக்கும். நிறுவனம் எதற்காக இயங்கு கின்றது அதன் தொலைநோக்கு என்ன, அதன் பயனாளிகள் யார், பங்காளிகள் யார், என்பவற்றை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அசை போட்டுக் கொண்டு ஒவ்வொரு விடயத்தையம் அதற்குரிய ஒழுங்கு முறையில் நேரான எண்ணத்துடன் நிறுவன அதிகார ஒழுங்கு முறைக்கமைய மேற் கொள்வது அவசியமானதும் கருத்துள்ளது மாகும். பல சமூகங்களிலும் நிறுவனங் களிலும் அதற்குரிய தலைவர்கள் உரிய முறையில் நியமிக்கப்படாமை அல்லது அவ் வாறு நியமிக்கப்படும் உரிய ஆளுமைத் திறன் குறைந்தவர்கள் தமக்குத் தோதான தமது கருத்துக்களைச் செவிமடுக்க கூடிய குழுக்களை உருவாக்கி தமக்கு ஒரு கவசத்தை ஏற்படுத்திக் கொண்டு செயற் படுவது சமீப காலத்தில் ஒரு புதிய யுக்திகளாக உள்ளது.

நிறுவனத்தின் நிர்வாக இயந்தி ரத்தின் கோளாறுகள் காரணமாக இந் நிறுவனத்திலுள்ள நொதுமலான மற்றும் நடுநிலையான நபர்கள் கூட நிறுவன நடவடிக்கையிலிருந்து ஒதுங்கிக் கொள்வது பல இடங்களில் சர்வசாதாரணமாகிவிட்டது. அத்துடன் ஒரு பதவியில் அல்லது பொறுப்புள்ள நபர் தனது பொறுப்புக் களுக்குரிய தகுதிகளும் திறன்களும் இல்லாத விடத்தும் அவர்கள் இந் நிறுவன நடவடிக்கைகளிலிருந்து தாமாக ஒதுங்கி யிருக்கும் நிலையும் ஏற்படலாம். விரும்பி நெருங்கிச் செயற்படும் குழுவால் நிறுவனம் அடையக் கூடிய நன்மைகளைப் போல வெறுத்து ஒதுக்கும் குழுவால் அவ்வளவான நன்மைகளைப் பெற முடியாது. ஆனாலும் இக் குழுவால் நிறுவனம் எதிர் மறையான விளைவுகளை அவ்வளவாக எதிர் கொள்வதில்லை ஆனாலும் இது நிறுவன வளர்ச்சியில் பல தடைகளை ஏற்படுத்தும் என்பதை விட எதிர் கொள்ளக் கூடிய தடைகளைத் தாண்டுவதில் பல சவால் களைத் தோற்றுவிக்கும்

ஒரு சமூகத்தில் அல்லது நிறுவ னத்தில் கூடுதல் விளைவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும் குழுவாக எதிர்த்துச் செயற்படும் குழு காணப்படுகிறது. ஒரு செயற்பாடு நடைபெறும் போது அதில் ஈடுபடும் நபர்களுக்கு அல்லது அந்தச் செயற்பாட்டிற்கு எதிரான குழுவினர் நடவடிக்கையையும் மேற் கொள்வர். இது ஒரு எதிர் மறையான செயற்பாடு ஆகும். அதாவது இது இரு குழுக்களும் முட்டி மோதிக் கொள்வது போன்றது ஆகும். இங்கு ஒரு சிறப்பான செயற்பாடு எதிர்க்கப்படலாம் அல்லது பொருத்தமில்லாத மோசமான செயற்பாடு எதிர்க்கப் படலாம். முதலாவது நிறுவனத்திற்குப் பாதகமாகவும் இரண்டா வது நிறுவனத்திற்கு சாதகமாகவும் அமையும். ஆனாலும் இவ்வாறான சூழலில் இந் நிறுவனமும் சம்பந்தப்பட்டவர்களும் பொது மக்கள் மத்தியில் அதிகம் அறியப்பட்டவர்களாக பிரபல்யம் அடையும் அதே வேளை தமது நடவடிக்கையின் தன்மையை பொறுத்து புகழின் உச்சிக்கோ அல்லது வீதிச் சந்திக்கோ சென்று எவ்வாறாயினும் எதிர் நடவடிக்கையானது தனி மனித நன்மைக்காக இருந்தால் அதைச் சமூகம் வரன்முறைகளுடனேயே ஏற்றுக் கொள்ளும் அல்லது முழுமையாக நிராகரித்துவிடும். ஆனால் இதுவே ஒரு பொதுவான சமூக அல்லது நிறுவன நன்மைக்காக இருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் பாராட்டையும் பெற்று விடுகிறது.

இன்று எல்லா நிறுவனங்களிலும் சமூகங்களிலும் இவ்வாறான மூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களும் இயங்குவதென்பது சாதாரண மாகிவிட்டது. மறுவளமாகக் கூறுவதாயின் இன்று இவ்வாறான மூன்று குழுக்களையும் கொண்டிராத நிறுவனங்களே இல்லை எனலாம். சார்பெண்ணங்களின் அடிப்ப டையில் உருவாகும் இவ் வகையான குழுக்கள் பெரும்பாலும் பய உணர் வினாலேயே உருப்பெருகின்றன. போட்டி களுக்கிடையே தமக்கு ஏற்படும் இழப்பு களை அல்லது நட்டத்தைத் தவிர்த்து தமது நிலைகளைத் தக்க வைப்பதும் இக்குழுச் செயற்கைக்கான முக்கிய காரணங்களாகும்.

எனவே தலைவர்கள் அல்லது முகாமைத்துவத்தினர் இம்மூன்று குழுக்கள் பற்றிய சரியான புரிதல்களையும் கையாளுதல்களையும் கொண்டிருக்க வேண்டும் விரும்பி நெருங்கும் குழுவை சிறப்பாக பயன்படுத்தும் அதே வேளை அவர்களது எல்லா நடவடிக்கைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளவும் கூடாது. சற்று நிதானமாக யோசித்து முடிவெடுக்க வேண்டிய விடயங்களைக் கூட முகாமை யாளரிடம் நற்பெயரை பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவும் அல்லது தமது முதன் மைத் தன்மை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காவும் தாமாக முண்டியடித்துக் கொண்டு வந்து சர்ச்சைகளை உருவாக்கி விடுவர்.

கடந்த கால கசப்பான அனுப வங்கள் காரணமாக அல்லது தமக்குரிய இடம் சரியாக வழங்கப்படாத காரணத்தால் சிலர் நிறுவன நடவடிக்கையில் இருந்து ஒதுங்கிவிடுவர். இவர்கள் குறித்த நடடிக்கையை பிடிக்காத காரணத்தால் தான் ஒதுங்குகிறார்கள் என்ற முடிவுக்கு வரக்கூடாது. ஏன் ஒதுங்குகிறார்கள் என்பது சரியாக பகுத்தாராயப்பட்டு அவர்களும் இணைக்கப்பட வேண்டும்.

எதிராக செயற்படுவோர் எல்லா வற்றையும் எதிர்க்கின்றனரா அல்லது குறித்த ஒன்றை மட்டும் எதிர்க்கின்றனரா அல்லது எவ்வாறான விடயங்களை எதிர்க்கின்றனர் என்பதை உற்று நோக்க வேண்டும் சில வேளைகளில் இவர்கள் எதிர்க்கின்ற விடயங்கள் சரியானதாகவும் இருக்கக்கூடும். எனவே முகாமையாளர் அல்லது தலைவர் இக்குழுக்களின் இயல் புகளை புரிந்து கொண்டு நேர, கால, விடயம் அறிந்து செயற்படுவது நிறுவனத்திற்கு சிறந்த நீண்ட கால பலனைத்தரும்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.டே.மோவின்

# தேவதாய் திருச்சபையின் தாய்

கிறிஸ்தவர்கள் ஆதியிலிருந்தே தூய மரியாளுக்கு மரியாதையும், அன்பும் செலுத்தி வந்துள்ளனர். அவர்கள் அப்படிச் செய்தது கிறிஸ்துவே தன் தாயாகிய அவருக்கு மரியாதை அளித்தமையாகும். இறைவனின் திருமகனாகிய கிறிஸ்துவுக்கு எவருடைய உதவியும் இல்லாமலேயே இவ்வுலகில் அவதரிக்க இயலுமாயிருந்தாலும் அவர் மரியன்னையைத் தெரிவு செய்து அவரது திருவயிற்றிலிருந்து பிறக்க சித்தம் கொண்டார்.

கிறிஸ்து இன்னும் ஒருபடி சென்று மரியன்னைக்கு கீழ்ப்படிபவராக வாழ்ந்தார். தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய அவரது முதல் புதுமையானது (யோவான்:2:3:9) மரியாளின் வேண்டுதலினாலே யேயாகும். சிலுவையில் தம் தியாகப் பலியை நிறைவேற்றியபோதும் கூட மரியன்னையிடம் அவ்வேளையில் அருகில் இருந்து ஒரே சீடரை அவருடைய மகனாக ஒப்படைத்தார். தம் தாயிடம் அம்மா இவரே உம் மகன். பின்னர் தம் சீடரிடம் இவரே உம் தாய் என்றார் (யோவான் 19:26) இவ்வார்த்தையை நாம் ஆழமாக சிந்தித்தோமேயானால் மரியாள் இயேசு கிறிஸ்துவுக்கு மட்டும் தாயல்ல. அவளே முழு உலக கிறிஸ்தவர்களின் தாய் ஆவாள்.

கத்தோலிக்க திருச்சபையின் தொடக்க நிலை என கருதப்படுகின்ற தூய ஆவியானவரின் வருகையின்போது மரியன்னை சீடரோடு செபத்தில் நிலைத்திருந்தார். அத்தோடு அவரிலும் கூட தூய ஆவியானவர் எழுந்தருளினார். இவை அனைத்துமே இறைவனின் விருப்பமாக இருக்கிறது. அப்படியானால் நாம் அவருக்கு விசேட மதிப்பும் அன்பும் செலுத்துவது தவறாகுமா?

ஆனால் ஒரு சில சீர்திருத்த சபைகளைச் சார்ந்தவர்கள் இம் மேன்மைமிகு அன்பைத் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். ஆங்காங்கே பலர் உண்மையைத் திரிவுபடுத்திக் கொண்டும் சில தப்பறையான விளக்கங்களைத்தரவும் செய்கின்றனர். அவர்கள் நாம் மரியன்னைக்குச் செலுத்தும் வணக்கமானது இறைவனை வழிபடுவது போன்றதாகும் என்கின்றனர். ஆனால் உண்மை அதிலிருந்து வெகுதூரம் உள்ளது. இறைவனின் மற்றெல்லாப் படைப்புக்களையும் விட மரியன்னையை நாம் மதிக்கின்றோம். எனினும் அவரைத் தொழவோ ஆராதிக்கவோ நாம் செய்யவில்லை நமது ஆராதனை ஆண்டவராகிய கடவுள் ஒருவருக்கே உரித்தானது.

மரியாளிடம் பிறந்த ஆண்டவர் இயேசு மனுவுருக்கொண்ட இறைவனாவார் இதனால் ஒரே ஆளாயிருக்கும் அவருக்கு இறை இயல்பும் உரித்தாகின்றது. இவ்வாறு இறை இயல்புகொண்ட ஆண்டவர் இயேசுவின் தாயாரானதால் அவர் இறைவனின் தாயாகின்றார் என்பதில் பிழையில்லையே கிறிஸ்துவின் இறைத்தன்மை எந்நாளும் உள்ளது எனினும், மனித இயல்பு அவருக்கு உன்னதமானது மரியாளின் வழியாகவேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் வத்திக்கான் சங்கம் கன்னிமரியாளைப்பற்றி மிகச் சிறப்பாக 'திருச்சபை' என்ற ஏட்டில் போதித்துள்ளது. இப்போதனையின் ஒருபகுதி சங்க ஏட்டிலிருந்து கீழே தரப்படுகின்றது. திருச்சபையில் தூய கன்னிக்கு வணக்கம் செலுத்தப்படுகிறது. திருச்சபை மரியாளைத் தனிப்பட்ட ஒரு வணக்கத்தால் தக்க காரணத்துடன் பெருமைப் படுத்துகின்றது. ஏனெனில் தன் மகனுக்கு பிறகு எல்லா வான தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் மேலாக இறைவனின் அருளால் உயர்த்தப் பட்டவளும், கிறிஸ்துவின் மறை நிகழ்ச் சியில் பங்கெடுத்தவளுமாகிய இவள் இறைவனின் புனிதமிகு தாய் ஆவாள்.

தூய கன்னியை ஆதி முதலே விசுவாசிகள் இறைவனின் தாய் என்ற ழைத்து வணங்கினர். தங்கள் துன்பங்கள், வேதனைகள் அனைத்திலும் அவளை மன்றாடி பாதுகாவலிலே புகழடைந்திருக் கின்றனர். குறிப்பாக இயேசு திருச்சங் கத்திற்குப் பிறகு வியத்தகுமுறையில் இறை வனின் மக்கள் மரியாளை அதிகமதிகம் வணங்கவும், அன்பு செய்யவும் உதவிக் கழைக்கவும் கண்டு பாவிக்கவும் முற் பட்டனர். "இந்நாள் முதல் எல்லாத்தலை முறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே, ஏனெனில் வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் புரிந்துள்ளார். (லூக்:1:48) என்று அவளே முன் மொழிந்ததற்கு ஏற்ப இது நிறை வேறியது.

திருச்சபையில் என்றும் இருந்துள்ள இவ்வணக்கம் உண்மையிலேயே தனிப் பட்டது. மனுவுடலேற்ற வார்த்தை யானவர்க்கும் தந்தைக்கும் தூய ஆவியா னவர்க்கும் நலம் அளிக்கும் ஆராதனையில் இருந்து உள் இயல்பிலேயே வேறுபட்டது. இந்த ஆராதனையை மிகச் சிறந்த விதமாய் ஊக்குவிப்பதாகும்.

திருச்சபை கால இடச் சூழ்நிலை களையும், விசுவாசிகளின் குண இயல்புகள், மனநிலைகள் ஆகியவற்றையும் மனதில் கொண்டு வலுவற்ற மரபுக் கோட் பாட்டிலிருந்து மாறுபடாத இறையன்னைக் குரிய பல்வகையான பக்தி முயற்சிகளுக்கு பயனாக நாம் தாயைப் பெருமைப்படுத்தும் போது மகனை அறிந்து அன்பு செய்து மாட்சிப்படுத்துகின்றோம். அவர்கட்டளை களின் படி நடக்கின்றோம். ஏனெனில் அவருக்காகவே அனைத்தும் உள்ளன. (கொலோ 1:15-16)

முழு நிறைவும் அவரில் குடி கொள்ள வேண்டுமென்பது இறைவன் திருவுளம் கொண்டார் (கொலோ 1:19) திருச்சங்கம் இந்த கத்தோலிக்க கோட் பாட்டை நன்கு உணர்ந்தே கற்பிக்கின்றது. அதேவேளை திருச்சபையின் பிள்ளைகள் அனைவரும் இத்தூய கன்னியின் வணக் கத்தை சிறப்பாய் பொது வழிபாட்டு வணக்கத்தைப் பெருமிதத்துடன் போற்றிப் பேணி வளர்க்க வேண்டும்.

பல நூற்றாண்டுகளாய்த் திருச் சபையின் ஆசிரியம் போற்றிவரும் மரியன்னை பக்தி முயற்சிகளையும் பழக்கவழக்கங்களையும் மிகவாய்மதிக்க வேண்டும். முன்காலங்களில் கிறிஸ்து தூய கன்னி, புனிதர்கள் ஆகியவர்களின் உருவ வணக்கம் பற்றி தீர்மானிக்கப்பட்டவைகளை மறை உணர்வுடன் கடைப்பிடிக்க வேண்டும் என மக்களுக்கு திருச்சங்கம் அறிவுரை கூறுகிறது.

இறையியலாளரும் இறைவாக்கைப் போதிப்பவரும் இறைவனுடைய தாயின் சிறப்பான மாண்பைப்பற்றி பேசும்பொழுது தவறான மிகைக் கூற்றுக்களையும் மிகக் குறுகிய நோக்கையும் கவனத்துடன் தவிர்க்க எச்சரிக்கப்படுகின்றீர்கள். ஆசிரி யத்தின் மேற்பார்வையில் அவர்கள் திருமறை நூல்கள், திருத்தந்தையர் மறைவல்லுனர், திருச்சபையின் வழிபாட்டு முறைகள் பற்றிய ஆராய்ச்சியை வளர்த்துக் தூய கன்னிமரியின் அலுவல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகளையும் சரிவர விளங்க வேண்டும்.

தூய கன்னியின் இவ்வலுவல்களும் உரிமைகளும் உண்மை, புனிதத்தன்மை இறைபற்று என்பன அனைத்தின் ஊற்றான கிறிஸ்துவையே எப்போதும் நாடி நிற்பன வாகும்.

மேலும் பிரிந்துபோன சகோதரர் களாவது வேறு எவறாவது திருச்சபையின் உண்மைக்கோட்பாட்டைப் பற்றித் தவறாக எண்ண இடந்தரக்கூடிய எச்சொல்லையும், செயலையும் கவனமாய் தவிர்ப்பவர்களாய் விசுவாசிகள் மனதிலிருக்க வேண்டிய தாவது, மெய்யான இறைபற்று பொருளற் றதும் தோன்றி மறைவதுமான உணர்ச்சி களிலோ ஒரு வகையான குருட்டு நம்பிக் கையிலோ அடங்குவதில்லை. மாறாக உண் மையான விசுவாசத்திலிருந்தே பிறக்கிறது.

இவ்விசுவாசம் இறையன்னையின் மேன்மையை ஏற்றுக்கொள்ளச் செய்கிறது. பிள்ளைகள் என்ற நிலையில் நாம் நம் தாயிடம் அன்பு கொள்ளச்செய்யவும் அவருடைய நற்பண்புகளைக் கண்டு பாவிக்கவும் வேண்டுமென்னும் ஆர்வத் தையும் அது தூண்டுகின்றது. ஏற்கனவே விண்ணுலகில் ஆன்மாவோடும் உடலோடும் மாட்சிமைப்படத்தப்பட்டிருக்கும் இயேசுவின் தாய் வருங்காலத்தில் நிறைவுபெறபோகும் திருச்சபையின் உருவும் தொடக்கமுமாய் இருக்கின்றாள். இது போலவே இவ்வுலகில் ஆண்டவரது நாள் வரும் வரை பயணம் செய்யும் இறைமக்கள் முன்பு திடமான நம்பிக்கைக்கும் ஆறுதலுக்கும் அடையா ளமாக ஒளிர்கின்றாள்.

பிரிந்துபோன சகோதர்களி டையிலும் கூட ஆண்டவரும் மீட்பருமான வரின் தாயைத் தகுந்த விதத்தில் பெருமைப்படுத்துவர் உள்ளர். குறிப்பாக கீழைக் கிறிஸ்தவர்கள் எப்போதும் ஆர்வமிக்க உணர்வோடும் இறைபற்றுள்ள உள்ளத்தோடும் கன்னி மரியாளுக்கு வணக்கம் செலுத்து கிறார்கள். இவ்வுண்மை திருச்சங்கங்கத்திகு உவகையும் ஆறுதலும் அளிக்கிறது. இறைவனுக்கும் மக்களுக்கும் தாயான கன்னிமரி தன் செபங்களால் தொடக்க கால திருச்சபைக்கு உதவினாள். அதுபோல் எல்லாப் புனிதருக்கும் வானவருக்கும் மேலாக விண்ணுலகில் உயர்த்தப் பட்டிருக்கும் இவள் இப்போதுகூட புனிதர் அனைவருடனும் ஒன்றித்து தன்திரு மகனிடத்தில் பரிந்துபேச வேண்டும். கிறிஸ்தவர் என்னும் பெயரால் அணி செய்யப்பெற்றவராயினும் சரி யாவரும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் ஒரே இறைமக்கள் குலமாக, மிகத்தூய பாடுபடா மூவொரு கடவுளின் மாட்சிமைக்காக மகிழ்வுடன் கூடும் காலம் வரை அவள் தொடர்ந்து பரிந்துபேச வேண்டும். இதற்காக கிறிஸ்தவ விசுவாசிகள் அனைவரும் தொடர்ந்து தம் விண்ணப்பங்களை அன்னையை நோக்கி எழுப்ப வேண்டும்.

ஆகவே இறைவனின் ஒரே மகனான இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு தந்தவளும் கன்னிமரியே திருச்சபை பிறந்தநாளான பெந்தக்கோஸ்து தினத்தன்று 120 பேர்மத்தியில் உயர்ந்தவளாக கருதப்பட்டதோடு இவளே திருச்சபையின் அன்றும் இன்றும் என்றென்றும் தேவதாய் ஆவாள்.

**உசாத்துணை நூல்கள்**

வத்திக்கான் சங்க ஏடு
பெரிய குறிப்பிடம்
டிவைன் ஒலி
விசுவாச பூக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தியாழினி கிங்சிலி



# ஆண்டவருடைய ஆலயம்

"நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப் பதையே நாடுவேன்"

சங்கீதம் 27:4


கற்களையும் தூண்களையும் அடை யாளமாக நிறுத்தி பலிசெலுத்தி தேவனைத் தொழுது கொண்ட இஸ்ரவேலர், பின்னர் ஆசரிப்புக்கூடாரத்தை அமைத்து தேவனை ஆராதித்து வந்தனர். இந்த இஸ்ரவேல ருக்குள் கர்த்தருக்கென்று ஒரு ஆலயத் தைக் கட்டவேண்டுமென்று முதலில் தன் உள்ளத்தில் வாஞ்சித்தவர் தாவீது இவரது வாஞ்சையை தேவன் அவரது மகனான சாலமோனுக்கூடாக நிறைவேற்றினார். ஆசரிப்புக்கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்திலே இரண்டு கேருபீன் களின் மத்தியிலிருந்து கர்த்தர் பேசியதை அனுபவித்த தாவீது ஆண்டவருக்கென்று ஒரு வாசஸ்தலத்தை கட்ட விரும்பினார். ஆண்டவர் வாசம் பண்ணும் இடத்திலே தானும் இருந்து இறைமகிமையை ஆராய்ச்சி செய்வதே தாவீதுக்கு மிகவும் பிரியமா யிருந்தது.

ஆலயம் வெறும் கட்டடம் அல்ல, அது தேவ பிரசன்னத்தையும் அவரது பரிசுத்தத்தையும் மகிமையையும், அவ ருக்கும் நமக்குமுள்ள உறவையும் நமக்கு உணர்த்துகின்ற இடம் கட்டடங்களில் நாம் கூடினாலும், தேவ பிரசன்னமும் மகிமையும் நம்மைச் சூழ்ந்திருக்கும்படிக்கு நாமே அந்த ஆலயங்களாக வாழ அழைக்கப்பட்டிருக் கின்றோம். நாம் அவரது பிரசன்னத்துக்குள் எப்பொழுதும் வாழ வேண்டுமானால் பரிசுத்த வாழ்வை நாடி நிற்பது அவசியம்.

ஆகவே நமது ஜீவன் கிறிஸ்து வுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோசெயர் 3:3) அது என்றும் அழியாது. ஆகவே இம்மையிலும் மறுமையிலும் தேவனுடைய பிரசன்னத்தில் வாழ்வதையே விரும்பி நிற்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Sitting L-R:** Mr.S.Rathakrishnan, Mrs.I.Ramachandra, Mr.S.Gunaseelan, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mr.K.Hariharasakthy, Mr.N.Manoranjithan, R.W.U.L.R.Clemend

**StandingL-R:** Mr.M.Benedict, Mrs.S.Lavanya, Mrs.R.Roseleema, Mrs.J.Esther Julin, Mr.D.Movin, Mrs.Mary Glorina, Mrs.G.Nilmine, Mr.A.Alexander, Mr.S.Sabastion




**Sitting L-R:** Mr.S.J.Rafayal, Mr.I.Mariyathas, Mr.S.Karunamoorthy, Mr.M.Ignatius, Rev.Fr.A.Jude Nixon, Mr.F.Francies

**Standing L-R:** Mrs.M.Jasinthan, Mrs.S.Rajan, Mrs.S.Jesintha, Mrs.M.leenasleela, Mrs.P.Grace, Mrs.M.Vanisri, Miss.J.Sonali, Miss.P.Ana Rushanthini, Mrs.L.Neerijah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் ஒன்றியம்

| | | |
|---|---|---|
| அதிபர்: | திரு.ம.இக்னேசியஸ் (பெருங்காப்பாளர்) | |
| உபஅதிபர் | திரு.சி.கருணாமூர்த்தி | |
| ஆலோசகர்கள் | திருமதி.இ.இராமச்சந்திரா | திருமதி.இ.இராதாகிருஸ்ணன் |
| | திரு.வ.சி.குணசீலன் | திரு.நா.மனோரஞ்சிதன் |
| | திரு.க.ஹரிஹரசக்தி (காப்பாளர்) | |
| தலைவர்: | திரு.R.W.U.L.R.கிளமன்ட் | |
| செயலாளர்: | திரு.எஸ்தர் ஜூலின் ஈஸ்வரன் | |
| பொருளாளர்: | திருமதி.பெ.மேரி குளோரினா | |
| உபதலைவர்: | அ.அலெக்சாண்டர் | |
| உபசெயலாளர்: | டே.மோவின் | |
| செயற்குழு உறுப்பினர்கள் | திரு.ம.பெனடிக்ட் | திரு.ச.செபஸ்டியன் |
| | திருமதி.க.நில்மின் | திருமதி.ஸ்.லாவண்யா |
| | திரு.இரா.ரோஸ்லீமா | |

கிறிஸ்தவ ஒன்றியம்

வண.பிதா.யூட் நிக்ஷன்

| | | |
|---|---|---|
| அதிபர்: | திரு.ம.இக்னேசியஸ் (பெருங்காப்பாளர்) | |
| உபஅதிபர் | திரு.சி.கருணாமூர்த்தி | |
| | திரு.ஐ.மரியதாஸ் (விரிவுரையாளர்) | |
| ஆலோசகர்கள் | திருமதி.இ.இராமச்சந்திரா | திருமதி.இ.இராதாகிருஸ்ணன் |
| | திரு.வ.சி.குணசீலன் | திரு.நா.மனோரஞ்சிதன் |
| | திரு.எப்.பிரான்சிஸ் (காப்பாளர்) | |
| தலைவர்: | திரு.ஜெ.ரபாயல் | |
| செயலாளர்: | திருமதி.மே.யசிந்தன் | |
| பொருளாளர்: | திருமதி.எல்.நீரிஜா | |
| உபதலைவர்: | செல்வி.ஜெ.சொனாலி | |
| உபசெயலாளர்: | செல்வி.பி.கிரேஸ் | |
| செயற்குழு உறுப்பினர்கள் | திருமதி.ஆர்.சங்கீதா | திருமதி.எஸ்.ஜெசிந்தா |
| | திருமதி.எம்.லீனஸ்லீலா | திருமதி.எம்.வாணிஸ்ரீ |
| | செல்வி.பி.எனா ருஷாந்தினி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Group A



## Group B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.
ஜே.எஸ்தர ஜூலின் ஈஸ்வரன்

# மகளுக்கு ஒரு மடல்

அன்புள்ள மகளே!
அம்மா எழுதுகிறேன்,
அங்கு நீ நலமா?
அனு தினமும் ஆண்டவரிடம் வேண்டுகிறேன்

தாலாட்டுப்பாட தாய் உன் அருகிலில்லை
தளராதே மகளே -உன்னை விட்டு
தள்ளியிருந்தாலும் கனவில் நான் பாடுகிறேன்
உனக்கொரு தாலாட்டு

தத்தி தத்தி நீ நடப்பதையும்
தங்க மழலை நீ பேசுவதையும்
தங்கியிருந்து ரசிக்க முடியாது
தவிக்கின்றேனம்மா கண்மணியே

உன் நினைவு வரும் பொழுது
ஓடி வருகிறேன் தொலைபேசியருகில்
ஒரு வார்த்தை நீ பேசியதும்
ஒரு கோடி சந்தோசம் என் மனதில்

விடுமுறையில் வீடு வரும் போது
விட்டகல மாட்டாயே என்னை
விளையாடி மகிழும் உன்னை விட்டு வரும் போது
விழியிரண்டும் வடிக்குதே இரத்தக் கண்ணீர்
இது தற்காலிக பிரிவு
தங்கமே- தன்னம்பிக்கையோடு காத்திரு
தாலாட்ட நான் வருவேன்



அம்மம்மாவோடு அண்ணா இருவரும்
அன்னமே உனைக் கொஞ்ச
அப்பா அன்போடு உனை அரவணைக்க
சித்தியுடன் சித்திரமே நீ சேர்ந்துக் கொள்

மாதங்கள் ஓடி விட்டன- இதோ
மார்கழியில் நான் வருவேன்-மானே
மார்போடு உனை அணைக்க -மகளே
மடியோடு உனை தாலாட்ட.......

தாய்மையுடன்.......
அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. மேரி குளோரினா போல்

# நேர நிர்வாகமும் ஆளுமை வளர்ச்சியும்

* சிந்திப்பதற்கான நேரத்தை ஏற்ப டுத்திக் கொள்வோம். ஏனெனில் அதுவே சிற கடித்துப் பறப்பதற்கான சக்தி.

* விளையாடுவதற்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்வோம். ஏனெனில் அதுவே நோயற்ற வாழ்வின் உன்னத மருந்து.

* படிப்பதற்கான நேரத்தை கண்டு பிடிப்போம். ஏனெனில் அதுவே இன்பத்தின் பாதை.

* அன்பு காட்ட நேரத்தை அனுமதிப் போம். ஏனெனில் அதுதான் மனிதரின் கடமையும் பொறுப்பும்.

* சேவை செய்வதற்கான நேரத்தை சிந்தித்துப் பார்ப்போம் ஏனெனில் அதுதான் மனித நேயத்தின் மையம்.

* நேரத்தை நிர்வகிப்பது என்பது மிகப் பெரிய கலை நேரநிர்வாகம் ஒவ்வொ ருவரின் பொறுப்புணர்வின் வெளிப்பாடு. ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பது மன சாட்சியின் குரலுக்கு பணிந்து நடப்பது வாழ்க்கையின் தரத்தையும் தன்மையையும் சுட்டிக்காட்டுவது.

* நேரத்தை திறமையாகக் கையாள் வது அதை சரியான படி பயன்படுத்துவது ஆகும்.

* எந்தெந்த வேலைகள் முக்கிய மானவையோ அவற்றை செய்வது எது முக்கியமற்றதோ அதைத் தவிர்ப்பது நல்லது.

* நமது வேலைகளை செய்ய அதிக நேரத்தை உருவாக்கிக் கொள்வது முக்கியம்.

* நமது கவனச் சிதறல்களைக் கட்டுப்படுத்துவது நமது வேலையில் கவனம் சிதறாமல் தொடர்ந்து வேலையைச் செய்வது ஆகும்.

* நமது செயல்படும் திறனை அதிகரித்துக்கொள்வதன் மூலம் வேலை களை விரைவாகவும் சிறப்பாகவும் செய்வது.

* நேரத்தை இவ்வாறு பயன் படுத்துவதன் மூலம் நமக்கு பல்வேறு பயன்கள் கிடைக்கின்றன. நேரமில்லை என்கிற பிரச்சனையே இனிமேல் வாழ்க் கையில் இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரமும் தனிமனித வளர்ச்சியும்

நேரப் பண்பாட்டிற்கும் தனி மனிதனது ஆளுமைக்கும் தொடர்பு இருக்கிறது. எந்த அளவிற்கு நாம் நேரத்தை சிக்கனமாக ஆக்கபூர்வமாக பயன்படுத்து கின்றோமோ அந்த அளவுக்கு நாம் தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும் வளர முடியும் உயரவும் முடியும் இன்று எந்தெந்த வகையில் நேரத்தை வீணாக்காமல் பயன்படுத்துகின்றோமோ அதை பொறுத்தே நம் எதிர்காலம் அமையும். எனவே நேர்மையான முறையில் பயன்படுத்தும். நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ள 24 மணி நேரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்று சிந்திப்போம். அதைப்பொறுத்தே நாம் ஆளுமை வளர்ச்சி காண முடியும் ஆளுமையில் வளர்ச்சிக் காணும்போது வீணாக்கும் நேரங்களை குறைத்து ஆளுமையில் உயர்ந்து நிற்போம் என்பதில் ஐயமில்லை.

எந்த ஒரு செயலையும் அது நன்மையாக இருந்தாலும், தீமையானதாக இருந்தாலும் திரும்பத் திரும்பச் செய்யும் போது அது பழக்கமாகிறது. நமது வாழ்வின் பகுதியாகின்றது.

**"நேரத்தை ஒத்திப் போடுவது ஒரு தீய பழக்கம்**
**அவ் தீய பழக்கத்தை மற்றொரு நல்ல பழக்கத்தினால் வெல்வோம்**
**அன்றைய வேலையை அன்றே செய்து முடி.."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. லாவண்யா ஸ்ரீபன்

# ஒரேகண்ணோட்டத்தில் நான்கு நற்செய்திகள்

| நற்செய்தி நூல் | மத்தேயு நற்செய்தி | மாற்கு நற்செய்தி | லூக்கா நற்செய்தி | யோவான் நற்செய்தி |
|---|---|---|---|---|
| நூல் ஆசிரியர் | மத்தேயு | மாற்கு | லூக்கா | யோவான் |
| சின்னம் | மனிதன் | சிங்கம் | எருது | கழுகு |
| காலம் | கி.பி 70 | கி.பி 64-70 | கி.பி 70-90 | கி.பி.90-100 |
| இடம் | சீரியாவிலுள்ள அந்தியோக்கியா | உரோமை | அந்தியோக்கியா உரோமை | எபேசு |
| சூழல் | எருசேலம் அழிவிற்கு உட்பட்ட சூழலில் | உரோமையர்களால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட சூழலில் | எருசேலம் நகரம் தீத்துவால் அழிக்கப்பட்ட பின்னருள்ள சூழலில் | எருசேலம் ஆலயம்அழிவிற்கு பின் அநேகமாக யூதக் கிறிஸ்தவர்கள் ஜம்னியால் பள்ளியினால் யூதர்களின் செபக் கூடங்களிலிருந்து தள்ளிவைக் கப்பட்டபின்னுள்ள சூழலில் |
| நோக்கம் | கிறிஸ்தவர்கள் துன்புற்று மனத்தளர்ச்சியடைந்த காலத்தில் அவர்கள் நீண்ட காலம் எதிர்பார்த்த மெசியர் இயேசுதான் என்று உணர்த்துவதற்கு | இயேசுவை அவரது செயல்கள் புதுமைகள் ஊடாக வெளிப்படுத்துவதற்கு | அவருடைய காலத் திருச் சபையின் போதனைகளையும் பணியையும் பற்றி அறிவிக்கவும், இயேசுவே அனைவருக்கும்மீட்பர் என்றுணர்த்துவதற்கு | இயேசுவை இறைமகன் என்பதை உறுதிப்படுத்தி அவரில் நம்பிக்கை ஏற்படுத்துவதன் ஊடாக நிலை வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு |
| நற்செய்தியாளர் இயேசுவைக் காட்டும் விதம் | வாக்களிக்கப்பட்ட மெசியா | துன்புறும் ஊழியர் மறைக்கப்பட்ட மெசியா | மானிட மகன் | இறைமகன் (இறைவார்த்தை) |
| இயேசுவில் வலியுறுத்தப்பட்டவை | இயேசுவின் போதனைகள் | இயேசுவின் செயல்கள் | இயேசுவின் மனிதத்துவம் | இயேசுவின் போதனைகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| மையப்பொருள் | இயேசு பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளை நிறை வேற்றுகின்றார்.<br><br>இயேசு தாழ்ந்தவர்களோடு தம்மை அடையாளப்படுத் துகின்றார்<br><br>இயேசு இஸ்ராயவருக்கு மட்டுமல்ல அனைவருக்கும் மீட்பர் | இயேசு யார் என அவரின் செயல்கள் மூலம் இனங் காட்டல்<br><br>சிலுவையின் முக்கியத்து வமும் விசேடத்துவமும் | மீட்பு ஒரு மகிழ்வின் ஒரு ஆச்சரியம்<br><br>மீட்பு அனைவருக்கும் வழங்கப்படுகிறது<br><br>இயேசு தாழ்ந்தவர்களு டன் தம்மை அடையாள ப்படுத்தி அனைவரின் மாண்பையும் மதிக்கின் றார்.<br><br>அன்னை மரியா முதற் சீடர் | நம்பிக்கையைக் கட்டியெ ழுப்புவது அடையாளங்க ளின் வகிபாகம் ஆகும்.<br><br>ஒளியினதும் இருளினதும் சக்திகளுக்டையிலான போராட்டம்<br><br>நிலை வாழ்விற்கு இயேசு வின் நம்பிக்கை வைப்பது அவசியம்<br><br>இயேசு இறைவனின் தெய் வீக மகன் |
| குணாதிசயம் | ஆசிரியர் மறையாரியார் | கதை சொல்பவர் | வரலாற்று ஆசிரியர் | இறையியலாளர் |
| நற்செய்தி எவருக்காக எழுதப்பட்டது | யூதகிறிஸ்தவர்களுக்கு | புறவினத்தாருக்கு | கிரேக்கருக்கு | அனைத்துக் கிறிஸ்தவர் களுக்கும் |
| எம் மொழியில் எழுதப் பட்டது | அரமேய மொழி | அரமேய மொழி | கிரேக்க மொழி | கிரேக்க மொழி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.கன்னையா ஜோய்பிரபா

# இறைவார்த்தை மறவாதீர்

வானாதி வானமெல்லாம்
வார்த்தையால் படைத்தவரே!
தேவனாய் வானகத்தில்
வார்த்தையாய் இருந்தவரே!
தேவனாய் வானகத்தில்
தேவனோடிருந்தவரே.


வேதாகம விளக்கமின்று
விரைந்து நான் பாடுதற்கு
பாதமதில் விழுகின்றேன்
பணிந்து நான் கெஞ்சுகின்றேன்.

புத்தகம் இல்லை இது!
புராணமும் இல்லை இது!
தலையில் உள்ள மூளையிலே
பிறக்கின்ற
தத்துவமில்லை இது.

வழிகாட்டும் தீபமிது
ஒளி வீசும் விளக்கு இது
பலி, பாவம் புரிவோரை
பக்குவமாய் மாற்றுகின்ற
பரிசுத்த வேதமிது.

தேனை விட இனிமையான
தெவிட்டாத அமுதமிது
பொன்னை விட மேலான
பொக்கிஷப் புதையல் இது
கலங்மில்லாப் பாலாக
கறை போக்கும் நீதி இது.

பேதையை ஞானியாக்கும்
பித்தனை விவேகியாக்கும்
பொற்சுவைச் சுரங்கமிது.
இத்தனையும் இலவசமாய்
இனி துரைக்கும் வேதத்தை
என்றைக்கும் மறவாதே
இரவு பகல் இறைவசனம்
தியானிக்க மறவாதே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு ஆ.சிங்கராயர்

# கலையினில் மலையக அரங்கில் காமன் கூத்து

18 ஆம் நூண்றாண்டு காலப் பகுதியில், அடிமைகளாக பிரித்தானியர்களுக்கு அடிமைப்பட்டு இந்தியாவின் தமிழகத்தின் தென்பிராந்தியங்களில் இருந்து இலங்கை வந்த பெருந்தோட்டப் பகுதி தமிழ் மக்களின் மூலமே காமன் கூத்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. இலங்கைக்கு வந்த மக்கள் கூடாரங்களிலும், லயங்களிலும் சுகாதாரமின்றி வாழ்ந்த காலத்தில் பல நோய்களுக்குட்பட்டபோது இது தெய்வக் குற்றமே என்று நம்பி அவற்றை நிவர்த்திசெய்ய பூர்வீகக் கலைகளை பக்தியோடு பாடி வளர்த்த நாம் இங்கு வந்து அவற்றை பாராமுகமாக இருந்ததே காரணமென எண்ணி மீண்டும் தமிழகம் சென்று அங்கு தாம் நடத்திய கூத்து இடங்களில் மண்ணைக் கொண்டு வந்து இங்கு கூத்துக்களை ஆரம்பித்ததால் பல நோய்கள் தீா்ந்ததாகவும் அதனால் எம் மக்கள் மகிழ்ந்ததாகவும் கதைகள் உள்ளன. அது மாத்திரமின்றி தம் தொழில் முடிந்து ஓய்வு நேரத்திலும் சில முக்கிய விழாக்களிலும் அக் கூத்துக்களை பாடி ஆடி மகிழ்ந்ததாகக் கூறுவர்.



அந்த வகையில் இலங்கையில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு வட பகுதிகளிலும் காமன்கூத்து, பொன்னர் சங்கர், அர்ஜீனன்தபசு, கங்கையம்மன் கூத்து, இராவனேஸ்வரா கூத்து என்பன காணப்படுகின்றன. காமன் கூத்து பொன்னர் சங்கர், அர்ஜுனன் தபசு) இவை மூன்றும் ஒவ்வொரு தத்துவத்தை எடுத்து கூறுவதை காணலாம்.

காமன் கூத்து - அன்பின் தத்துவத்தையும்
அர்ச்ஜுனன் தபசு - அறத்தின் தத்துவத்தையும்
பொன்னர்சங்கர் - வீரத்தின் தத்துவத்தையும்

கூறுவதாகவும் அமைகின்றது இம் மூன்றுக் கூத்துக்களிலும் காமன் கூத்து தொடர்பாக நான் அவதானித்த விடயங்களை பகிர்ந்து கொள்கின்றேன். மலையகத்தில் தற்போது காமன் கூத்து ஆடப்படும் தோட்டங்கள் பல உள்ளன. அவற்றுள் சிறப்பாக ஆடப்படும் தோட்டங்கள் பொகவந்தலாவ குயினாதோட்டம் மஸ்கெலியா லங்கா தோட்டம், பொகவந்தலாவ மோரார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம், ஹற்றன் வெளிஓயா, திரேசியா என்பவற்றை குறிப்பிடலாம். நோவுட் ஸ்டொக்கம் தோட்டம் ஆகிவற்றை குறிப் பிடலாம். ஒவ்வொரு இடங்களிலும் ஒவ் வொரு வகையான இக் காமன்கூத்து நடைபெற்று வருகின்றது. மாசி மாதத்தில் வருகின்ற அமாவாசைக்கு மூன்றாவது நாள் வளர்பிறையில் ஆரம்பிக்கப்படுகின்றது அன்று தொடக்கம் பதினாறு நாட்கள் ஆடப்படுகின்றன. 16 ஆம் நாள் காமன் திருவிழா அல்லது காமன் கொழுத்துதல் நிகழும் இப்பதினாறாம் நாள் விடிய விடிய ஆடப்பட்டு விடியும் போது நிறைவு பெறும். முதல் நாள் ஊன்றிய கம்பத்தை எரிப்பார்கள். அக்கம்பமானது செங்கரும்பு, தேக்கரும்பு ஆமணக்கு மஞ்சள் நிறத்திலான மூங்கில் அரலி ஆகிய வைக்கோலினால் சுற்றி கட்டப்பட்டு இருக்கும். ஆமணக்கு மரமானது ஐந்து அல்லது ஆறு கிளைகளை கொண்டு இருக்கும் இக்கம்பத்தில் காதோலை, கருகமணி, வெராட்டி, நவதானியம் என்பன கட்டப்பட்டு இருக்கும். இவ் ஆரம்ப வேலைகள் முடிவு பெற்ற பின்னர் இக்கம்பத்தை ஆற்றங்கரைக்கு கொண்டு சென்று பூஜை செய்த பின் காப்பு கட்டுதல் நடைபெறும். பின்னர் கம்பத்தை கூத்து நடை பெறும் இடத்துக்கு கொண்டு வருவார்கள். அங்கு இருக்கும் காமன் மேடையில் இதனை ஊன்றுவார்கள். ஊன்றும்போது மக்கள் பால் ஊற்றி நாணயங்களை போடுவார்கள். கம்பத்தை ஊன்றிய பின்னர் விநாயகர் வாழ்த்துடன் பூஜைகள் ஆரம்பமாகி காமன் கூத்தின் ஆரம்ப நாள் நிகழ்வு நிறைவு பெறும்.

காமன் கூத்தினை தோட்டங்களில் ஆடுவார்கள். காமன் கூத்தில் இறுதி மன்மதன் ஆட்டமாகும். இங்கு ஏழு வகையான ஆட்டங்கள் இருக்கின்றன. அவற்றை நோக்குவோமாயின்,

1) பாடலுக்கேற்ப வட்டமாக ஆடுதல்
2)ஒருமையத்திலிருந்து வலது இடது புறமாக ஆடுதல்
3) மேலும் கீழுமாக ஆடுதல்
4)ஒருமையத்திலிருந்து காலை வலது பக்கம் மூன்றுமுறையும் இடது பக்கம் மூன்று முறையும் ஆடுதல்
5)வட்டமாக சுற்றி சுற்றி ஆடுதல் இவ் ஆட்டத்தின் போது கையில் வில்லுக்கு பதிலாக கையில் துணியை வைத்துக் கொண்டு ஆடுவார்கள். இக்காமன் கூத்தானது திறந்தவெளிஒன்றில் நடை பெறுகின்றது. இதில் பின்வரும் பாடலை சரஸ்வதி தேவிக்கு ஒப்படைத்த பின்னர் விநாயகப் பெருமானை வணங்கி ஆடப்படும்.

"முந்தி முந்தி நாயகனாம்
முக்கண்ணன் தன் மகளாம்
கந்தனுக்கு முன் பிறந்த கணப
தியை கைதெழுவோம்.
வேலனுக்கு முன் பிறந்த
விநாயகனைக் கைதொழுவோம்
காமன், ரதி கதை பிறக்க
கஜமுகனைக்கைதொழுவோம்
ஊரான ஊர்தேடி உறவர் யார்தேடி
காமன் கதை தேடி ஆடி முடிப்பதற்கு
அடிப்பணிந்து தென்டனிட்டேன் மாணிக்க
பிள்ளையாரை"

இவ்வாறு பாடப்படும் பாடலுடன் ஆரம்பித்து 16 ஆம் நாள் இரவு இக்கூத்தின் இறுதி நிகழ்வுகள் நடைபெறும். இதில் ரதியை பெண் அழைப்பு செய்தல். ஆண் ஒருவரை பெண்ணாக அலங்கரிப்பு செய்து அழைத்து வருதல் பின் மன்மதனுக்கும் ரதிக்கும் திருமணம் நடைபெறும் திருமணம் நடைபெற்ற பின்னர் ரதியும் மன்மதனும் இணைந்து ஆடுவார்கள். அவ் வேளையில் தேவர்கள் வில்லினை கொடுத்து வாழ்த்திச் செல்வார்கள். அதன் பின்னர் இந்திர லோகத்தில் தேவர்கள் கூடுவது போன்று வெட்ட வெளியில் கூடி சிவனின் தவத்தை அழிக்க யாரை அனுப்புவோம்? என்று ஆலோசனை நடத்தும்போது நாரதர் வேடமிட்டு அங்கு வந்து, மதனை அனுப்பலாம் என்று கூறுவார். இதன் பின்னர் இந்திரன் தூதுவன் மூலமாக ஓலை அனுப்புவார். தூதுவனுக்கு ஏற்ப பாடல் பாடப்படுகின்ற போது தூதுவன் அதற்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிக்கொண்டு வருவான். இப்பாடலானது மதன் சிவனின் தவத்தை கலைக்க அனுமதி கொடுக்குமாறு ரதியிடம் கேட்டு கொண்டு பாடல் பாடி ஆடுவார்.

பாடல் :

"பச்சை பசுங்கிளியே உச்சிதமான பெண்ணே
பாரத ரதியாலே ஓய்தாக
சொல்லுகிறேன் கேள்!
பரலோகம் மாளுகின்ற வரம்
மிகுந்த இந்திரனே!
பச்சமுடன் எனை அழைத்தார்
வெகு இச்சையுடன் நானும்...."
பரமன் மகன் பெண் ரதியை

என்று பாட ரதி மன்மதன் போவதை விரும்பாது புலம்பி எதிர்பாடல் பாடுகின்றாள்.

"எந்தன் வார்த்தையை
தட்டி ஈசனிடம் போகாமல்
என் மணவாளரே நீரங்கிருப்பீர் - நாதா
நரி குறுக்கே ஓடுதே நாவும்
தடுமாறுதே எனது
மன்மதா அங்கே கூடுகொவென்று
வேடுவர்கள் கூவி அழுகின்றார்கள்."

இவ்வாறு ரதி மன்மதனை வழியனுப்ப பயந்து மதன் சென்றால் தீங்கு வருமென குறவன், குறத்தி குறி சொல்லுதல் அதன்பின்னர் அம்மன் போன்ற பாத்திரங்கள் வந்து பாடல் பாடி நடனம் ஆடச் செல்லும். அதன்பின்னர் மதன் இந்திரலோகம் செல்லும்போது ரதி விடை கொடுத்த னுப்புதல் போன்ற காட்சிகள் இடம்பெறும். மேலும் மதன் ரதியிடம் விடைபெற்று செல்லும் வேளையில் பலவிதமான அபச குணங்களை காண நேருகின்றது.

"நரி குறுக்கே ஓடுதே என் நாவும்
தடுமாறுதே எனது மன்மதா
அங்கு கூடி கோ வென்று வேடுவர்கள்
கூவி அழுகின்றார்கள்."

ஓரி அழுவதும் ஒற்றை நரி ஊளையிடுவதும் ஆந்தை அலறுவதும் அடுத்து நாகம் சீறுவதும் குகையில் இருக்கும் நரி கூவி அழுவதும் பாலை கிளி ஒன்று பறக்குதுபார்.

என சகுணங்களைக் கடந்து தெய்வலோகம் செல்கின்றார் மதன் அங்கே நந்தி மன்மதனைக் கண்டு இங்கு வந்த காரணம் என்ன வென்று பாடல் மூலம் கேட்பார்.

"பச்சை நிறமுடனே உச்சிதமாய்
தேரேறிபாரமன் கைலையருகே அறியாமல் போவதற்கு
பயமில்லாமல் வந்த வானார் நலமுடன் செப்பி விட்டு
பறந்தமையோடு மென்று
நந்தியுரைக்கலுற்றார்."

இந்தப் பாடல் மன்மதனிடம் கேட்க தான் வந்த காரணத்தை பாடல் மூலம் கூறுகிறார். நந்தியை தடுத்து விட்டு மதன் ஈசனின் தவத்தை அழிக்க செல்கிறார். மன்மதன் ஐந்தாவது பாணமாக அக்கினி பாணத்தை எடுத்து விட்டெறியவே இப்பாணம் சிவனின் நெற்றிக் கண்ணில் படவே நெற்றிக்கண் திறந்ததும் அதிலிருந்து தீப்பொறி பறப்பதுபோல் நெருப்பு சுவாலைகள் மன்தனை நோக்கி வருகின்றது. மன்மதன் வனம் எரிவதாக கதையில் இருப்பது போல் இவர்கள் ஊன்றப்பட்டர் கம்பத்தையும் போட்டு எரிப்பார்கள், பொழுது புலரும் வேளையில் ஒப்பாரியினை வைப்பார்கள். ஒப்பாரி வைத்து கொண்டு தோட்டத்தை வலம் வருவார். முதல் நாள் ரதியும், மன்மதனும் சந்தோஷமாக ஆடிக்கொண்டு வலம் வருவர். மறுநாள் ரதி மாத்திரம் அழுது கொண்டு வரும்போது மக்கள் பணம் கொடுப்பார். இதனை "கொள்ளிகாசு" என அழைப்பர். எரிந்த சாம்பலை எடுத்துக் கொண்டு காப்பு கட்டிய ஆற்றங் கரையில் சூடம் ஏற்றி ஆற்றில் சாம்பலை கரைத்து விடுவார்கள்.

மீண்டும் மூன்றாம் நாளில் உயிர்த் தெழும்புதல் நடைபெறும் முக்கியமான வாத்தியமாக தப்பு பயன் படுத்தப்படும்.

டென் டெணக்கு டென்டெனக்கு... என்று தப்பிசைக்கும் ஓசைக்கு ஏற் வட்டமுறையில் ஆடப்படும். ஒவ்வொரு தப்படிக்கும் ஏற்ப ஆட்ட முறைக்களும் மாறுபடும். எனவே காமன் கூத்தில் மலையக மக்களின் சகல கலை அம்சங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.எஸ்.கமலினி சுரேஷ்

# தத்துவவியலாளர்களும் இன்றைய கற்பித்தல் செயற்பாடுகளும்

அறிவுக் கண் திறந்தவன் ஆண்டவன் ஆவான். என்பதற்கிணங்க மனித குலத்தின் விசேட பண்பு அறிவாக உள்ளது. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆசான் எனும் ஆண்டவன் இருப்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில் நாஸ்தீகனுக்கு கூட ஆசான் எனும் ஆண்டவன் இருப்பதை ஒரு போதும் மறுக்க முடியாது.

விந்தை மிக்க இந்த உலகை எண்ணிப் பார்க்க வியப்பாய் உள்ளது. புவியையும் தாண்டி செவ்வாயில் தடம் பதித்து சாதனை பல புரியும் இந்த உலகமானது ஆசான் எனும் ஆண்டவனாலே உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இன்றைய காலத்தில் தம்மை கல்விக்காக பணித்து கல்வியின் பல தத்துவங்களை உருவாக்கியுள்ள தத்துவவியலாளர்கள் பலர் உள்ளனர். அந்த வகையில் இன்றைய இலங்கை கல்வியோடு (5E) தத்துவவியலாளர்களின் கருத்துக்களை நோக்கு வோமாயின்,

## I. ஜீன் ஜக் ரூசோ (1712 -1778)

"பிள்ளை ஒரு சிறிய மனிதனல்ல அவன் காண்பதும், சிந்திப்பதும், உணர்வதும், செயற்படுவதும் வயது வந்தோரை விட வேறுபட்டதாகும்." இங்கு ரூசோவின் கருத்தோடு ஒப்பிடுமிடத்து இன்றைய பிள்ளைகளின் ஆற்றலானது மிகவும் வேகமானதும், வியப்பானதுமாகும். எனவே இதற்கேற்ப ஆசிரியர் தத்தமது சிந்தனைக்கு ஏற்ப அன்றி பிள்ளையின் சிந்தனைக்கேற்ப கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்வது அவசியமாகும்.

## II. பெஸ்டலோசி

"பிள்ளையின் ஆசைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்ப கற்பித்தல் ஒழுங்கு படுத்த வேண்டும்"

இங்கு ஆசிரியரின் திறனையும், விருப்பங்களையும் பிள்ளையின் பால் புகுத்தாது பிள்ளையின் ஆற்றலுக்கும், திறனுக்கும் ஏற்ப ஆசிரியர் தம்மை ஆயத்தப்படுத்தி மேற்கொள்ளப்படும் கற்பித்தல் செயற்பாடு காலத்தை வெல்லக் கூடியதாய் அமையும்.

## III. புரோபல்

"பிள்ளைகள் விளையாட்டின் மீது காணப்படும் ஆர்வத்தை கற்பித்தலுக்கு பயன்படுத்த வேண்டும்." அதாவது இவரின் கருத்துப்படி ஆசிரியர் வகுப்பறை செயற்பாட்டில் ஆர்வம் குறைந்த பிள்ளை களை விளையாட்டில் ஈடுபடுத்துவதன் மூலம் வெற்றிகரமான கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள முடியும்.

## IV. கொமினியஸ்

"வார்த்தைகளால் கற்பிப்பதை விட ஆக்கங்களின் மூலம் கற்பிப்பது சிறப்பானதாகும். இயற்கையே சிறந்த ஆசிரியனாகும்."

இங்கு இவரின் கருத்துப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களின் மூலமும் பேச்சின் மூலமும் கற்பித்தலை மேற்கொள்வதை விட ஆக்கத்தின் மூலம் கற்பித்தல் சிறந்த ஆசிரியத்துவத்தை காட்டும் என்கிறார்.

## V. ஜோன்டுயி (1859 -1952)

**"கற்றலுக்காக தூண்டப்படுவதற்கு மாணவர்களிடையே மாணவர்கள் மீது விருப்பத்தை ஏற்படுத்த வேண்டும்."**

5E செயற்பாட்டின்போது குறித்த பாடத்தை கற்க வேண்டும் என்பதிலும் பார்க்க அப்பாடத்தில் மாணவன் விருப்பு கொள்ளவேண்டும் என்பதே ஆசிரியரின் வெற்றி என்கிறார்.

## VI. மொண்டிசூரி (1870-1952)

**"மாணவனுக்கு சுயமாகக் கற்பதற்கு தேவையான சுதந்திரமும், சூழலும் உருவாக்க வேண்டும்."**

இவரின் கருத்தானது ஆசிரியர் ஒருவர் உந்து சக்தியாகவே இருக்க வேண்டும். எனவே மாணவனது அதிதிறனை வெளிப்படுத்தக்கூடிய சந்தர்ப்பத்தை ஆசிரியர் சிறப்பாக ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

எனவே மாணவ சமூகத்தின் வெற்றிக்கு பின் ஆசிரியர் எனும் ஆண்டவன் இருப்பான் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அதனால் தான் **"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது."** என்கிறார் போலும் அதனால் **இணைந்திடுவோம். நாமும் நாட்டின் வளம் காத்திடுவோம் வாழ்நாள் எல்லாம்.**

1. உயருங்கள் நல் ஆசிரியராய்
   உயர்த்துங்கள் நல் மாணவர்களை
2. உயருங்கள் கல்வியிலே
   உயர்த்துங்கள் பல பட்டங்களை
3. உயருங்கள் கற்றலிலே
   உயர்த்துங்கள் கற்பித்தல் சாதனங்களை
4. உயருங்கள் சமுகத்திலே
   உயர்த்துங்கள் நல் மக்கள் இனத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி. சுந்தரராஜா சுரேஜினி

## சிந்திக்க சில வரிகள்..........

1) நீ விழுகிற இடத்தைப் பாராதே அதனாலே பயனில்லை. நீ வழுக்கிற இடம் எதுவெனப் பார்.

2) இறைவனுடைய புகழைப் பாடுவதில் அல்ல, இறைவன் புகழும்படி வாழ்வதில் தான் பக்தி விளங்கும்.

3) சோதனைகளில் உன்னை நீ தெரிந்து கொள். அப்போது சாதனைகளுக்கு தேவன் உன்னை தெரிந்து கொள்வார்.

4) இறை உறவைத்தேடி நீ ஓடினால், உன் உறவைத் தேடி மனிதர்கள் ஓடி வருவார்கள்.

5) உப்புக் கரையாவிடில் உணவுக்கு சுவை வராது. உன்னை கரைக்காவிடில் ஒருவருக்கும் பயன் வராது.

6) பிறர் மதிக்கவில்லையே என்று மனம் குமுறும் முன், பிறரை மதிக்க நீ கற்று கொண்டாயா என்று கவனி!

7) ஜெபிக்காத எந்த மனிதனும் தேவனுக்கென்று பெரிய காரியங்களை சாதிக்க முடியாது

8) நேர்மையான நடத்தை வாழ்வளிக்கும் மரத்திற்கு இட்டுச்செல்லும் ஆனால் "வன்செயல் உயிராற்றலை இழக்கச் செய்யும்"

9) நிறைவுள்ள காலத்தில் உன் மனம் சோர்வு அடையுமானால் குறைவுள்ள காலத்தில் உன் ஆற்றல் குன்றிப் போகுமன்றோ?

10) இன்று நடக்கப் போவதே தெரியாது. ஆனால் நாளை நடக்கப்போவதை அறிந்தவன் போல பெருமையாக பேசாதே!

11) உன் இனத்தானுக்கு உதவி செய் அவன் உனக்கு அரணாய் இருப்பான், அவனோடு நீ சண்டையிட்டால் அவன் கதவைத் தாழிட்டுக் கொள்வான்.

12) குற்றத்தை மன்னிப்பவர் நட்பை நாடுகிறவர் குற்றத்தை திரும்ப திரும்ப நினைவூட்டுபவன் நட்பை முறிப்பான்.

13) நல் உரையை ஏற்போர் மெய் வாழ்வுக்கான பாதையில் நடப்பர்; கண்டிப்புரையைப் புறக்கணிப்போரே தவறான வழியில் செல்வர்.

14. விரைவில் வரும் செல்வம் விரைவில் கரையும் ஆனால் சிறிது சிறிதாக சேர்ப்பவனின் செல்வமே பெருகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.மரியதாஸ்
பகுதிநேர விரிவுரையாளர்

## இயேசு எப்போது பாஸ்கா கொண்டாடினார்

கிறிஸ்தவ மறையில் மக்களால் கொண்டாடப்படும் முக்கிய விழா பாஸ்கா விழா. இப் பாஸ்கா விழா இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை நினைவு கூர்ந்து கொண்டாடப் படுகிறது. நான்கு நற்செய்தியாளர்களும் இயேசு பாடுபட்டு மரித்து உயிர்த்தார். எனத் தெளிவாக கூறுகின்றனர். எனவே பாஸ்கா விழா புனித வாரத்தில் புனித வியாழன், புனித வெள்ளி, பாஸ்கா சனி முக்கிய இடம் பெறுகின்றன. புனித வியாழன் இயேசு நற்கருணை ஏற்படுத்தியதையும், புனித வெள்ளி இயேசு பாடுபட்டு மரித்ததையும், புனித சனி இயேசுவின் உயிர்ப்பு விழாவையும் கொண்டாடுகிறோம். ஆனால் நான்கு நற்செய்திகளையும், கவனமாக படிக்கின்ற பொழுது பல கேள்விகள் எழும்புகின்றன. குறிப்பாக இயேசு எப்போது பாஸ்கா விழாக்கொண்டாடி நற்கருணையை ஏற்படுத்தினார்.

### இயேசு கொண்டாடிய பாஸ்கா

"புளிபற்ற அப்ப விழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்" என்ற கேட்டார்கள் (மத் 26:17)

மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தி அமர்ந்தார் (மத்26:20), மற்ற ஒத்தமை நற்செய்திகளும் இயேசு பாஸ்கா விழாக் கொண்டாடினார் என்பதை தெளிவாகக் கூறுகின்றன. (மாற் 14:12, 18, லூக் 22 :7-8,14)

இவ் விழாவில் தான் இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார் (மத் 26 : 20 - 30, மாலற் 14 : 22 - 26, லூக் 22 : 14 - 20). ஒத்தமை நற்செய்திகள் இவ்வாறு கூற யோவான் தனது நற்செய்தியில் " அவர்கள் கயபாவிடமிருந்து ஆளுநர் மாளிகைக்கு இயேசுவைக் கொண்டு சென்றார்கள். அப்போது விடியற்காலம் பாஸ்கா உணவை உண்ணுமுன் தீட்டுப்படாமலிருக்க ஆளுநர் மாளிகையில் அவர்கள் நுழையவில்லை (யோ 18 : 28) என்றுள்ளது. அன்று பாஸ்கா விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நாள் அடுத்த நாள் ஓய்வு நாளாகவும், பெருநாளாகவும் இருந்தது எனவே அன்று சிலுவையில் உடல்கள் தொங்கலாகாது. (யோவா 19:31) என்றும் கூறுகிறார். இதன் படி இயேசு பாஸ்காவுக்கு முதல் நாள் இறந்தார். இது வெள்ளிக்கிழமை. அடுத்த நாள் ஓய்வு நாள். ஓய்வுநாள் சனிக்கிழமையாதலால் வெள்ளி இயேசு இறந்தார் இது திட்டவட்டமான உண்மை. ஆறு நாள் உலகைப்படைத்த இறைவன் ஏழாம் நாள் ஓய்ந்து இருந்தார் என (தொ.நூல் 2 : 2 - 3) கூறுகின்றது. அப்படியானால் இயேசு எப்போது பாஸ்கா கொண்டாடினார் என்ற கேள்வி எழும்புகிறது. ஆலயத்தில் பாஸ்கா ஆடு பலியிடக் கொல்லப்பட்ட நேரம் இயேசு மரித்தார்.

### இயேசுவின் பாடுகளின் கால நெருக்கடி

இயேசு பாஸ்கா விழாக் கொண்டாடி நற்கருணை ஏற்படுத்திய பின் ஒலிவ மலைக்குத் தம் சீடர்களுடன் சென்றார். (மாற் 14 :20) இங்கு செபத்தில் தந்தையிடம் இயேசு உருக்கமாக செபித்தார்.

அவ்வேளை யூதரினால் முத்த மிடப்பட்டு காட்டிக் கொடுக்கப்பட்டார். அவர்கள் இயேசுவை தலைமைக் குருக்களிடம் விசாரணைக்காகக் கொண்டு சென்றனர். மத்தேயும், மாற்குவும் இயேசு பிடிபட்ட இரவு முழுவதும் தலைமைச் சங்கத்தார் முன் விசாரிக்கப்பட்டது. போலவும் (மத் 26 : 57 - 68, மாற் 14 : 53 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64) லூக்கா இயேசு பிடிபட்ட இரவு முழுவதும் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை அனுபவித்த பின் மறுநாள் காலை சங்கத்தின் முன் விசாரணைக்காக நிறுத்தப்பட்டடார் என்றும், யோவான் இயேசுவைப் பிடித்தவர்கள் முதலில் டிவரை அண்ணாவிடம் கொண்டு சென்றார்கள் என்றும் கூறுகின்றனர். எல்லா நற்செய்தி யாளர்களும் இயேசுவைப் பலாத்து விசாரணை செய்து மரணத்திற்குத் தீர்ப்பிட்டான் எனக் கூறுகின்றனர். இயேசு கலிலேயன் என்பதை அறிந்தும் பிலாத்து இயேசுவை எருசேலமிலிருந்த ஏரோதிடம் விசாரணைக்காக அனுப்பினான் (லூக்கா 23 : 9- 12) யோவான் தனது நற்செய்தியில் பிலாத்துவின் மனைவி பிலாத்துவிடம் ஆள னுப்பி "அந்த நேர்மையாளரின் வழக்கில் நீர் தலையிட வேண்டாம், ஏனெனில் அவர் பொருட்டு இன்று கனவில் மிகத் துன்புற்றேன் என்று கூறுகின்றார் (யோவா 27 : 19 ) இதன் படி அறியாத ஒருவரைப் பற்றி எப்படி கனவு காண முடியும். எப்போது கனவு கண்டார். எனவே பல குழப்பங்கள் ஏற்படுகின்றன.

## யூதரின் வழக்கு முறை

யூத சட்டப்படி நீ மன்றம் காலையில் தான் கூடும். மாலையில் அல்ல இன்னும் அவர்கள் சட்டப்படி ஒரு நபரை மரணத் தீர்வைக்கு உள்ளாக்க 24 மணி நேரம் வேண்டும். எனவே இயேசு முதலில் அண்ணாவிடம் பின் தலைமைச் சங்கத்தின் முன் விசாரணை, அதன் பின் அவரை பிலாத்துவிடம் கூட்டிச் சென்றார்கள் பிலாத்து ஏரோதிடம் அனுப்புகிறான். பின் மறுபடி பிலாத்து விசாரணை, கசையடி மறு தீர்ப்பு, மரணதண்டனை, மரணம் இவ்வளவும் வியாழன் இரவு பிடிபட்டது முதல் வெள்ளி நண்பகலுக்குள் நடந்து முடிந்திருக்க வேண்டும். அதற்குள் பிலாத்துவின் மனைவி கனவு காண்கிறாள். இயேசு வெள்ளிக் கிழமை அதாவது பாஸ்காவுக்கு முதல் நாள் மூன்று மணிக்கு இறந்ததாக நற்செய்திகள் கூறுகின்றன (மாற் 15 : 33 - 37) சங்கம் காலையில் கூடியதற்கு லூக்கா நற்செய்தி ஆதாரம் தருகின்றது (லூக் 22 : 66) எனவே இயேசு காலையில் தான் தலைமைச் சங்கத் தின் முன் விசாரிக்கப்பட்டார் என்பது உறுதி.

இந்தக் கால நெருக்கடிக்கு விடையாக இயேசு பெத்தானியாவில் அபிஷேகம் செய்யப்பட்ட நிகழ்வு ஒளிக் கீற்றாக வருகிறது. மத்தேயு நற்செய்தியில் பாஸ்கா விழாவுக்கு இரண்டு நாட்களின் முன்பு பெத்தானியாவில் தொழு நோயாளர்கள் சீமோன் இல்லத்தில் விருந்துண்டபொழுது பெண் ஒருவர் நறுமணத் தைலத்தை அவர் தலையில் ஊற்றினாள் என்று கூறப்படுகின்றது. (மத் 26 : 4 - 13) யோர்வான் நற்செய்தியில் பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன் பெத்தானியாவில் விருந்துண்ட போது மரியா என்னும் பெண் விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசினாள் என்று கூறப்படுகின்றது. யோவான் நற்செய்திப்படி பாஸ்கா விழா சனிக்கிழமை யோவா ( 19 : 31) எனவே ஆறு நாட்களுக்கு முன் என்றால் பாஸ்கா கொண்டாட விருந்த சனிக்கு முன் உள்ள ஞாயிற்று கிழமை ஆகும். இதற்கிடையில் திருமதி ஜேபா ருடைய விளக்கத்தின் படி இயேசுவின் காலத்தில் இரு கலண்டர்கள் இருந்திருக் கின்றன. ஒன்று யூதரடையது மற்றையது எசேனியருடையது. யூதர்கள் எப்போதும் நிசான் மாதம் 15 ஆம் நாள் அதாவது முழு மதி நாள் அன்று பாஸ்கா கொண்டாடினார். பாரம்பரிய கூற்றின்படி திதாஸ்காலியா, எப்பிபானஸ் இருவரும் மழை காலத்தில் செவ்வாய்க்கிழமை பாஸ்கா கொண் டாடினர். அது மட்டுமல்ல ஆதித் திருச்சபையில் பிடிபட்ட புதன் என்று அன்று நோன்பு இருந்தனர் என்று காணப் படுகின்றது.

## இயேசுவின் பாஸ்கா

நற்செய்திகளில் காணப்படும் கால நெருக்கடிச் சிக்கல்களுக்கு விடை இயேசு எசேனியர் கொண்டாடிய பாஸ்கா விழா தினத்தில் அதாவது செவ்வாய்க்கிழமை மாலை பாஸ்கா கொண்டாடி அன்று நற்கருணை ஏற்படுத்தினார். அதாவது (மத் 26 : 4 -19) இல் கூறப்பட்டது போல் பாஸ்கா விழாவுக்கு இரண்டு நாட்கள் என்பது சரியாக வருகிறது செவ்வாய்க் கிழமை. செவ்வாய்க்கிழமை பாஸ்கா கொண்டாடிய பின் அன்று இரவு ஒலிவ மலைத்தோப்பில் அவர் காட்டிக் கொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். அன்று இரவு முழுவதும் தலைமைக் குருவின் மாளிகையில் உள்ள சிறையில் சிறையிடப்பட்டார். (லூக் 22 : 54, 63 - 65) அங்கு அன்னா அதிகாரமற்ற முறையில் விசாரித்திருக்கலாம் (யோவா 18 : 12 -13) புதன் காலை தலைமைச் சங்கத்தின் முன் விசாரிக்கப்பட்டார். யூதரின் ரபூளிக் சட்டப்படி ஒரு மனிதனுக்கு மரண தண்டனை தீர்ப்பிட்ட 24 மணி நேரம் தேவை .

எனவே மறு நாள் வியாழன் காலை தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டு தீர்ப்பிடப்பட்டு பிலாத்திடம் கொண்டு சென்றார்கள். பிலாத்து விசாரித்த பின் இயேசு கலிலேயாவைச் சேர்ந்தவர் என்று அறிந்த பின் அவரை ஏரோதிடம் அனுப்புகிறான். (யோவா 23 : 6 -7, 11). ஏரோது இயேசுவை ஏளணம் செய்து மீண்டும் பிலாத்தவிடம் அனுப்புகிறான். அன்று இரவு முழுவதும் இயேசு பிலாத்துவின் அரண்மனைச் சிறையில் அடைக்கப்பட்டார். அன்ற இரவு பிலாத்துவின் மனைவி கனவு கண்டிருப்பாள். மறு நாள் வெள்ளி மரணத்தீர்ப்பிடப்பட்டு சிலுவை சுமந்து சிலுவையில் அறையப்பட்டு நண்பகல் மூன்று மணிக்கு கல்வாரியில் இயேசு உயிர் துறந்தார். (மாற் 15 : 34) யோவான் நற்செய்தியில் இயேசு வெள்ளிக் கிழமை இறந்தார் என தெளிவாக கூறப்படுகிறது ( யோவா 19 : 31 - 32).

எனவே இயேசு எசேனியர் கொண்டாடும் பாஸ்கா விழா அன்று சீடருடன் பாஸ்கா கொண்டாடி நற்கருணை ஏற்படுத்தி யூதர் கொண்டாடும் பாஸ்கா விழா ஆடு பலியிடப்படும் நேரம் புதிய பாஸ்கா ஆடு ஆகிய இயேசு உலக மக்கள் அனைவரின் மீட்புக்காகத் தன்னை பலியாக்கினார்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி ராசலிங்கம் ஜெனட் ஸ்டெலா

# இன்றைய இளைய சமுதாயமும் இணையமும்

தற்போதைய யுகம் கணினியுகம் என்று அழைக்கப்படுகிறது 21 ஆம் நூற்றாண்டில் கணினி புரட்சியை ஏற் படுத்திக் கொண்டிருக்கின்றது. கணினி யின்றி எந்தவொரு செயற்பாடும் இல்லை யென்றதாகி விட்டது. கணினியின் பயன்பாடு அதிகரித்துக்கொண்டே போகின்றது. உயிர் கொல்லி ஆயுதத்துறை, உயிர்க்காக்கும் மருத்துவத்துறை ஆகிய துறைகளிலும் கணினி தனது ஆதிக்கத்தைச்செலுத்திக் கொண்டிருக்கின்றது. கணினியின் செயற் பாடு மண்ணில் மட்டும் அல்லாது விண்ணிலும் பரவியுள்ளது என்றால் மிகையாகாது.

விண்ணில் மனிதன் தனியாகக் கால் பதிக்கவில்லை. கணினியுடனேயே சென்று இருக்கின்றான். உதாரணமாக: இயற்கைக் கோள்களாகிய வெள்ளி, புதன், செவ்வாய் போன்றவற்றைப் பற்றிய தகவல்கள் அதில் ஏற்படும் இரசாயன மாற்றம் என்பவற்றை உடனுக்குடன் புவிக்கு தகவல் வழங்குவது கணினியின் உதவி யுடன் தான்.

கணினியின் செயற்பாட்டின் முக்கிய விடயம் இணையமாகும். இன்று இந்த இணையமானது கணினியின் வளர்ச்சியின் உச்சக்கட்டமாகவே விளங்குகின்றது என் பதை அதன் செயற்பாடுகளினூடாக அறிய முடிகிறது. இணையத்தின் உதவியுடனேயே கணினி இன்று எல்லாத் துறைகளிலும் மிளிருகின்றது கணினி செயற்கைக் கோள் களுடன் கைகோர்த்து இணையத்தின் மூலம் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்றது.

இணையம் இன்று எல்லாத் துறை களிலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்பாடல் துறையை எடுத்துக் கொண்டால் கையடக்கத் தொலைபேசி களில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது. ஆரம்பகால தொலைபேசி முறையில் அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்வதாக இருந்தாலும் நிமிடத்திற்கு அதிகமாகக் கட்டணம் செலுத்த வேண்டி இருந்தது. ஆனால் இன்று கணினியின் உச்ச நிலையாக காணப்படும் இணையத்தின் மூலமாக பணத்தையும், நேரத்தையும் சிக் கனப்படுத்துகின்றது. இணையம் நேருக்கு நேர்பார்த்தும் உரையாடலை மேற்கொள்ள முடிகின்றது.

முன்னேறிக்கொண்டிருக்கும் எங்கள் நாட்டிலே இணையம் இன்றியமையாததாக எல்லோராலும் இன்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இன்று இளையசமுதா யத்தின் கைகளில் இணையம் தவழ் கின்றது. எப்படி என்றால் இன்று பொதுவாகக் கையடக்கத் தொலை பேசிகளில் இணையத்தை அடக்கியுள்ளனர். அதாவது *GPRS (General pocket radio service) SMS, MMS, Voice mail. chating qick note* போன்ற வசதிகளின் மூலம் உறுதிப் படுத்தலாம். இவைகளைக் கொண்டு எந்த நேரத்திலும் எந்த வகையான தகவல்களையும் உலக நடப்புடன் ஒப்பிட்டு அலசி ஆராய்ந்து கண்ணிமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதில் தகவல்களைத் தருகின்ற நமது உற்ற தோழனாகி விட்டது இணையம்.

இன்று ஊடகத்துறையையும் இணையம் ஆக்கிரமித்துள்ளது. அதாவது இன்று தினத்தாள், புதினத்தாள் எமது கைகளில் வந்தடையும். முன் இணையத்தின் மூலம் நாம் செய்திகளை அறிந்து கொள்ளலாம். எந்தவொரு விடயத்தையும் மிக விரைவாக, மிகத் தெளிவாக, உறுதியாக, உண்மை யான தகவல்களை வழங்குவதில் இணை யத்திற்கு ஈடாக வேறொன்றும் இல்லை. இதற்கு உதாணமாக அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை எடுத்துக் கொள்ளலாம். அதன் முடிவுக ளையும், உண்மையான தகவல்களையும் இணை யத்தின் மூலமே பெற்றுக் கொண்டோம். அது மட்டுமல்லாது மாணவர் களின் உயர்தர, சாதாரணதர, பொதுப்பரீட்சை களின் பெறுபேறுகளையும் இணையத்தின் மூலமே நாம் முதலில் அறிந்து கொள்ள முடிகிறது.

இணையம் எல்லாத் துறைகளையும் விட கல்வித் துறைக்கு பெரும்பங்காற்றுகின்றது. அதாவது இன்று எமது இளைய சமுதாயம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ள அந்நாட்டிற்கு செல்ல வேண்டிய அவசியமே இல்லை. தனது வீட்டின் அறையில் இருந்தே இணையத்தின் மூலம் (*online*) அனுமதி பெற்று, கையேடுகளைப் பெற்று பரீட்சை களையும் இணையத்திலே முடித்து வீட்டில் இருந்தவாறே பட்டம் பெறக்கூடிய வசதி இன்று இணையத்தின் மூலம் இளைய சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதம் எனலாம்.

2004 ஆம் ஆண்டு உலகத்தையே உலுக்கிய 'சுனாமி' ஆழிப் பேரலையைப் பற்றிய முன் எச்சரிக்கை தகவல்கள் இணையத் தளங்களில் விடப்பட்டிருந்தன. ஆனால் அதை முறையாக புரிந்து கொள்ளாததால் பெரும் இழப்பை இலங்கை சந்தித்தது. அதனால் இணையத்தில் தகவல் பெறுவதுடன் அதனை முறை யாகவும், சரியாகவும் புரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

இணையம் இன்றைய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப் பாற்றுகின்றது. அதாவது இணையம் இளைஞர்களுக்குத் தேவையான வேலை வாய்ப்பையும் அதற்கு அவசியமான சில தகுதிகள், தகைமைகள், திறன்கள் என்பவற்றை இணையம் வழங்கியுள்ளது. அதாவது சில ஸ்தாபனங்கள் தமது பயிற்சி பட்டறைகளின் தொகுப்புக்களை இணை யத்தில் வெளியிடுகின்றன. அவற்றை கற்பதன் மூலம் எமது இளைய சமுதாயத்தின் அறிவுப் பெட்டகம் விரி வடைந்து புதிய சிந்தனைகள் முயற்சிகள் ஆக்கம் பெறுகிறது.

இணையத்தின் முக்கியமான விடயம் தகவல் பரிமாற்றமே. அதனால் நாம் இணையத்தின் மூலம் பெற்றுக் கொள் வதற்குரிய பல்லாயிரக்கணக்கான விடயங்கள் அடங்கிய பொக்கிஷக் களஞ்சியம் இணையம். நாம் நமது பொழுதுபோக்கு நேரத்தை பயனுள்ளதாக இணையத்தில் செலவிட்டால் அதிக பயனைப் பெறலாம். ஏன் சிறுவர்களுக்கு தமது அறிவினை வளர்க்கக்கூடிய பார்த்த மாத்திரத்தில் அவர்களைக் கவரக்கூடிய வகையில் விளையாட்டுக்களும் இணை யத்தில் உண்டு. அதனால் இணையத்தைச் "சகலகலா வல்லவன்" என்பர்.

இப்படி இணையத்தில் எவ்வளவு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல விடயங்கள் எமது வாழ்க்கையில் அறிந்து கொள்ள உள்ளபோது அவற்றை விட்டு விட்டு தேவையற்றவற்றைத் தேடி அலைவதில் இளைஞர்கள் பலரின் வாழ்வு இருட்டாகிச்செல்கிறது. இதனை இணை யத்தின் தவறாக கருதமுடியாது. இணை யத்தில் எவ்வளோ நல்ல விடயங்கள் எடுத்துக்காட்டப்படுகிறது என்பதை இன் றைய இளைய சமூகம் அறிந்துகொள்ள வேண்டும் என்பதே எம் ஒவ்வொருவரினதும் அவா.

எனவே எமது இளைய சமுதாயம் இணையத்தைப் பாவிக்கும்போது "அன்னப் பட்சி எப்படித் தண்ணீரில் கலந்த பாலில் பாலை மட்டும் பிரித்து எடுப்பது போல" சாதகமான, பாதகமான விடயங்கள் அடங்கிய இணையத்தின் சாதகத்தை மட்டும் எடுத்து இளைய சமுதாயம் முன்னேற வேண்டும்.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. சங்கீதா ராஜன்

# சிலை வழிபாடு சரியா தவறா?

உண்மையான கடவுளைத் தவிர வேறு தெய்வங்களையும் தங்கள் மனதில் தோன்றிய பல உருவங்களையும் வழி படுதல் சிலைவழிபாடு எனப்படும். மனிதர் களால் உண்டாக்கப்பட்ட தெய்வங்களை வழிபடுவதே சிலை வழிபாடு அல்லது விக்கிர ஆராதனையாகும். சூரியனைக் கடவுளாகவும் சந்திரனைத் தேவதை யாகவும் வழிபடுதல் சிலை வழிபாடாகும். ஒரு சிலைக்குப் பூசை செய்து தெய்வத்தை அதில் குடியிருக்கச் செய்து அதை வணங்கி வழிபடுவதும் சிலை வழிபாடாகும். ஏதாவது ஒன்றிற்கு அடிமையாகுவதும் ஒரு வகையில் சிலை வழிபாடு தான் உதாரணத்திற்கு கூறப் போனால் இன்று சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கையடக்கத் தொலை பேசிக்கு முதலிடம் கொடுக்கின்றார்கள் இதுவும் ஒரு வகையில் சிலை வழிபாடு ஆகும். சிலை வழிபாட்டைப் பற்றி திருவிவிலியத்தில் இரண்டு விதமான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

முதலாவதாக: மோசே சீனாய் மலைக்குச் சென்ற போது இஸ்ரேயல் மக்கள் ஆரோனின் தலைமையில் பொற் கன்று செய்து வழிபடத் தொடங்கியதை மலையிலிருந்து திரும்பிய மோசே கண்டு மனம் வருந்தி சினம் கொண்டு இவ்வாறு "கட்டளை கொடுக்கின்றார்." மேலே விண் வெளியில் கீழே மண்ணுலகில், பூமிக்கு அடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம் நீ அவைகளை வழிபடவும் வேண்டாம்" ( வி.ப. 20:4-5)

எந்தச் சூழ் நிலையில் கடவுள் இக்கட்டளையை கொடுத்தார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். யூதர்களை சூழ்ந்து சிலைகளை வணங்குபவர்கள் இருந்ததால் யூதர்கள் தங்களை இப்படிப் பட்டவர்களிடம் இருந்து பாதுகாக்க எண்ணி னார். ஆகவே சிலை வழிபாட்டைத் தடை செய்தார்கள் இந்த வகையில் தான் நாம் கடவுளின் கட்டளையை விளங்கிக் கொள்ள வேண்டும்

இரண்டாவது: இஸ்ரேயல் மக்களை பாலை நிலத்தில் பாம்பு கடித்த போது ஆண்டவர் மோசேயிடம் இவ்வாறு கூறினார் கொள்ளி வாய்ப்பாம்பொன்றைச் செய்து அதை ஒரு கம்பத்தில் பொருத்தி கடிக்கப்பட்டோரில் "இதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்" (எண் 21:8-9) என்றார். இங்கு ஆண்டவர் தாமே சிலையை செய்யச் சொல்கின்றார். நாம் பாவிக்கின்ற சுருபங்கள் உண்மைக் கடவுளை இயேசு கிறிஸ்துவை அல்லது புனிதர்களை பிரதிபலிக்கின்றன. இவை சிலை வழிபாடு என்ற அர்த்தத்தின் கீழ் வராது. ஆகவே இவை சிலை வழிபாடு அல்ல.நாம் மிகவும் அன்பு செய்கின்ற எம்மை விட்டு தூரத்தில் இருப்பவர்கள் அல்லது இறந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்பதில்லையா இறந்தவர்களின் படங்களுக்கு மாலை போடுகிறோம் விளக்கேற்றி வைக்கிறோம் அதனால் நாம் அவர்களை வணங்கு கிறோமென்று அர்த்தமாகுமா? அல்லது ஆராதனை செய்கிறோ மென்று கூறலாமா? சுருபங்களை வைத்து மரியாதை செய்ய லாம் என்று கி.பி. 787 ஆம் ஆண்டு இரண்டாம் நிசேயா சங்கம் எடுத்தியம்பியது இரண்டாம் வத்திக்கான் சங்கம் இதை மேலும் வலுப்படுத்தியது விசுவாசிகளின் வணக்கத்திற்காக கோயில்களில் திருவுரு வங்களை வைக்கும் பழக்கம் நிலைத்து நிற்கட்டும் எனினும் கத்தோலிக்க மக்களி டையே வியப்பைத் தூண்டி விடாமலும் பொருத்தக் குறைவான பக்தியில் அவர்கள் இன்பம் காணாமலும் இருக்கு மாறு இத் திருவுருவங்களை குறைந்தளவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான முறையிலும் வைக்க வேண்டும் (திருவெளிபாட்டு கொள்கைத் திரட்டு இல 125)

ஆண்டவர் இயேசுவுக்குத் தங்கள் உயிரைக் கையளித்தவர்களின் திருவுருவச் சிலை அல்லது படங்களைக் கோயிலில் வைத்து கோயிலை சமய வாழ்கை, இறையச்சம், ஆன்மீக மேம்பாட்டிற்கு ஏற்ற இடமாகச் செய்வதில் என்ன தவறு உள்ளது? புனிதர்களின் சிலைகள் நம்மையும் புனிதரைப் போல் வாழ நினைவுபடுத்துகின்றது. நாங்கள் பார்க்கக் கூடிய இயேசுவின் திருவுருவம் மாதாவின் திருவுருவம், புனிதர்களின் திருவுருவங்கள் நாம் பார்க்க முடியாதவர்களை எம் மனக்கண்முன் கொண்டு வருகின்றன. இப்படிப்பட்ட திருவுருவங்களால் இரண்டு நோக்கங்கள் உள்ளன. ஒன்று குறிப்பிட்ட நபரை பிரதிபலிக்கின்றது. இரண்டாவது அந்த நபருக்குரிய முக்கியத்துவத்தையும் மதிப்பையும் வெளிப்படுத்துகின்றன ஆகவே திருவுருவங்களுக்குக் கொடுக்கின்ற மதிப்பும் மரியாதையும் திருவுருவங்களுக்கு அல்ல மாறாக அவை யாரை வெளிப்படுத்துகின்றனவோ அவர்களுக்கு உரியது. புதிய விண்ணக எருசலேமில் புனிதர்களும் மறைசாட்சிகளும், மூப்பர்களும், வானதூதர்களும் அணி அணியாக இறைவனைப் போற்றித் துதிக்கின்றனர் என்று திருவெளிப்பாட்டு நூலில் வாசிக்கின்றோம். அதன் அடையாளமாகத்தான் கத்தோலிக்கத் திருச்சபையின் கோவில்களில் புனிதர்களின் திருவுருவச் சிலைகள் இடம்பெறுகின்றன.

ஆகவே சிலை வழிபாடு என்றால் என்னவென்று அறியாதவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையினரை கூறுவது நியாயமானதல்ல ஏனெனில் ஆராதனை வேறு வணக்கம் வேறு ஆராதனைக்குரியவர் இறைவன் மாத்திரமே வணக்கமும் மரியாதையும் எமக்கு வழிகாட்டியாய் வாழ்ந்த இறைவனுக்கு பிரியமாய் முன்மாதிரிகையான வாழ்க்கையினை வாழ்ந்த புனிதர்கள், மறைச்சாட்சிகள், மரியாள் போன்றோருக்கு வணக்கம் செலுத்துவது மரியாதை மாத்திரமே இதைச் சிலை வழிபாடு எனக் கூற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. கரோலீனா இளையராஜா

# பாவம்

இவ்வுலகில் பிறந்த அனைத்து உயிர்களுமே பாவ நிலைக்கு தள்ளப் படுகின்றன எவனொருவன் இறை மனித அன்பிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு உலக இன்பங்களில் அடிமைப்பட்டு வாழ எத்தனிக்கிறானோ அந்நிலை "பாவம்" என அடையாளப் படுத்தப்படுகிறது.

திருவிவிலியமானது பாவம் என்பதை பின்வருமாறு வரையறுத்துக் கூறுகின்றது

**தீச்செயல்கள் அனைத்துமே பாவம்**
(1யோவான் 5 : 17)

**நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும் அவர் அதை செய்யாவிட்டால் அது பாவம்**
(1 யாக்கோ 4 : 17)

**அடுத்திருப்பாரை இகழ்தல் பாவம்**
(நீதிமொழிகள் 14 : 21)

இவ்வாறாக திருவிவிலியம் "பாவம்" என்ற பரந்துபட்ட அம்சத்தை தெளிவாகவும், அழகாகவும் விபரித்து கூறியுள்ளது. இக் காலத்தில் தீச்செயல்கள் அனைத்தும் பாவம் எனக் கூறப்படுமிடத்து தீச்செயல் களாவன பொய், களவு, விபச்சாரம், தற்கொலை செய்து கொள்ளல், கொலை செய்தல், மாயக்கவர்ச்சிகளில் மயங்கிக் கிடப்பது, நுண்ணுயிர்களை கொள்ளல், தவறான ஆடம்பரங்களுக்கு அடிமை யாகுதல், மது, போதைப்பொருள் பாவனை, புகைப் பிடித்தல், பொறாமை, அகங்காரம், ஆணவம், திமிர், பிடிவாதம், பிறரைப்பற்றி பேசுதல், பிழையான வற்றுக்குகாக பரிந்து பேசுதல், பிறர் மனம் நோக நடத்தல், சிறுவர் பெண் துஸ்பிரயோகங்கள், பாலியல் வன்முறைகள், கருக்கலைப்புக்கள், அடுத் திருப்பவரை இகழ்ந்து பேசுதல், அடுத்தவர் உடமைகளை அடைய நினைத்தல், பெரியோரை மதியாமை, தீமையான காரியங்களுக்கு துணை போதல் என உலக பாவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். **எமது அன்றாட வாழ்வில் எங்கெல்லாம் எச் சந்தர்பத்தி லெல்லாம் அன்பு செய்தல் மறுக்கப் படுகிறதோ அங்கெல்லாம் அப்போதெல்லாம் பாவம் பிறக்கிறது.**

இவ்வாறாக பிறப்பெடுக்கும் பாவ மானது ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு விதமாக கருவாகின்றது. சிலருடைய பாவங்கள் வெளிப்படையானவை, சிலரு டைய பாவங்கள் மறைமுகமானவை, இன்னும் சிலருடையவை மனதுக்குள்ளேயே கருவாகும் ஊமைத்தனமான பாவங்களாக இருக்கின்றன. எது எவ்வாறிருப்பினும் இறைவனிடத்தில் பாவங்கள் மறைக்கப் படவே முடியாது.

**"சிலருடைய பாவங்கள் வெளிப் படையானவை. அவர்களுடைய பாவங்கள் தீர்ப்புக்காக அவர்களுக்கு முன் சென்று சேர்கின்றன. வேறு சிலருடைய பாவங்களோ அவர்களுக்குப் பின்னே வந்து சேர்கின்றன.**
(தீமொத்தேயு 5:24)

அதாவது அவரவர் பாவத் தன்மைக்கேற்ப ஆண்டவர் முன்னிலையில் தீர்ப்பிடப்படுவார்கள். வெளிப்படையான பாவங்களோ பின் நின்று வேதனையுற்று தீர்ப்பில் தத்தளிக்கின்றன. ஏனெனில் சிலர் தன்னுடைய பாவத்திற்காக இம்மையிலேயே தண்டனையை அனுபவிக்கிறார்கள். ஏனையவர்கள் இறப்பின் பின் அனுப விக்கிறார்கள்.

இவ்வாறாக இம்மையிலும், மறுமையிலும் தண்டனைக்கு உள்ளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவத்தினால் பல்வேறு விளைவுகள் எம்மில் கிளர்ந்தெழுகின்றன. அதாவது அன்பு மறுக்கப்படுமிடத்து பாவம் விளைகிறது என்பதனால் அச்சந்தர்ப்பங்களில் கருத்து மோதல்கள், முரண்பாடுகள், குடும்ப வன்முறைகள், நட்பில் பிரிவுகள், ஏமாற்றங்கள் வேதனைகள், துன்பங்கள், பழிவாங்கும் எண்ணங்கள், புரிந்துணர்வு இல்லா சமூக உருவாக்கம், நாத்திக வாத கும்பலின் உருவாக்கம் என பாவம், சமூகம் சீர்கெட்டு போய்விட வழி சமைக்கிறது.இந் நிலை தொடர்ந்து பாவத்தின் இறுதி விளைவாக மரணமே கிட்டும். இதனையே,

பாவத்துக்குக்கிடைக்கும் கூலி
(உரோமையர் 7 : 6)

என பாவத்தின் இறுதி வேதனம் மரணமாகவே இருக்கும் என தெளிவு படுத்தப்படுகிறது.

இந்த மரண வேதனையிலிருந்து தப்பித்துக் கொள்ள எமக்கு மருந்து இருக்கிறது. அம்மருந்து எம் ஒவ்வொரு வருக்குள்ளும் ஊற்றெடுக்கிறது. அவ்வரு மருந்து வேறு எதுவுமில்லை எம்மில் ஊற்றெடுக்கும் "அன்பு" என்ற பொக்கிஷமேயாகும். இதனையே

**"எல்லாவற்றுக்கும் மேலான ஒருவருக்கொருவர் ஆழ்ந்த அன்பு காட்டுங்கள். ஏனெனில் அன்பு திரளான பாவங்களையும் போக்கும்.**

1 பேதுரு 4 :8

அதாவது ஒருவருக்கொருவர் அன்பு செய்வதாலும், பகைவரிடத்திலே அன்பு கூர்வதாலுமே பாவத்தின் கணக்கை குறைத்துக் கொள்ளலாம்.

**"பாவம் " என்ற கொடிய நோயை, அன்பு என்ற மருந்திட்டு குணப்படுத்துங்கள்**

சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள் பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்

- எபேசியர் 4: 26 -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.டபிள்யு.யு.எல்.ஆர். கிளமன்ட

# ஆரோக்கிய வாழ்விற்கு ஆயுள்வேத வழிமுறைகள்

மானிடராய் பிறந்த அனைவரும் நீண்ட ஆயுளுடன் வாழவும் அதை ஆரோக்கியமாக பேணவும் முற்படுவது இயற்கையே. இதனாலேயே அன்று தொட்டு இன்றுவரை விழாக்களிலும், கொண்டாட்டங் களிலும் ஒருவரை ஒருவர் வாழ்த்தி மகிழ்கின்றோம். சுகதுக்கங்களை விசாரிக் கின்றோம். இதன்மூலம் புலப்படுவது நீண்ட ஆயுளானது ஒருவரமாகும்.

ஒருவரின் வாழ்வில் அவரது நடத்தைக்கோலம் முக்கியமானது எமது முன்னோர் நீண்ட ஆயுளும், பலமும் கொண்டவர்களாக காணப்பட்டமைக்கு அவர்களது உணவுப் பழக்கமும், நடத் தையுமே காரணமாகும்.

ஆயுள் பற்றிய விஞ்ஞானம், **கலை ஆயுள் வேதம்** எனலாம். அதாவது வாழ்க்கை பற்றிய, ஆயுள் பற்றிய, ஓர் கலை இதுவாகும். இந்த ஆயுளை எம் முன்னோர்

1. மகிழ்ச்சியான ஆயுள்
2. துயரமான ஆயுள்
3. அனுகூலமான ஆயுள்
4. அனுகூலமற்ற ஆயுள்

என வகுத்துள்ளனர். நெடுநாள் மகிழ்வோடு வாழவிரும்பும் ஒருவர் அனுகூலமான வாழ்வை வாழவேண்டும். இவ்வாறு சுகாதார இணக்கத்திற்கு ஏற்ப வாழ்வதனை "சுகாதார நற்காப்பு" என ஆயுள்வேதம் கூறுகின்றது.

எமது முன்னோரின் நீண்ட ஆயுளும் பாரிய நிர்மாணங்களும், வானுயர் கோபுரமும், பரந்த வயல் வெளிகளும், வியத்தகு போர் திறனும் ஏற்பட அவர்களின் நாளாந்த சிறந்த நடத்தைக் கோலமே காரணமாகும். இதனால் உடல் உள வலிமை பெற்று திகழ்ந்தனர். ஆனால் இன்று எமது ஆரோக்கியம் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்தால் அது கேள்விக்குறியே. இனி நாம் நாளாந்த நடத்தை என்றால் என்ன என்று பார்ப்போம்.

அதாவது ஒரு நாளில் ஒருவர் பின்பற்றும் வழிமுறைகள் **"நாளாந்த நடத்தைகள்"** எனப்படும். இதனை நாம் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. பகல் நேர நடத்தை
2. இரவு நேர நடத்தை எனக் கூறலாம்.

நாளாந்த நடத்தையானது புவியியல், காலநிலை, பிரதேச மக்களின் வாழ்வுமுறை, உடல் அமைப்பு, கல்வி, சமயம் போன்ற பல காரணிகளினால் இது வேறுபடும்.

உடல், உள, சமூக, ஆன்மீக அடிப்படையில் பரிபூரண ஆட்களை உருவாக்குவதும் புத்துணர்வை ஏற்படுத்தி உடலுக்கு சக்தியை வழங்குவதும் இரசாய னங்கள் என ஆயுள்வேதம் எடுத்துரைக் கின்றது. இதில் புலனடக்கம் மூலம் பேணப்படுவது 'ஆசார இரசாயனம்' ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் சிறந்த புலனடக்கம் பெறவும் சமூக, சமய விழுமியம் பேணப்படவும் முடிகின்றது. ஆசைகளை ஆரோக்கியமாக அடக்கியாழுவதன் மூலம் விழுமியம் பேணப்படுகின்றது.

நோயை பல காரணிகள் ஏற்படுத்து கின்றது. எனினும் எமது உடல் இயற்கை யாகவே நோயை தடுக்கும் ஆற்றல் பெற்றுள்ளது. இது **"சுகாதாரக்காப்பு"** எனப் படுகின்றது. ஒருவரின் ஆராக்கியத்துக்கு

1. போசணையான உணவு
2. ஓய்வும், நித்திரையும்
3. விளையாட்டு
4. உள மகிழ்ச்சி
5. சுகாதாரப் பழக்கவழக்கம்

போன்ற பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அதேநேரம் தீய சிந்தனை, தவறான நண்பர்கள், தரக் குறைவான சினிமா, தவறான வழிநடத்தல், புலனடக்கமின்மை, விளம்பரம், நவீன தொடர்பாடல் சாதனம், சுகாதாரத்திற்கு எதிரான கொள்கை என்பவற்றால் ஆயுளை பாழாக்கிக் கொள்கின்றனர். எனவே இத்தகைய செயல்களை ஆயுள்கலை வெறுக்கின்றது.

உளத்திற்கு நெருக்கீட்டை உண்டு பண்ணும் கோபம், பொறாமை, வஞ்சகம், மனச்சஞ்சலம் என்பவற்றை தவிர்க்க வேண்டும். அதேநேரம் உடலின் இயற்கை நிகழ்வுகளான பசி, தாகம், மலசல உபாதை, தும்மல், இருமல் என்பவற்றை தடுக்கக்கூடாது எனவும் ஆயுள் விஞ்ஞானம் கூறுகின்றது. உணவு உண்பது பற்றி ஆயுள் வேதம் சிறப்பாக கூறுகின்றது இவ்வாறு

உணவு உட்கொள்ளும் நேரம், தன்மை, வகை, கலப்புணவு, தரம், பத்தியத்தன்மை, உளநிலை, பசியின் அளவு என்பன பற்றி அது சிறப்பாக கூறுகின்றது. அதேநேரம் பசிக்கும் போது உணவு உண்ண வேண்டும். உண்ணும் போது உளநெருக்கிடை இல்லாமலும் கோபம், விரக்தி, பதற்றம் என்பவற்றை தவிர்த்தும் மனநிறைவோடு, அமைதியாக, குடும்பமாக நற்போசணையான உணவு களை உண்ணவேண்டும். உணவு உண்ட பின் குளிர்பானம், செயற்கை பானம் குடித்தல், நித்திரை செய்தல், குளித்தல், தேனீர் அருந்துதல் போன்ற செயற் பாடுகளை தவிர்க்க வேண்டும். இதுவே ஆயுள் வேதத்தின் உபதேசமாகும்.

நம் முன்னோர் முறையான போசணை மிக்க இயற்கை உணவுகளையே உண்டனர். ஆனால் இன்று முறையற்ற உணவுப் பழக்கம், நவீன உணவுகளின் ஆதிக்கம் என்பன சிறந்த ஆரோக் கியத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. இதனால் மக்களின் ஆயுள் குறைவடைந்து செல்வதோடு நாளாந்தம் பல நோய் களுக்கும் ஆளாகின்றனர்.

எனவே சிதைந்து கொண்டிருக்கும் நம் ஆரோக்கிய வாழ்வு சீர்பெற வேண்டுமாயின் ஆரோக்கியமான நடத்தைப் பண்புகளை பின்பற்றுவது அவசியமாகும்.

நோய்க்கு சிகிச்சையளிப்பதிலும் பார்க்க
நோய் வராமல் தடுப்பதே சிறப்பாகும்"

எனவே ஆயுள்வேத வழிகளை நாமும் பின்பற்றி நலமாக வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி பீற்றர் நிரோஷினி

# செப வாழ்க்கைக்கு திருவிவிலியத்திலிருந்து சில ஆதாரங்கள்.

செபமே ஜெயத்தை தரும். செபமானது ஒரு மனிதனின் இதயத்தைப் போன்றது. இதயமானது மனிதனின் உடலுக்கு தேவையான இரத்தத்தைக் கொண்டு செல்ல உதவுவது போல செபமும் தனிமனித திருச்சபை தேவைகளை இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ள உதவுகின்றது. செபம் என்றால் என்ன? என்று நோக்குவோமாயின், இறைவனோடு உரையாடுதல் என்று அர்த்தம். நாம் ஒருவர் மேல் உண்மையான அன்பு வைத்திருந்தால் மாத்திரமே அவரது விருப்பு, வெறுப்பு அறிந்து பல மணிநேரம் உரையாடுவோம். உறவையும் வளர்த்துக்கொள்வோம். எனவே நம் இறைவனோடு உண்மையான, ஆழமான அன்பு இருந்தால் மட்டுமே அவரின் சித்தம், திட்டம், மனவாஞ்சை மற்றும் அவர் வெறுக்கின்ற காரியங்கள் என்பவற்றை அறிந்து செபிக்க முடியும்.

நாம் செபிக்கும் சந்தர்ப்பங்களில் இறைவனிடமிருந்து மூன்று விதமான பதில்கள் கிடைப்பதை நோக்கலாம்.

*Answer to a prayer will be* *1. yes*

*2. No*

*3. wait*

1. செபிக்கும்போது உடனடியாக பதில் கிடைத்துவிடும் உதாரணமாக எலியாவின் செபம் (1அரசர்கள் 18:36-38)
2. செபிக்கும்போது பதில் கிடைப்பதில்லை.

இதற்குக் காரணம் நாம் இறை சித்தத்திற்கு விரோதமாக கேட்டல் அல்லது அத்தேவை எமக்கு தீமையாக முடியும் என்பதற்காக இறைவன் அதை அனுமதிப்பதில்லை.

உதாரணமாக தாவீதின் செபம் (2 சாமுவேல் 12.16,17)

3. செபத்திற்கு பல நாட்கள் சென்று பதில் கிடைத்தல்

உதாரணமாக நெகேமியாவின் செபம்

எனவே நாம் இறைவனிடமிருந்து எமது செபங்களுக்கான பதிலைப்பெற இறை சித்தத்தை அறிந்து அதாவது திருவிவிலியத்தின் அடிப்படையில் செபங்களை ஏறெடுத்தல் அவசியமாகின்றது. திருவிவிலியத்தில் செபிக்கின்ற மனிதர்கள் என்று நாம் பலரை நோக்க முடியும். அவர்களில் ஏனோக்கு (தொடக்க நூல் 5:21 -24), நோவா (தொடக்க நூல் 6:9), ஆபிரகாம் (தொடக்க நூல்18:16 -33, 20:17) யாக்கோபு (தொடக்க நூல் 28:16-22) மோசே (விடுதலைப்பயணம் 33:11), இறைவாக்கினர்கள், தானியேல் (தானியேல் 6:10) போன்றோரின் செபவாழ்வு எமக்கு முன்மாதிரிகைகளாக அமைந்துள்ளன. இயேசு கிறிஸ்து செபவாழ்வுக்கு சிறந்த முன் மாதிரிகை ஆவார்.

அவர் காலை, மாலை அந்திசாமம் என்று எவ்வேளையும் செபித்தது மட்டுமல்லாமல் எப்படி செபிப்பது? என்று மத்தேயு 6:9-15 இலும் குருவானவரின் செபம் எப்படி இருக்க வேண்டுமென்று யோவான் 17 இலும் விளக்கியுள்ளார். குருவானவர் செபத்தில் இயேசு தமக்காகவும் தம் பன்னிரு சீடர்களுக்காகவும் தம் திருச்சபைக் காகவும் செபித்ததை வாசிக்கக் கூடியதாக உள்ளது. எனவே இயேசு தனது ஜீவன் நீங்கும் வரையிலும் செபவாழ்வுக்கு முன்மாதிரிகையாகவே திகழ்ந்தவர்.

நாம் செபிக்கும்போது ஏன் செபிக்க வேண்டும்? எப்படி செபிக்க வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது செபிக்க வேண்டும்? யாருக்காக செபிக்க வேண்டும்? எப்படி செபிக்கக் கூடாது? போன்ற கேள்விகள் மனதில் தோன்றும். அக்கேள்விகளுக்கான பதிலை திருவிவிலியத்தின் ஆதாரங்களின் அடிப் படையில் நோக்குவோமாயின்

**ஏன் செபிக்க வேண்டும்?**

* இறைவனை புகழ, போற்ற நன்றி செலுத்த (லூக்கா 17:12-18)
* தேவைகள் சந்திக்கப்பட (மத்தேயு 7:7-8)
* சோதனைக்கு உட்படாதபடிக்கு (லூக்கா 22:40)
* சரியான பதிலை அல்லது வழியை அறிய (திருத்தூதர் பணி 1:25)
* பரிசுத்த ஆவியானவரைப் பெற (திருத்தூதர் பணி 8:16)
* தேவைகள் எல்லாவற்றையும் இறைவனுக்கு தெரியப்படுத்த (பிலிப்பியர் 4:6)
* பிசாசை ஜெயிக்க அல்லது துரத்த (மத்தேயு 4:1 -11 மாற் 9:29)
* வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க (திருத்தூதர் பணி 1:14, 2:1-3)

**எப்படி ஜெபிக்க வேண்டும்?**

* இடைவிடாமல் (1தெசலோனிக்கேயர் 5:17)
* விசுவாசத்தோடு (மத்தேயு 21:22)
* சோர்ந்து போகாமல் (லூக்கா 18:1)
* ஊக்கமாக (லூக்கா 22:44)
* உருக்கமாய் (யாக்கோபு 5:17)
* உபவாசமிருந்து (எஸ்தர் 4:16:2 குறிப்பேடு 20:3 யோனா 3:6-10 எசாயா 58)
* கண்ணீர் சிந்தி (1சாமுவேல் 1:10)
* ஒருமனமாக (மத்தேயு 18:19:20)
* தூய ஆவியின் துணையைக் கொண்டு (எபேசியர் 6:18, 1 கொரிந்தியர் 14: 15)
* கருத்தாய் அல்லது அறிவோடு (1கொலோசேயர் 4:2)
* நன்றியோடு (பிலிப்பியர் 4:6, கொலோசேயர் 4:2)
* பாவத்தை அறிக்கையிட்டு (திருப்பாடல் 51 நீதிமொழிகள் 28:13)
* பரிசுத்தத்தோடு ( திருப்பாடல்கள் 96:9)
* விழித்திருந்து (மத்தேயு 26 41)
* ஜாக்கிரதையோடு அல்லது கட்டுப்பாடோடும் அறிவுத்தெளிவோடும்(1பேரு 4:7)
* மற்றவர் பார்வைக்கு அல்ல மறைவாய் (மத்தயே 6:5:8)
* பொருத்தனை செய்து (திருப்பாடல்கள் 76:11,1சாமுவேல் 1:11)

**எப்பொழுது ஜெபிக்க வேண்டும்**

* எக்காலத்திலும் (திருப்பாடல்கள் 34:1)
* அதிகாலையில் (திருப்பாடல்கள் 63:1)
* இரவும் பகலும் (லூக்கா 18:7)
* அந்தி சந்தி மத்தியான வேளை (திருப்பாடல்கள் 50:15)
* மூவேளையும் (தானியேல் 6:10)
* துன்பப்படும் வேளை( யாக்கோபு 5:13)

**யாருக்காக செபிக்க வேண்டும்**

* மற்றவர்களுக்காக (தொடக்க நூல் 20:17)
* எல்லா மனுஷருக்காகவும் (1 திமோத்தேயு 2:1)
* ஒருவருக்காக ஒருவர் (யாக்கோபு 5: 16)
* துன்பப்படுகிறவர்களுக்காக (யாக்கோபு 5:13)
* வியாதிப்பட்டவனுக்காக (யாக்கோபு 5:14)
* எங்களை நிந்திக்கிறவர்களுக்காக (லூக்கா 6:28)
* எங்களை துன்பப்படுத்துபவருக்காக (மத்தேயு 5:44)
* எமக்காக (மத்தேயு 7:7),

**எப்படி செபிக்கக் கூடாது**

* விசுவாசமில்லாதவர்களாய்(எபிரெயர் 11:6)
* வெளிவேடக்காரரைப்போல(மத்தேயு 6:5-7)
* பரிசேயரைப்போல (மத்தேயு 23:14, லூக்கா 18:11)
* இருதயத்தில் தீய எண்ணத்தோடு (திருப்பாடல்கள் 66:18)
* வேதாகமத்தை கேளாமல் செவியை விலக்கி (நீதிமொழிகள் 28:9)
* மற்றவர்களை குற்றப்படுத்தி (லூக்கா 18:11-12)

எனவே மேற்கூறிய சில திருவிவிலிய உதாரணங்களை கருத்திற் கொண்டு செபிப்போமாகில் எமது வாழ்வு செழிப்பதோடு இறைவனோடு மட்டுமல்லாது மனிதரோடும் நல்லுறவை பேணி ஜெய வாழ்வு வாழமுடியும்.

*Let's pray to god. He will do wonderful things to us.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.
நிர்மலாதேவி செல்வகுமார்

# அமைதியைப் பேசுவோம்

"சத்தம் இல்லாத தனிமை வேண்டும்" யுத்தம் இல்லாத உலகம் வேண்டும் என்றார் ஓர் கவிஞர் எவ் இடத்தில் பார்த்தாலும் இன்றைய சூழ் நிலையில் அமைதியற்ற நிலை தொடர்ந்து கொண்டே செல்கின்றது சாதனையாளர்கள் பலரின் வெற்றிக்கு பெரும்பாலும் அவ் அமைதியே காரணமாய் இருக்கின்றது இரைச்சல் மிக்க இடத்தில் நின்று ஓர் காரியத்தை செய்வ திலும் பார்க்க அமைதியான இடத்தில் இருந்து செய்யும் காரியம் நிச்சயம் பிழையற்றதாய் முழுமையாய் இருக்கும் அமைதியான இடத்தில் எல்லாம் நிறைவாய் இருக்கும். ஆர்ப்பாட்டமிக்க இவ் வுலகில் மனிதன் விரும்புவதும் இவ் அமைதியையே அதனாலோ என்னவோ எம் முதியோர் "நிறைகுடம் தளம்பாது" என்று அன்றே கூறியிருக்கின்றார்கள். எல்லாம் தெரிந்த ஞானிகளிடம் குடி கொண்டிருக்கும் அமைதியே அவர்களை தெய்வமாக்கு கின்றது. எம் இயேசு கிறிஸ்துவும் தனிமையிலேயே பல தடவைகள் இறைவ னிடம் பிரார்த்திக்கின்றமை நாம் அறிந்ததே. அப் பிரார்த்தனைகள் உடனேயே கேட்கப் பட்டது யாவும் கிடைத்தது தனிமையில் அமைதியாக இருந்து செய்யும் வேண்டு தல்கள் நிச்சயம் ஏறெடுக்கப்படும் என்ப தில் ஐயமில்லை

கோபமும் கொடூரமும் சூழ்ச்சியும் அற்றுப்போக வேண்டுமெனில் மனிதன் மனிதனாக வாழ வேண்டுமெனில் இவ் வமைதி நிலையை பேணுவது கட்டாய மாகும். எல்லா சிந்தனைகளையும் சீர்படுத்த சிறந்த உயிரோட்டமுள்ள திட்டங்களை வகுக் கவும் சாதிக்கவும் இவ் அமைதி அவசியமே. எவ்வாறான மனிதனையும் திசை திருப்பி வாழ்வடைய செய்யும் சக்தி இவ் அமைதிக்கு உண்டு. கோபத்தை ஏற்படுத்துகின்ற இடத்தில் இருந்து இக் கணமே விலகுவது பல ஆபத்துக்களை தவிர்க்கும் தனிமை அமைதியை ஏற்படுத்தி உண்மையை உணர வைக்கும் மனச் சாட்சியுடன் பேச வைத்து உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆரோக்கியத்தை ஏற்ப டுத்தும். எனவே அமைதியை பேணுவோம் அன்பாய் வாழ்வோம் அகிலத்தை வெற்றி கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி.
வில்லியம்ஸ் ஜரின் நவஜோதி

# வாழும் காவியம்

உலகில் 1.7 பில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகையைக் கொண்ட மிகப் பெரிய மதமாக கருதப்படுவது கிறிஸ்தவ மதம் ஆகும். கிறிஸ்தவம் என்ற சொற்பதம் இயேசு கிறிஸ்துவை, அவரது போதனைகளை பின்பற்றுபவர்கள் என்ற கருத்தில் சேர்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் இயேசுவால் போதிக்கப்பட்டு பின்னர் அவருடைய சீடர்கள், இயேசுவை அறிந்தவர்கள் மற்றும் பவுல் போன்ற இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இயேசுவின் தரிசனத்தைப் பெற்றவர்கள் போன்றவர்களால் வளர்க்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

ஆனால் கிறிஸ்தவ மதத்தின் தோற்றுவாயாக யூத மதமே இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவும் பிறப்பால் ஒரு யூதரே பொதுவில் கிறிஸ்தவ மதம் என்று கூறினாலும் இதில் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து என்று இரு பெரும் பிரிவுகள் இருக்கின்றன. இவ் இரு பிரிவினருக்கும் பைபிள் என்று கூறப்படுகின்ற வேதாகமம், அல்லது விவிலிய வேதம் என்ற புத்தகமே ஆணிவேராக ஆதாரமாக இருக்கின்றது. இப் புத்தகம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பெரும் பிரிவுகளையும் பழைய ஏற்பாட்டில் 39 மற்றும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களையும் உள்ளடக்கி இருக்கின்றது. ஏறத்தாழ 40 பேரளவில் பலதரப்பட்ட மனிதர்களைக் கொண்டு சுமார் 1500 வருடங்களாக எழுதப்பட்ட ஒரு புத்தகக் கோர்வையாக வேதாகமம் விளங்குகிறது. 1500 வருடங்களில் தீர்க்கதரிசிகள், மன்னர்கள், மீன் பிடிப்பவர்கள் என்று இன்னும் பல இன்னோரன்ன துறைகளைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டிருந்தாலும் வேதாக மத்தைப் படிப்பவர்கள் இவற்றுக்கிடையே முக்கியமானதொரு செய்தி ஆரம்பம் முதல் இறுதிவரை தொடர்ந்து செல்வதைக் கவனிக்காமல் இருக்க முடியாது.

இந்த வேதாகமப் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் பெரும்பாலான புத்தகங்களை உள்ளடக்கியதே 'தேனாக்' என்ற யூத மார்க்கத்தவர்கள் பயன்படுத்தும் பைபிள் ஆகும். இது மூன்றுபிரிவுகளைக் கொண்ட புத்தகத் தொகுப்பாகும்.

மனித நாகரீகத்தை அல்லது மனித தோற்றம் அதன் வரலாறு என்பவற்றை ஆன்மீக வழியில் ஆராய முற்படுபவர்களுக்கு அல்லது அறிந்து கொள்ள விளைபவர்களுக்கு கிறிஸ்தவர்களின் வேதாகமத்தை தயங்காமல் அறிமுகம் செய்யலாம். இதில் உலகத்தின் தோற்றம், கல் மனிதனின் தோற்றம், கடவுளின் கட்டளைகள், மனிதனின் மீறுதலால் உலகில் அறிமுகமாகும் பாவம், அந்த பாவத்தின் விளைவால் உலகத்தில் முதன் முதலில் பிரவேசிக்கும் ஆத்தும மற்றும் சரீர மரணம் அதைத் தொடர்ந்து மனிதனின் அழிவு என்பவையும் மனிதனின் வாழ்க்கை வரலாறு என்பனவும் மிக ஆழகாக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோர்வையாக கிறிஸ்தவ மதத்தில் அவர்களின் வேதாகமப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கின்றது,

கவிதை, தேர்ந்த வாழ்க்கைக்கு அவசியமான புத்திமதிகள் அல்லது அறிவுரைகள், நீதிக்கதைகள், படிப்பினைத் தரும் தனி நபர்களின் வாழ்க்கை வரலாறு, இலக்கியம், பாடல்கள், வாழ்க்கைத் தத்துவம், வாழ்க்கை முறை, சட்டங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நீதி தர்மங்கள், தீர்க்கதரிசனம் என்று பல இன்னோரன்ன விடயங்களை உள்ளடக்கியதாய் பரந்து விரிந்ததாய் இந்த வேதாகமம் விளங்கு கின்றது. உலகின் பொது மறையாய் அனைவராலும் படிக்க வேண்டிய ஒரு உன்னத வழிகாட்டி கிறிஸ்தவர்களின் புத்தகம் என்று ஒரு சிறு கட்டத்துக்குள் அடங்கிப் போனது மனித குலத்திற்கு ஒரு மாபெரும் இழப்பாகவே கருத வேண்டி யுள்ளது. உண்மையில் இன்று உலகில் பின்பற்றப்படும் பெரும்பாலான நீதி சட்டங்களின் முன்னோடியாக வேதாகமமே விளங்குகின்றது.

இந்து மதத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது எப்படி கீதையை தவிர்க்க முடியாதோ அல்லது இஸ்லாம் மதத்தை கூறும்போது குர்ஆனை எவ்வாறு தவிர்க்க முடியாதோ அதேபோல் கிறிஸ்தவ மதத்தை பற்றிக்கூறும்போது வேதாகமத்தைக் குறிப் பிடாமல் இருக்க முடியாது

புதிய ஏற்பாட்டின் ஆரம்பப் பகுதிகள் இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் என்பவற்றையும் இயேசுவின் நேரடியான போதனைகளையும் உள்ளடக்கியதாகக் காணப் படுகின்றது. ஏனையவை இயேசுவின் சீடர்களாலும் பிறராலும் எழுதப்பட்டிருந்த கடிதங்கள் மற்றும் சம்பவங்கள், போத னைகள் என்பவற்றை உள்ளடக்கியதாய் காணப்படுகின்றது. இறுதியில் வெளிப் படுத்தின சுவிசேஷம் என்ற புத்தகம் இனிவரப்போகின்ற காலங்களில் உலகில் சம்பவிக்கப் போகின்ற காரியங்களைக் குறித்த தீர்க்கதரிசனமாகவே விளங்கு கின்றது.

சுருக்கமாக கிறிஸ்தவ மதத்தை அல்லது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள வைகளை ஓரிரு வரிகளில் கூறவேண்டு மானால் உலகத்தைப்படைத்த இறைவன், அவனது படைப்பில் உயிரினங்களில் குறிப்பாக அவனது உன்னத சிருஷ்டியான மனிதனில் இறைவன் கொண்டுள்ள பற்றின் வெளிப்பாட்டை விளக்குவதே அது எனலாம். யோவான் புத்தகத்தில் 3ஆம் அதிகாரம் 16, 17 ஆம் வசனங்கள் இதை வெளிப்படுத்துகின்றன. இதில் 16ஆம் வசனம் பின்வருமாறு கூறுகின்றது. **"தாம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்."** எனவும் 17ஆம் வசனம் **"உலகிற்கு தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்"** எனவும் கூறுகின்றது.

அதேபோல கிறிஸ்தவ மதத்தின் கோட்பாடுகள் சட்ட திட்டங்கள் என்பவற்றை சுருக்கமாக ஒரே வசனத்தில் கூறுவதானால் அவை அத்தனையுமே இயேசுவின் நேரடி கூற்றாகிய பின்வரும் வாக்கியத்தில் உள்ளடங்குகின்றது. மாற்கு 19ம் அதிகாரம் 31 ம் வசனம் பின்வருமாறு கூறுகின்றது. **"உன் மீது நீ அன்பு கூறுவதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"** எனபதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தவிர கிறிஸ்தவர்களின் சம்பிரதாயங்கள், கொண்டாட்டங்கள் என்பவற்றை நோக்குவோமாயின் இயேசுவின் பிறந்த நாளை நத்தார் தினமென்றும் அவர் உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் அல்லது உயிர்த்தெழுந்த திருநாள் என்றும் கொண்டாடப்படும். இவை இரண்டும் கிறிஸ்தவர்களின் முக்கியமான கொண்டாட்ட தினங்களாகும். இதைத் தவிர பெரிய வெள்ளி தினத்தை கிறிஸ்து மனித குலத்தின் பாவங்களுக்காய் சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்த தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

திருமுழுக்கு அல்லது ஞானஸ்தானம் எனும் சடங்கு ஒருவர் கிறிஸ்தவ மதத்தினுள் உள்வாங்கப்படுவதைக் குறிக்கின்றது. பரிசுத்த நற்கருணையில் பங்கு கொள்வதன் மூலம் பூரண கிறிஸ்தவராக அவர் கருதப்படுகின்றார். இவை கிறிஸ்தவர்களின் சடங்காச்சாரமாக பின் பற்றபட்டு வருகின்றது.

எக் காலத்திற்கும் பொருந்தக் கூடியதாகவும் அதியுன்னதமான நூலாகவும் கிறிஸ்த வர்களின் இவ் வேதாகமம் காணப் படுகின்றது என்றால் அது மிகையாகாது.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.அந்தோனி அலெஸ்சாண்டர்

## நாடகத்துறையின் வளர்ச்சி

நாடகம் என்பது ஒரு கலை அல்லது பல வகை கலைகளின் கூட்டுச் சேர்க்கையாகும். நாட்டு + அகம் = நாடகம். அதாவது நாட்டு மக்களின் அகத்தினை பிரதிபலிக்கும் ஒரு கலை ஆகும். கதை ஒன்றை அரங்கிலே நடிப்பு, ஒப்பனை, ஓவியம், அரங்கமைப்பு, இலக்கியம் முதலானவற்றின் ஒன்றிணைப்பால் படைத்து காட்டுவதை நாடகம் என்று கூறலாம். இது **"இயல் இசை"** என்பவற்றினைக் கொண்டு காணப் படுகின்றது.

**"இயல்"** என்பது சொல் வடிவத்தினையும்.

**"இசை"** என்பது சொல் வடிவத்தினையும், இசை வடிவத்தினையும்.

"நாடகம்" என்பது இயல், இசை, அங்க அசைவுகளையும் கொண்டது.

இந்த மூன்று விடயங்களையும் கொண்டு காணப்படுவதை நாம் நாடகம் என்று அழைக்கலாம்.

உலகில் நாடகங்கள் பல வகையாக நடத்தப்படுகின்றன. இதை கிரேக்க அறிஞன் ஒருவன் உலகமே ஒரு நாடகமேடை என்று கூறியிருப்பதை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். தமிழகத்தினை பொறுத்தமட்டில் நாட கங்கள் பாவிசை நாடகங்களாக நடத்தப் படுகின்றன. நாடக வழக்கினை இவ்வாறு குறிப்பிட்டு கூறலாம். அதாவது **"சுவைப்பட வருவனயெல்லாம் ஓரிடத்தில் வந்தனவாக தொகுத்து கூறுவதாகும்."** சுவைகள் என்னும் போது அது 32 சுவைகளை குறிக்கின்றது. இதில் நிலைக்களன்கள் (பொருள்கள்) இரண்டு காணப்படுகின்றது.

1. பொருளின் தன்மையினை மட்டும் உணர்த்தி, வடிவம் உணர்த்தப்படாதது.
2. பொருளின் தன்மையினையும், வடிவத்தினையும் உணர்த்துவது.

இதில் முதலாவது விடயத்தில் அடங்குபவையாக காமம், வெகுளி, மயக்கம், இன்பம், துன்பம் முதலியன வற்றைக் கொண்டு காணப்படுகின்றது. வடிவங்கள் இல்லாத பொருட்களை பொறிகள் வாயிலாக மெய்பாடுகளை காட்டுவதற்கு கண்ணீர், வியர்த்தல், நடுங்குதல் போன்ற புறவுணர்வுகளை அறியும் போது இவை நாடக நடிப்பில் இன்றியமையாத சுவைகளாக காணப் படுகின்றன.

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம்**
**வெகுளி உவகையென்று**
**அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்பர்"**

மேற்கூறிய பாடலை அக்காலத்தில் தொல்காப்பியர் அழகாக நாடகம் தொடர்பாக எடுத்துக்காட்டுகின்றார். இந்த சுவைகள் அனைத்தையும் அடக்கி இன்று உலகிலேயே அனைத்து நாடுகளிலும் மனிதர்களால் விரும்பப்படுகின்ற ஒரு சில விடயங்களாக திரைப்படம், நாடகம் என்பன முதலிடத்தில் காணப்படுகின்றன. எனவே முற்காலத்தில் நாடகம் முதன்மைநிலையில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்க அளவுகள்

கி.பி 2ம் நூற்றாண்டுக் காலப் பகுதில் நாடகத்தின் தன்மையினை பார்க்கும் போது. பின்வரும் பாடல் கூறும் விடயங்களாக...

நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருப்பத்த நல்விரலாக
(சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை 99 106 வது வரிகள்)

கண்ணிடை சாண் கொண்டு, மனிதன் ஒருவரின் பெருவிரல் 24 கொண்ட அளவில் ஒரு கோலினை அக்கால அளவு கோலாக கருதினார்கள். இதனைப் உற்று பார்க்கும் போது அளவுகளாக பின்வரும் விடயங்களை பயன்படுத்தி இருப்பது நாம் அறிந்துக்கொள்ளவேண்டிய சில விடயங்களாகும்.

| | |
|---|---|
| 8 அணுக்கள் | 1 தேர்ந்துக்கள் |
| 8 தேர்ந்துக்கள் | 1 இம்மி |
| 8 இம்மி | 1 எள் |
| 8 எள் | 1 நெல் |
| 8 நெல் | 1 பெருவிரல் |

என்று அக்கால அளவாக மக்கள் சிலப்பதிகாரத்தில் பயன்படுத்தியதை நாம் அறிந்துக்கொள்ளலாம். எனவே மக்கள் நாடக அரங்கினை அமைக்க பின்வரும் அளவினை பயன்படுத்தி அமைத்தார்கள்

| | |
|---|---|
| அகலம் | 7 கோல் |
| நீளம் | 8 கோல் |
| உயரம் | 1 கோல் |

என்ற அடிப்படையில் மேடையினை அமைத்து அரங்கின் மேற்பகுதியில் பலகையினை பதித்து அரங்கத்தின் உள்ளே செல்வதற்கும், வெளியே செல்வதற்கும் இரண்டு வாயில்கள் அமைத்து அத்துடன் ஆடும் இடத்தில் மிக பெரிய விளக்குகள் ஏற்றி நாடகத்தினை அரங்கேற்றினார்கள் என்று கூறப்படுகின்றது.

## திரைகள்

பண்டைய காலத்தில் மூன்று வகையான திரைகள் காணப்பட்டன.

1. ஒரு முக எழினி - இது ஒரு பக்கமாக சுருக்கி கட்டப்பட்ட திரையாகும்.

2. இரு முக எழினி - இது ஒரு திரை இரண்டாக பிரிக்கப்பட்டு சேர்க்கவும், பிரிக்கவும் கூடியதாக காணப்படும்.

3. கரந்து வரல் எழினி - இது தொங்கும் திரையாக காணப்படும்.

இவ்வாறான நிலையில் நடிகர் அரங்கின் உள்ளே செல்வது என்றால் வலது புறத்தினையும் வெளியே செல்வது என்றால் இடது புறத்தினையும் பயன்படுத்த வேண்டும்.

## நாடகத்துறை வீழ்ச்சிக்காலம்

சங்ககாலத்தில் மிக வளர்ச்சி பெற்று இருந்த நாடகத்துறையானது கி.பி 3ம் -9ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் எந்தவிதமான ஒரு செழிப்பு அற்ற தன்மையில் காணப்பட்டது. இது ஒரு இருண்ட காலப்பகுதியாக இலக்கிய வரலாற்றில் கூறுகின்றனர். இந்த காலப் பகுதியில் இந்தியாவில் பௌத்த, சமண சமயங்கள் பரப்பப்பட்டபோது இவர்களின் கருத்துப்படி நாடகமானது **"சிற்றின் வேட்கையினை எழுப்புவது"** என்று வலியுறுத்தி கூறப்பட்ட காலப்பகுதியாக காணப்படுகின்றது. எனவே அக்காலத்தில் ஏனைய மொழிகளின் கலப்பினால் நாடகத்துறை வீழ்ச்சி அடைந்து காணப் பட்டது. தொடர்ச்சியாக அக் காலத்தில் தோன்றிய நூல்களும் அதாவது **"பதினென் கீழ்கணக்கு நூல்கள்"** நாடகம் தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு சிறப்பினையும் கூறவில்லை. இதனால் நாடகத்துறையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது என்று கூறலாம்.

## நாடகத்துறை மறுமலர்ச்சிக்காலம்

நாடகத்துறையில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டு இருந்த காலகட்டத்தில் கி.பி 9ம் 13ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் தமிழகத்தில் சோழ மன்னர்களின் ஆட்சியினால் கலைகள் வளர்ச்சி அடைய தொடங்கின. எனவே சோழ மன்னர்களினால் நாடகத்துறைக்கான பல அரண்மனைகள். கோயில்கள் கட்டப்பட்டு அதன் மூலம் நாட கங்கள் மக்கள் மத்தியில் அரங்கேற்றப் பட்டன. ஆகவே சங்ககாலத்தில் நடத்தப்பட்ட அதேபோன்ற நாடகங்கள் நடாத்தப்பட்டு 17ம் நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்றன நாடகங்கள் வளர்ச்சி பெற்றன என்று கூறலாம்.

## இன்றைய தமிழ் நாடகக்கலைக்கு வித்திட்டோர்

17ம் நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி போன்ற நாடகங்கள் வளர்ச்சி பெற்று இருந்த காலகட்டத்தில். 19ம் நூற்றாண்டில் தெருக்கூத்து என்ற நாடகம் தோற்றம் பெற்றது. தெருக்கூத்து நாடகத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவராக **கோவிந்தசாமி ராவ்** காணப்படுகின்றார். இவருக்கு நாடகத்தின் நேரத்தினையும் மாற்றி அமைத்தவர் என்ற பெருமையும் உண்டு. இதனை தொடர்ந்து நாடகத் துறைக்கு மேலும் வலுச்சேர்க்க கி.பி 1890ம் ஆண்டுக் காலப்பகுதியில் நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்பட்ட பம்மல் சம்பந்த முதலியார் நாடக மேடையினை மாற்றி அமைக்க உதவியவர் என்ற பெருமையும் பெற்றார். அதனை தொடர்ந்து நாடகத்தினை வளர்க்க சி.கன்னையா 1892ம் ஆண்டு நாடக மேடையில் ஒளி விளக்கினையும் பயன்படுத்தி மற்றும் உயிருள்ள விலங்குகளையும் பயன்படுத்தி சாதனை படைத்தார். இப்படியான முறையில் தொடர்ச்சியாக நாடகத்தினை வளர்க்க டி.எஸ். இராசமாணிக்கம் என்பவர் நாடக துறையினை வளர்ப்பதற்கு நாடக மேடையினை இயங்கு உலகமாக மாற்றி அமைத்து சாதனைகள் பல படைத்தார். எனவே நாடகத்தின் வளர்ச்சி 20ம் நூற்றாண்டில் ஒரு பெரு வளர்ச்சி அடைந்த நிலையில் காணப்படுகின்றது என்று கூறலாம்.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. தேவகுமாரி ரவீந்திரசேகர்

# என் மகனே என் மகளே உனக்கொரு வேண்டுகோள்

"என் மகனே என் மகளே உன் தகப்பன் புத்தியைக் கேள்
தள்ளாதே உன் தாயின் போதகத்தை "
(நீதிமொழிகள் 6:20 ஆம் வசனம்)

21 ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் இன்றைய உலகை நோக்குகையில் எங்கும் அவசரம், எங்கும் பரபரப்பு, எங்கும் பதற்றம், ஓயாத வேலை, அயராத உழைப்பு ஒருவரோடொருவர் அன்பாகப் பேசுவதற்கு கூட நேரம் இல்லை.

இவ்வாறான இன்றைய கால கட்டத்தில் பெற்றோரை கனம் பண்ணுதல் என்னும் பண்பை நோக்குவோமானால் பெற்றோரை மதித்தல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், பெற்றோர் கூறும் அறிவுரை, ஆலோசனைகளைக் கேட்டல் போன்ற பண்புகள் அருகிக் கொண்டே வருகின்றன. பெற்றோர் முதிர் வயதையடைந்தவுடன் முதியோர் இல்லத்தில்கொண்டுபோய் விடுகின்றனர். இவ்வாறு முதியோர் இல்லத்தில் விடுவதற்கான காரணத்தைக் கேட்டால் பெற்றோரை பராமரிக்க நேரமில்லை. வீட்டில் ஆளில்லை எனப்பல சாட்டுப் போக்குகளைக் கூறுகின்றார்கள். தற்கால யுகத்தில் பொருளாதார பிரச்சினை காரணமாக ஆண், பெண், இருபாலாருமே வேலைக்கு போக வேண்டியது அவசியம். தான் அதற்காக முதிர் வயதுடைய பெற்றோரைக் கவனியாமல் அவர்களோடு அன்பாகச் சில வார்த்தைகள் பேசாமல் கவனிக்காமல் விடுவது தவறுதான்.

வேதாகமம் பெற்றோரைப் பற்றிக் கூறுவது என்ன என நாம் நோக்குவோமானால் விடுதலைப் பயணம் 20:12 ஆம் வசனத்தில் 'உன் தந்தையையும் தாயையும் கனம் பண்ணுவாயாக எனக் கூறுகிறது. இவ்வார்த்தையானது கடவுள் கொடுத்த பத்துக் கட்டளைகளுள் நான்காவது கட்டளையாக உள்ளது. பத்துக் கட்டளைகளுள் ஒன்றாக இக்கட்டளை அமைந்திருப்பதன் மூலம் வேதாகமம் பெற்றோரைக் கனம் பண்ணுதலுக்கு கொடுத்துள்ள முக்கியத்துவத்தினை நாம் அறியக்கூடியதாய் உள்ளது.

எபேசியர் 6:1-3 ஆம் வசனத்தை நோக்குவோமானால் 'பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள் ஆண்டவரின் அடியாருக்கு இது ஏற்புடையது. "உன் தந்தையையும், தாயையும் மதித்துநட" என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை இதனால் நீ நலம் பெறுவாய் மண்ணுலகில் நீடுழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி. இவ்வசனத்தினூடாக நாம் பெற்றோர்களை மதித்து அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடந்தோமானால் மண்ணுலகில் நலம் பெற்று நீடுழி வாழ்வோம் எனக் கூறப்படுகிறது. இவ் வசனத்தை எபேசியர் ஊடாக புனித பவுல் வலியுறுத்துகின்றார். எனவே நாம் பெற்றோர் கூடவே இருந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிகளைச் செய்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் தீமோத்தேயு 5:4 ஆம் வசனத்தை பார்ப்போமானால் பிள்ளைகளோ, பேரப் பிள்ளைகளோ உடைய கைம் பெண்கள் தாங்கள் கொண்டுள்ள இறைபற்றிற்கு ஏற்ப முதலில் தங்கள் சொந்தக் குடும்பத்தினரைப் பேணவும், பெற்றோருக்கு நன்றிக்கடன் ஆற்றவும் கற்றுக்கொள்ளட்டும். இதுவே கடவுள் முன்னிலையில் ஏற்புடையது. என புனித பவுல் எழுதியுள்ளார். இங்கு ஒரு கைம்பெண் கூட பெற்றோருக்கு நன்றிக் கடன் ஆற்றவேண்டு மென புனித பவுல் எதிர்பார்க்கிறார்.

"தந்தையைக் கொடுமைப்படுத்தித் தாயை துரத்திவிடும் மகன் வெட்கக் கேட்டையும், இழிவையும் வருவித்துக் கொள்வான்" என வேதாகமத்தில் நீதிமொழிகள் 19:26 ஆம் வசனத்தில் கூறப்பட்டுள்ளது. இவ் வசனத்தில் மூலம் பெற்றோரை நாம் கனப்படுத்தாவிட்டால் எமக்கு வரும் தீமைகளை அறிந்து கொள்ளலாம்.

எனவே இவ் உலகத்தில் நாம் எமது பெற்றோருடன் வாழும் காலத்தில் எமது பெற்றோர் படித்தவராக இருந்தாலும், பாமரராக இருந்தாலும் ஏழையாக இருந் தாலும், பணக்காரராக இருந்தாலும் எப்படி இருந்தாலும் சரி நாம் எமது பெற்றோரை கனம் பண்ணி, அவர்களுக்கு கீழ்ப்படிந்து அவர்கள் ஆலோசனைகளுக்கு செவிமடுத்து வாழ்வோமானால் இவ்வுலகில் நலம் பெற்று நீடுழி காலம் வாழ்வோம் என வேதாகமம் கூறுகிறது.

எனவே நாம் அனைவரும் எமது பெற்றோரை மதித்து, அவர்களுடன் சந்தோசமும் சமாதானமுமாக வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.லூர்துசாமி.ஹெலன்



# மாணவர்களின் புனிதர் அலோசியஸ் கொன்சாகா

பெர்னாட், மார்த்தா என்ற அரச பரம்பரையினருக்கு வட இத்தாலியில் 1568 .3.9 அன்று அலோசியஸ் கொன்சாகா மகனாகப் பிறந்தார். இவர் சிறுவயதி லிருந்தே அரச தோரணையை ஒதுக்கி கற்பு நெறி, தவறாதவராகவும், இறைப்பற்று உடையவராகவும் வாழ விரும்பினார்.

தனது மாணவப் பராயத்தில் கருத்துடன் கற்பதிலும் ஏனைய மாணவர் களுக்கு உதவுவதிலும் சிறந்து விளங் கினார். ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்தினார். கெட்ட மாணவர்கள் மத்தியில் விழிப்பாகவும், சகோதர மாணவர்களுக்கு காவலனாகவும் இருந்தார். அலோசியஸ் சிறு வயதிலே நித்திய கன்னிமையில் வாழப்போவதாக மங்கள வார்த்தை மரியாளின் படத்தின் முன் சத்தியம் செய்தார். தனக்கு கிடைக்க விருந்த குடும்ப சொத்தினை தன் சகோ தரனுக்கு கொடுத்து விட்டு காட்சித்தியான சபையில் சேரத் தீர்மானித்தார். இவர் இவ்வுலக வாழ்வை துரும்பாக மதித்ததால் 'இளவரசரே' என்று தன்னையாரும் அழைப்பதை முற்றாக விரும்பவில்லை

புனித அலோசியஸ் 1528.08.15 அன்று யேசு சபை துறவற இல்லத்தில் சேர்ந்தார். அங்கிருந்து தனது தந்தைக்கு ஒரு மடல் எழுதினார் "அப்பா உங்களுக்குப் பணியக் கடமைப்பட்டவன் கடவுள் என்னை அழைக்கின்றார். இதை நீங்கள் தடுத்தால் கடவுளை எதிர்த்ததற்கு ஒப்பாகுமல்லவா" என குறிப்பிட்டிருந்தார். தனது பயிற்சி காலங்களில் மருத்துவமனை சென்று நோயாளிகளை கழுவும் பணி செய்தார். அப்போதெல்லாம் "மரியன்னை மடியில் வளர்த்தப்பட்ட இயேசுவையே கழுவித் துடைக்கின்றேன்" என சொல்வார்.

தனது குடும்பத்தில் சொத்து பிரிக்கும் முகமாக வீடு சென்று திரும்பி வந்தபோது "மரித்தோரை அடக்கம் செய்து விட்டேன் அவர்களைப் பற்றி திரும்ப நினைப்பதில்லை, மறு வாழ்வு பற்றியே இனி நினைக்க வேண்டும்" என்று கூறினார். இவர் இளமையிலே இறைவனோடு ஒன்றித்து நாள் முழுவதும் இறைபிரசன்னத்தில் தூய வாழ்வு நடத்தினார். நிறை கற்பு என்னும் புண்ணியத்தை கண்மணிபோல காத்து இறை பராமரிப்பில் ஆழமான நம்பிக்கை கொண்டு ஏழைகளோடு பணிவோடும், பரிவோடும் பழகுவார்.

இவர் 'இளவரசர்' என்பதால் சில காலம் சிப்பாய்களுடன் தங்கி பயிற்சி பெற்றார். அத்துடன் கெட்ட வார்த்தை களையும் தெரியாமல் கற்றுக்கொண்டார். தனது இருப்பிடமான 'காஸ்டிகிளி யோனிக்குத்' திரும்பி வந்து தான் சிப்பாய்களுடன் கற்றது கெட்ட வார்த்தை கள் என அறிந்து வேதனைப்பட்டார். முதல் நற்கருணை பெற்ற நாளிலிருந்து நற்க ருணை பெற முன் உள்ள நேரத்தை தகுந்த ஆயத்தத்திற்கும், பின்னுள்ள நேரத்தை நன்றி செலுத்துவதற்கும் பயன்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் அவரது சகோதரன் அக்கால பிரபுக்களின் வழக்கப்படி 'ஹெலனா' என்ற இளம் பெண்ணுடன் முறையற்ற விதத்தில் வாழ்ந்ததை கேள்வியுற்று அதை ஏற்கா தவறாக கோபம் கொண்டு அவருக்கு அறிவுரை வழங்கினார். அதாவது அவர் தனது சகோதரனுக்கு கூறியது "நீ அவளை விட்டு ஒழுக்கமாக வாழவில்லையானால் என் உடன் பிறந்தவனாக இருக்க முடியாது" இறை வனது வலிய கரம் உன்னை தாக்காதிருக்க செபிக்கிறேன் திறந்துவிடு" என்று கண்டிப் புடனும் அக்கறையுடனும் கடிதம் எழுதினார்.

உலகத்தாரும் ஏனைய துறவிகளும் கூட அழைப்பு வாழ்வு வாழாததை அறிந்து அவற்றிற்காக பரிகார செயற்பாட்டில் ஈடுபட்டார். எனவே இவர் எப்போது தனது வாழ் நாட்களை இறைவனுக்காகவும், நோயாளிகள், அனாதைகள், கைவிடப் பட்டோர், துன்பப்பட்டோர்க்காகவுமே அர்ப் பணித்தார். எனவே இவரின் வாழ்க்கை யிலிருந்து நாளும் பல பாடங்களை கற்க வேண்டியுள்ளது. இவரைப் போலவே தூய்மையாகவும், அர்ப்பணிப்போடும் தியாக சிந்தனையுடனும் வாழ்ந்தோமானால் எமது வாழ்வு அர்த்தமுள்ளதாய் அமையும். தொடர்ந்து வந்த காலங்களில் இவர் தனது 24 வயதை எட்டிப் பிடித்திருந்த கால கட்டத்தில் அதாவது 1590 - 91 காலப் பகுதியில் கொள்ளை நோய், காய்ச்சல், பஞ்சம் பரவியது.

இறையியல் மாணவனான அலோசியஸ் தாமே விரும்பி நோயா ளருக்காக நன்கொடைகள் பெறல், ஆடைகள் சேகரித்தல், பிச்சை எடுத்தல் போன்ற பணிகளை மனமுவந்து செய்தார். 1591.03.03 அன்று கொள்ளை நோய் காய்ச்சலுக்குள்ளான அலோசியஸ் ஏழு நாட்கள் நோயின் பிடியில் இருந்தார். ஒரு சகோதரர் மூலமாக தாய்க்கு எழுத வேண்டிய விடயங்களை ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்த பின் ஜீன் 21 இல் நற்கருணையைப் பெற்று நல் மரணம் அடைந்தார். 1726 அன்று மாணவர்களின் பாதுகாவலராக இப்புனிதர் உயர்த்தப் பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. வைலட் விஜயன்

# சிறந்த நூலொன்றின் பண்புகள்

இன்றைய காலக்கட்டங்களை பொறுத்த வரையில் "நூல்" என்பது எம் ஒவ்வொருவர் மட்டிலும் இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகிறது நூல்களானது பலத் தொகுதிகளை உள்ளடக்கி காணப்பட்டாலும் அனைவராலும் விரும்பிக் கற்க கூடிய வகையில் காணப்பட வேண்டும் அதாவது, ஒரு நூலை எழுதும் போது அதற்குரிய அடிப்படை அம்சங்களை உள்ளடக்கி காணப்பட வேண்டும் என்பதேயாகும் **"நல்ல நண்பனுக்கு அடுத்தபடியாக உள்ளது நல்ல நூல்களே"** என்ற சிந்தனைக்கமைய ஒரு நூலானது சிறப்புற அனைவரையும் கவரக் கூடிய வகையில் காணப்பட வேண்டுமாயின் அதற்குரிய அழகுகளை கொண்டு காணப்பட வேண்டும் நூலிற்குரிய பண்புகள், அழகுகள் இங்கு பத்தாக தொகுத்து கூறப்பட்டுள்ளது. எனவே அவ் அம்சங்களை சற்று நோக்குவோமாயின்,

01) சுருங்கச் சொல்லல்- அனைவரும் விளங்கக் கூடிய வகையில் சிறப்பாகவும், சுருக்கமாகவும் விளங்கப்படுத்தல்

02) விளங்க கூறல்- சந்தேகத்திற்கு இடமாகாது விளங்க வைத்தல்

03) நவின்றோருக்கு இனிமை பயத்தல்- அனைவரும் விரும்பி வாசிக்க கூடிய வகையில் நன் மொழிகளை கையாளல்

04) ஓசையுடைமை- சந்தம் இன்பமுடையதாக இருத்தல்

05) ஆழம் உடைத்தாதல்- ஆழ்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாக காணப்படல்

06) முறையின் வைப்பு- காரண காரிய முறைப்படி ஒழுங்கமைத்தல்

07) உலக மலையாமை- உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறு கொள்ளாமை

08) விழுமியது பயத்தல்- பொருளானது சிறப்பான முறையில் வெளிக் கொணரப்படல்

09) விளங்கு உதாரணத்து ஆகுதல்- விளங்க கூடிய வகையில் உதாரணங்களை அமைத்தல்

10) நன்மொழி புணர்தல்- நல்ல சொற்களை உட்புகுத்தல்

எனவே மேற் கூறியவைகளை தொகுத்து நோக்கும் போது ஒரு நூலானது சிறப்பான முறையில் அமைய வேண்டுமாயின் மேற் கண்ட அம்சங்களை உள்ளடக்கி காணப்பட வேண்டும் **"ஒரு நூலானது வாசித்தவர்களுக்கு, படித்தவர்களுக்கு இன்பம் தரக்கூடிய வகையில் காணப்பட வேண்டும்"** என்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கூற்றுக்கிணங்க சிறந்த நூல்களை தொகுத்தளிக்க மேற் கண்ட முறையினை கையாள்வோமாக



Digitized by Noolaham Foundation.
